ரிஜிஸ்டர் நெ. 2041

தனிப்பிரதி விலை | உள்நாடு 1 அணா / வெளிநாடு 1½ அணா

# குடி அரசு

| | | |
|---|---|---|
| வருட சந்தா முன்பணம் | — | ரூ 3—0 |
| 6 மாத சந்தா | ,, — | ,, 1 12 |
| வெளிநாட்டிற்கு | ,, — | ,, 4—0 |

வாரப்பதிப்பு

ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம்: அங். 1க்கு ரூ. 1
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 5 | சென்னை, சுக்கில ஐப்பசி 11௳ (27—10—29) ஞாயிற்றுக்கிழமை | மலர் 25

இந்தியாவிலும் இலங்கையிலும் நடைபெற்ற அநேக வைத்திய மகாநாடுகளிலும், மருந்து கண் காட்சிகளிலும் முதல்தரமான மருந்துகளென்று அநேக தங்கபதக்கங்கள் பரிசு பெற்றவரும், வைத்திய சிம்ஹம், வைத்திய பூபதி, வைத்திய ஆசிரியர், ஸ்பெஷலிஸ்ட் என்ற பல பட்டங்களைப் பெற்றவருமாகிய,

## டாக்டர் டி. சி. சிங்காரம்

அவர்களால் தயார் செய்யப்படும் பிரசித்தி பெற்ற மருந்துகள்.
(ஓர் யோகீஸ்வரரின் அநுபவமுறைப்படி தயார் செய்யப்படுவது.)

### ஆச்சரியமாய் அநேக நோய்களை குணம் செய்கிறது.

### மஹா சந்தனாதி தயிலம்

உலகப் பிரசித்தி பெற்றது

கண் பார்வை குறைவாயிருந்த அநேகருக்கு இத்தயிலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

இத்தயிலத்தால் குணமாகும் நோய்கள்

| | |
|---|---|
| கண் எரிச்சல் | வெட்டை சூடு |
| கண் சிவப்பு | காது நோய் |
| கண்ணில் நீர் வடிதல் | மண்டை இடி |
| கண் அரிப்பு | பீனிசம் |
| கண் பார்வைக்குறைவு | தலைமயக்கம் |
| கண் கூச்சம் | தலைப்பொடுகு |
| கண்ணில் பீளைசாருதல் | சொறி சிரங்கு |
| மேகநீர், வெள்ளெழுத்து | தலைமயிர் உதிர்தல் |
| ஒருத்தலை நோய் | நாள்பட்ட தலைநோய் |
| கைகால் எரிச்சல் | முதலிய பல வியாதிகளை |
| மூலச்சூடு | ஆச்சரியமாய் குணம் செய்யும். |
| அல்திகாய்கை | |

### சாலாமிசிரி லேகியம்

சிறந்த தாதுபுஷ்டி மருந்து!

மிகுந்த பலத்தையும் வீரிய விருத்தியையும் உண்டாக்கும்.

இந்த லேகியத்தை சாப்பிட்டு வந்தால் கைகால் அசதி, இடுப்பு வலி, பலக்குறைவு, ஆயாசம், நரம்புத்தளர்ச்சி, சொற்பன ஸ்கலிதம், சம்போக காலத்தில் ஏற்படும் துரிதஸ்கலிதம் முதலிய கொடிய வியாதிகளைப்போக்கி குறைந்த ஆண் தன்மையை அதிகரிக்கச்செய்து, தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி, வீரியத்தை விருத்தி செய்து நல்ல திடகாத்திர சரீரத்தை உண்டாக்கும். மனதுக்கு உற்சாகத்தையும், சுறு சுறுப்பையும் கொடுக்கும். எவ்வளவு கடின வேலை செய்தாலும் யாதொரு களைப்பும் உண்டாகாது. சம்போக இன்பத்தை முற்றிலும் அநுபவிக்கச்செய்யும். சாப்பிட மதுரமுள்ளது. பத்தியமில்லை.

ஒருசேர் டப்பி விலை ரூ. 2—8—0

சரீரத்திலுள்ள எவ்வித உஷ்ணத்தையும் நீக்கி குளிர்ச்சியைக்கொடுக்கும். ஒரு முறை இத்தயிலத்தை உபயோகித்தவர்கள், அவர்களே மற்றவர்களுக்கும் சிபார்சு செய்து வருகிறார்கள். இதன் உண்மையை நீங்களும் ஒரு முறை பரிக்ஷித்துப்பார்க்கவும். ஆண், பெண் யாவரும் ஸ்நானம் செய்யலாம்.

24 அவுன்ஸ் டின் விலை ரூ. 4—0—0 12 அவுன்ஸ் டின் விலை ரூ. 2—2—0

பாக்கிங், தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும்.

டி. சி. சிங்காரம் அண்டு கோ.,

(38) தெப்பக்குளம் போஸ்டு, திருச்சினாப்பள்ளி.

### பகுத்தறிவு

கூடிய விரைவில் " குடிஅரசு " பதிப்பகத்தாரால் வெளிவரப் போகும் மாதப்பத்திரிகை.

இதில் பகுத்தறிவில் சிறந்த பல அறிஞர்களின் கட்டுரைகளும் 'சித்திரபுத்திரன்' வேடிக்கை சம்பாஷணைகளும் ஏராளமாக வெளி வரும். இப்பொழுதே ஆயிரத்துக்கு மேற்பட்ட சந்தாதாரர்கள் முன் பணம் அனுப்பித் தங்கள்பெயரைப் பதிவு செய்திருக்கின்றனர். வருடசந்தா அணா 0—8—0 எட்டே. வெளிநாடுகளுக்கு 0 12 0.

(எப்) விலாசம் :— " பகுத்தறிவு " காரியாலயம், 14, மவுண்ட்ரோட், சென்னை

கடவுள் கடவுளென
காசைத்
தொலைக்காதே

ஏழு தலைமுறை பரம்பரை சமஸ்தான வைத்திய நிபுணர்! பழனி சித்தவைத்திய சங்க அமைச்சர்!! தமிழ் சித்த வைத்திய கான்பரன்ஸ்களில் முதல்தர தேவ ஔஷதங்களென முதல்தர தங்கமெடல்களும் வைத்திய ஆசிரியர் பட்டமும் பெற்றவர் !!! மூப்பு சேர்ந்த மருந்துகள்.

நீங்கள் என்று மழியாத இளமைப்பருவத்தை அடையவேண்டுமானால் பழனி சி. எம். சாமி

# மகா வீரிய தங்க பஸ்பம் சாப்பிடுங்கள்

தாதுபுஷ்டியில் மன்மதனுக்கோப்பாவீர்கள். பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்திரவாதம்.

தாது புஷ்டியில் நிகரற்றது. மகான் அருளால் கிடைக்கப்பட்டது. வெள்ளை, வெட்டை, கடுப்பு, பவுத்திரம், மூலம், நீரழிவு, க்ஷயம், இருமல், கபக்கட்டு, குன்மம், சூலை முதலிய வியாதிகளும் நீங்கும். அழிந்துபோன ஆண்மையையும் இழந்த பலத்தையும் இல்லற வாழ்வில் இன்பத்தையும் கொடுத்து, ஊக்கத்தையும் உற்சாகத்தையும் தந்து தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி வயோதிகனை வாலிபனாக்கி சதா பரமானந்தத்தைக் கொடுக்கக்கூடிய அபூர்வ சக்தி இதற்கிருப்பதால் இதன் அரிய குணத்தைக் கண்டு ஆச்சரியப்படாதவர்கள் ஒருவருமில்லை. ஒரு முறை உபயோகித்தால் உண்மை விளங்கும்.

48 நாள் பஸ்பம் ரூபா 20—0—0. 24 நாள் பஸ்பம் ரூபா 10—0—0.

## குரு அப்ரேக் செந்தூரம்-நீரழிவுக்கு.

ஜாஸ்தி போகும் நீரையும், நீரிலுள்ள சர்க்கரை சத்தையும் குறைத்து தாகத்தை நிறுத்தி தேக வெளுப்பை மாற்றி ரத்த விர்த்தியையும், தேக புஷ்டியையும் தரும். சகல மேகமும் க்ஷய ரோகமும் நீங்கும். தனுக்கற்றது. 24 நாள் புட்டி 1-க்கு ரூ.15.

## குருதாளக பஸ்பம்-இருமலுக்கு

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் சரி, 8-வித காசமும் அவசியம் தீரும். அனுபவத்தில் கைகண்டது. 24 நாள் புட்டி 1-க்கு ரூ. 8.

ஏராளமான நற்சாட்சிகளைக் கேட்லாக்கில் பார்க்கலாம்.

அந்நிய தேச வாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன்பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

**வைத்திய ஆசிரியர் C. மலையப்பசாமி,** நித்தியானந்த மெடிக்கல் ஹால், பழனி, S.I.



ரூ. 2-15-0 ரூ. 2-15-0

## பௌண்டன் பேனா

நீங்கள் கனவிலும் நினைக்கமுடியாத குறைந்த விலை!

இங்கிலாந்தில் செய்து மாக்ஷிமை தங்கிய 5-ம் ஜார்ஜ் சக்கரவர்த்தியால் புகழப்பெற்றுப் பிரக்யாதியடைந்த ரிஜிஸ்டர்டு W. B. பவுண்டன் பேனா, தங்கப்ளேட் நிப்பு போட்டது. இதை வாங்குபவர்களுக்கு எக்காலமும் ஓடக்கூடிய மூன்று வருஷம் உத்தரவாதமுள்ள லீவர் பாக்கெட் வாட்சு இனாமாய் அனுப்பப்படும்.




W. B. பவுண்டன் பென் விலை ரூ. 2-15-0. இதற்கு மேற்சொல்லிய பாக்கெட் வாட்சு இனாம். ஒரே காலத்தில் இரண்டு பேனாக்களுக்கு ஆர்டர் கொடுத்தால், பாக்கெட் வாட்சுக்குப் பதிலாக ரோல்டு கோல்டு ரிஸ்டு வாட்சு எந்த ஷேப் வேண்டுமோ இனாம்.

(30) The Laxmi Trades Co., Sowcarpet, Madras.



## A GOLD PLATED *LEVER* WRIST WATCH FOR. Rs. 6—14—0.



எங்கள் ரிஜிஸ்டர்டு ரோல்டு கோல்டு "ப்டோ" லீவர் கைக்கடியாரம் பார்வைக்கு அழகாயிருக்கும், சரியான டைம் காட்டும். சிலிண்டர் கடியாரங்களைப்போல் கொஞ்ச நாளைக்குள் நின்று போவதல்ல. 5 வருஷமல்ல, 10 வருஷங்கள்கூட ரிப்பேர் இல்லாமல் போகக்கூடிய கடியாரம். இதை வாங்குவோருக்கு ரோல்டு கோல்டு கடிகார கைச்சங்கிலி இனாமாகச் சேர்த்து அனுப்பப்படும். மேற்படி கடியாரத்துக்கு இங்கிலாந்தில் செய்து மாட்சிமை தங்கிய 5-ம் ஜார்ஜ சக்ரவர்த்தியால் புகழப்பட்ட பௌண்டன் பேனா தங்க பிளேட் நிப்பு போட்டது ஒன்று (ரூ. 3-0-0 மதிப்புள்ளது) 15 நாட்கள் வரை இனாமாகவும் அனுப்பப்படும். வாங்கிக்கொண்ட ஒருவாரம் வரை சரியாக ஓடவில்லை யென்றால் வாபஸ் ஒப்புக்கொள்ளப்படும். 5 வருடம் காரண்டியுடன் அனுப்புகிறோம். இனாம் சங்கிலியுடன் கடியாரம் விலை ரூ. 6-14-0. உடனே எழுதுங்கள்.

லக்ஷ்மி டிரேட்ஸ் கம்பெனி

தங்கசாலைத் தெரு, பட்டணம்



# தமிழரசு

## ஒரு புதிய அரிய வாரப் பத்திரிகை

சென்னையினின்று விரைவில் வெளிவரும்.

உலக முழுவதும் நடைபெறும் அரிய இனிய நிகழ்ச்சிகளை உள்ளபடி உணர்த்தும்; அறிவை வளர்க்கும் பெரிய உண்மைகளை அழகிய முறையில் தெள்ளிய செந்தமிழ் நடையில் நன்கு புகட்டும்; அரசியல் துறையில் தனக்குத் தோன்றியவற்றை அவா அச்சமின்றி எடுத்து உரைக்கும்; சமுதாய சீர்திருத்தத்தில் யாவரும் நன்மையடையத்தக்க கொள்கைகளைச் செவ்வனம் விளக்கும்; சமயக் கோட்பாடுகளை ஆராய்ச்சி முறையில் இனிது கூறும்; ஆசார சீர்திருத்தம், தத்துவஞானம், செந்தமிழ் அறிவு இவற்றைப் புதிய வகையில் எளிய நடையில் இனிய அமைப்பில் துலக்கும்; வியாபார நுணுக்கங்களை அவ்வப்போது விரிக்கும். வைத்திய நுட்பரிட்பங்களை வகுத்துக் காட்டித் தெரிகும்; இதனைப் படிப்போர் தமிழறிவு, சமயசாத்திர ஞானம், ஆசார சீர்திருத்த உண்மைகள், அரசியல் முறை, உலக நடை முதலியவற்றை ஒழுங்காக உணரலாம்.

இதன் ஆசிரியர் சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழாசிரியர் திருவாளர் மணி. திருநாவுக்கரசு முதலியார் அவர்கள் பத்திரிகை உலகத்திலே அரிய பல கட்டுரை வளர்ந்து சிறந்து விளங்கும் டாக்டர் திருவாளர் எம். மாசிலாமணி முதலியார் அவர்களும் தேர்ந்த தமிழ்ப் புலவர்களும் ஆங்கில வித்துவான்களும் பிறரும் ஆராய்ந்து எழுதும் உயர்ந்த கட்டுரைகள் இதன்கண் திகழும்.

முந்துங்கள்! முந்துங்கள்!! முந்துங்கள்!!!

வேண்டுவோர் கீழ்வரும் விலாசத்துக்கு எழுதுவார்களாக.

| | |
|---|---|
| வருட சந்தா | உள்நாடு ரூ. 3-0-0 |
| | வெளிநாடு ரூ. 4-0-0 |

**'தமிழரசு' காரிய நிலயம்,**

31, வைத்தியநாத முதலி வீதி,

சென்னை.

(65)

# மதமாற்றத்தின் காரண விளக்கமும் ஆராய்ச்சியும்

(கைவல்யம்)

நமது கண்டத்தின் மத்தியில் மனிதர் குடியிருந்த நாட்டிற்கும் அதன் மேல் இடைவிடாமல் எதிர்கொண்டு வந்த பாலைவனத்து மணலுக்கும் சண்டை நடந்தது. உயிரும் அழகுங் கொண்ட நாட்டை மணல் அழித்து விட்டதுபோல் ஜாதிக்கொடுமைஜனத்தை அழித்து விட்டது. மனுஷியப் பொது ஜன உத்தம லக்ஷியங்களைப் பரவச்செய்தல் முக்கியமில்லையென்ற எண்ணத்திலிருந்து ஜாதியின் இறுமையை வளர்ப்பதாகிய கல்நெஞ்சசம்பிரதாயம் நம் நாட்டில் பலமடைந்து இந்த சம்பிரதாயமே நமது நாட்டில் கையேறி நின்றதால் நமது ஜன சமூகம் இகத்திற்கும் பரத்திற்கும் உதவாமல் சீரழிந்து நமது நாடும் சீர்கெட்டது. இதுவே மதமாற்றத்தின் முதற்காரணம்.

ஒரு சமூகத்தின் ஒற்றுமை உணர்ச்சி விழிப்படைந்து, அதன் தற்காப்பு சிந்தையை ஆதிக்க முடையதாகச் செய்வதற்கு, அந்த உணர்ச்சி ஜாதியில் எப்போதும் சாகாதபடி செயற்கை உபாயங்களால் காக்கப்படுவது எந்த தேசத்திலும் இந்த உலகமுண்டான நாள் முதற்கொண்டு நடந்து வருகின்றது. ஆனால், நமது நாட்டில் மட்டும் நமது சமூகத்தை நாமே கடவுள் பேராலும் சமயக்கொள்கையாலும் இகழ்ந்து, அவர்களிடம் நன்மை பிறப்பதைத்தடுத்து அவர்களை உலகம் இகழவும் நம்மைப் பிறர் துன்புறுத்தவும் அதைச் சகிக்காமல் அன்னியர் காலில் அடைக்கலம் புகவும் நமக்கேற்பட்டதுபோல, எந்த நாட்டிலும் எந்த ஜாதியாருக்கும் ஏற்பட்டிருக்கவில்லை. இதுவேஇரண்டாவது காரணம்.

எந்த நாட்டிலும், பாஷையிலும், சரித்திரத்திலும், மனுஷிய ஜாதியின் பரம ஐக்கியத்தையும் அன்பின் ஆழ்ந்த பந்தத்தையும் நாம் அநேக காலத்திற்கு முன்னே அங்கீகரித்ததுபோல் வேறு யாரும்அங்கீகரிக்கவில்லை என்று எடுத்துச் சொல்லுவதில் பெருமையடைகிறோம். சாந்தியம் தரும சிந்தையு முடையவர்களான நமது பெரியவர்கள் பாரமார்த்திகங்களின் பொருட்டு காட்டில் கூடின முக்கிய நான்கு முனிவர்கள் காலத்தின் கணக்கைக் கண்டுபிடிக்கவும், அவர்கள் எச்சாதியரைச்சேர்ந்தவர்களென்றும் அவர்களுக்கு எந்த பாஷையில் சிவபெருமான உபதேசித்தாரென்றும் பண்டிதர்கள் ஆராய்ச்சியும் செய்கிறார்கள். நமது முன்னோர்களின் வீர ஆண்மையின் உதயகாலத்தில் நமது வானத்துத் தெய்வங்கள் மண்ணை நெருங்கி வந்து நம் கூடக் கூடிக்குலாவினதையும் அந்தக் காலத்தில் நமது நாட்டு மனிதர்கள் தமதாத்மாவிலும் ஜகத்தைப் பிரகாசப்படுத்திய பரமாத்மா விளிடத்திலும் நம்பிக்கொண்டிருந்த காலத்தை வர்ணித்துக்கொண்டேயிருக்கிறோம். இவ்வழியே நமது படிப்பும் அதன் சந்தோஷமும் ஆராய்ச்சியும் பிரசங்கமும் போய்க்கொண்டிருக்கிறதே யல்லாமல், சமயக்கொடுமையால் நமது சமூகம் சீரழிக்கப்படும் குற்றத்தை நாம் உணரவில்லை. யாராவது சொல்லக்கேட்டு விவகாரத்தில் ஒத்துக் கொள்ளுகிறோம். பின் அதை அலட்சியமாய் விட்டுவிடுகிறோம். அதனாலுண்டாகும் பாவத்திற்குப் பயப்படுவதில்லை நமது சமூகத்து மனித ஜாதியை அவமதித்து இகழ்ந்து வந்ததைப்பற்றியும் வருவதைப்பற்றியும் நாம் கவலைப்படுவதே யில்லை. நாம் வலிமையைக் கண்டஞ்சும் நமது பலக்குறைவினால் நாம் மதிசோர்ந்து நமது சமூக உயர்ந்த ஜாதிகளின் உத்தம ஒழுக்கங்களை யெல்லாம் விட்டு அதற்குப் பதிலாக அதிகார உயர்விற்கும் செல்வப் பெருக்கிற்கும் குருட்டுத்தனமாக இப்பொழுது கண்முன் நிற்கும் நாகரீகங்களைக்கண்டு குருட்டுத்தனம் காட்டும் கொள்கையே மூன்றாம் காரணம்.

ஆங்கிலேய ஜாதியானது தனது நல்லரசாட்சியின் அமைப்புக்களிடையே நம்மை பலயீனராய், தற்காப்புத் தெரியாதவராய், நமது நாட்டுக் கோடானுகோடி ஜனங்களை உயிருடன் அடங்காமல் தலையெடுத்திருக்கும் இதர ஆசியா தேசத்தினிடையே விட்டு விட்டால் இந்த நிராதரவான ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் தமக்கு முடிவின்றி நேரும் துன்பங்களுக்கு யாரை நோவர் என்ற கேள்விக்கு ஆங்கிலேயர்களையும் அவர்கள் ராஜாங்கத்தை நடத்துகிறவர்களையும் நோவர் என்பது தானே பதில். எப்போதும் மாறுகிற பூலோக சரித்திரத்தில் இந்தியாவின் ஆங்கிலேய ராஜ்ய சரித்திரம் மாத்திரம் எக்காலத்திலும் மாறுமலிருக்குமென்று வைத்துக் கொண்டாலும், சாதுக்களாய் சாசுவதச்சிறுமையில் பிணிப்புண்ட மனத்தினராய் அதிகாரமின்றி குறுகியிருக்கும் நம்மைக் கண்டு அன்னியரின் இச்சை எப்படிநமது நாட்டை நினைக்காதோ அதுபோல, உண்மை தத்துவங்களுக்கு ஆதாரமான நமது சமயங்களின் மத்தியில் நமது சமயங்களைப் பற்றி ஒன்றும் தெரியாதவர்களாய் நமது கடவுளை நினைக்க அவர் சந்நதியில் நுழைய முடியாதவர்களாய் நம்மண்டையும் நமது சமயத்தண்டையும் நெருங்க முடியாமல் விரட்டி அடிக்கப்பட்டவர்களாய் பொதுப் பள்ளி, கிணறு, ஆறு, குளம், அங்காடி அரண்மனைக் கச்சேரி, தபால் முத்திரை விற்குமிடம் இவைகளிலெல்லாம் அண்டவிடாமல் ஓட்டித் துரத்தி அடித்துத் துன்புறுத்தி அஷ்ட மிருகங்களை ஈட்டி, வாங்கு, வலை, துப்பாக்கி, பிலின், கவலை, முதலியவைகளால் அலைப்பதுபோல் பார்க்கப் படாமலும் தொடப்படாமலும் கிட்ட நெருங்கப்படாமலும் பசிக்குப் பலருடன் சேர்ந்து வேலை செய்யத்தொழில் கொடுக்கப்படாமலும், குளிக்கவும் குடிக்கவும் தண்ணீர் கொடுக்கப்படாமலும், கோழி கூவும் காலையிலிருந்து கொண்டோனை எதிர் பார்க்கும் மாலை வரையிலும் உழைத்து விட்டு குடிசை திரும்பும் தீண்டாதாரின் பசிப் பிணிக்குக் கருணை செலுத்தப்படாமலும், இன்னும்பலவாம் நமது கொடுமைகட்கு ஆளாய்கிடக்கும் கோடிக்கணக்கான ஜனங்களை தேசாபிமானத்தாலும், மதாபிமானத்தாலும் பொதுக் கல்வியிலும் முன்னேற்றமடைந்து தம் தம் கொள்கைகளை உண்மையெனச் சாற்றி வந்த சமய வாதிகளின் கட்சி வாதங்களைப் போக்கி மூடப்பிடிவாதக் கொள்கைகளைப்புத்தியால் நீக்கி, ராஜாவிலிருந்து கூலியாள் வரையிலும் சட்டத்திலும் கடவுள் வழிபாட்டிலும் உண்டி, உடை, ஆசனம் முதலியவைகளிலும் சமத்துவம்சகோதரத்துவம் காட்டி நம்மைச்சூழ்ந்து வரும் சமயங்களிடை விடப்பட்டிருந்தால் அவர்கள் யாரை நோவர் என்னும் கேள்விக்கு, நமது சமயமும் அதற்கு அதிகாரியா யிருப்பவர்களுமே என்பதுதான் பதில். இந்த நிலைமையில் நமது சமூகங்களை நாம் வைத்துக்கொண்டிருப்பதே மதமாற்றத்திலுள்ள எல்லாக் காரணங்களுக்கும் முக்கிய காரணம்.

இந்த மதத்தின் கர்த்தாக்களுக்கோ, அதன் ஆதிக்கத்தை வகிப்பவர்களுக்கோ, சைவப் பெரியார்களுக்கோ, வைணவ பாகவதர்களுக்கோ, சுயமரியாதைச்சங்கங்களைப் பகைக்கும் சமய வாதிகளுக்கோ, இந்த மதத்தை விட்டு அன்னிய மதத்தில் பிரவேசிக்கும் நமது ஏழைகளைப் பற்றின கவலை எவ்வளவிருக்கிறது. அதனால் ஏற்படும் நன்மை தீமைகளைக்கவனிப்பவர்தானுண்டா? ஆங்கிலமோ, தமிழோ, சமஸ்கிருதமோ படித்துப் பண்டிதனானவர்களில் எத்தனை பேர்கள் மதமாற்றத்திற்கு ஆதாரமானவைகளைப் போக்குவதற்கு முன்நிற்கிறார்கள்? இதைப் பற்றிக் கவலை கொண்டவர்களைத் தூற்றுவதற்கும் நாஸ்திகர்களாக்குவதற்கும் இங்கிலீஷ் சட்டம் பட்டம் பெறாதவர்களும் பல பத்திராதிபர்களும் புறப்படுகிறார்களே? இதைவிட ஞாயத்தில் குறைவு வேறு என்ன வேண்டும்? சைவ உலகம் போய்விடுமென்பாரும், சமய ஒழுக்கம் தடைப்பட்டுவிடு மென்பாரும், ஜாதி உயர்வின் மேன்மைக்குப் பங்கம் வந்துவிடுமென்பாரும், இவைகளைக்கொண்டே ஆராய்ச்சி செய்வாரும், அந்த ஆராய்ச்சிக்கு மதிப்புரை எழுதும் வித்வப் பெரியாரும் நிறைந்து, தன் குடிசையின் சுற்றளவில் தன்னறிவை நிறுத்தித் தன்னைப்பற்றிமட்டும் பெரிதாக நினைத்துக்கொண்டிருப்பவர்களு மிருக்கிறார்களே ஒழிய, தன் சமயத்திற்கும் தன் பின் சந்ததியாருக்கும் வரும் உபத்திரவங்களைப்பற்றிக் கவனிப்பவர்கள் எத்தனை பேர்களிருக்கிறார்கள் என்பதை வாசகர்களே! நீங்கள் கவனித்துப் பாருங்கள்.

காங்கிரசாரே தீண்டாமையைப் போக்குவது நமது கொள்கை என்று வடதேசத்தில் பேசப்படுவதையே இவ்விடத்துக் காங்கிரஸ்வாதிகளும் சொல்லுகிறார்களேயல்லாமல் அதற்காகச் செய்யும் பிரயத்தினமென்ன? இவ்விடத்து காங்கிரஸ் வாதிகளின் வார்த்தை தீண்டாமையைப்பற்றி அபிவிர்த்தியேயல்லாமல் பணம் ஏற்றுக்கொண்டு அதற்காக வருத்தப்படுகிறதா? புதிய சீர்திருத்தத்தில் உத்தியோகங்களை ஏற்றுக்கொள்ளுவதிலே நம் நாட்டுக் காங்கிரஸ் முனைந்து நிற்கிறது. ஜஸ்டிஸ் கட்சியோ புதிய சீர்திருத்தத்தில் எட்டு மந்திரியோ ஒன்பது மந்திரியோ வந்துவிடுமென்று அதையடைய வேண்டிய விஷயங்களுக்கு கவனத்தைச்செலுத்துகின்றது. ஜில்லாபோர்டு பிரசிடெண்டுகளும். பழையமந்திரிகள், புதிய மந்திரிகள், சட்டசபை மெம்பர்கள், இன்னும் பலதலைவர்கள் அதற்கு வேண்டிய விவகாரங்களைச் சரிப்படுத்தப் பாடுபடுகிறார்கள்.

ஜமீன்தார்களும் மிராஸ்தாரர்களும் மழைபெய்தாலும் பெய்யாவிட்டாலும், விளைந்தாலும் விளையாவிட்டாலும், சாகுபடிக்கு அதிகச்செலவானாலும் குடித்தனக்காரர்களை கசக்கிப் பிழிந்து புதுமாடல் மோட்டார் வாங்குவதிலும் இங்கிலீஷ் நாகரீகத்தின் விளையாட்டிலும் காலத்தையும் பொருளையும் போக்குவதற்கே அவர்கள் காலமும் பொருளும் போதாமலிருக்கிறது. பார்ப்பனர்கள் தெட்சிணை வாங்கிக் கொள்ளுகிறார்கள். படிப்புக் கற்றுக்கொடுப்பதை விட்டு இங்கிலீஷ்படித்து அதனால் பெரிய அதிகாரமும் பொருளுமடைந்து இங்கிலீஷ் நாகரீக சுத்தநீள பாட்டையை சுத்தப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். மேற்குலத்தார் என்னப்பட்டவர்கள் பொது ஜனங்களின் மதிப்பை வேண்டுகின்றனர். அதற்குக் கைமாறு காப்பில்லை. நமதுசடங்குகள் வீண் செலவுக்குந்தும் சிநேகவழி குறைந்தும் வேஷயந்திரமாக விருக்கின்றது. அதைச் சொன்னால் நம்மில் சில பண்டிதர்கள் சமயம் போய் விடுமென்கிறார்கள்; சாஸ்திரிகளோ பாரமார்த்திகத்தினவழிதூர்த்து போய்விடுமென்கிறார்கள். குருக்களின் சிஷ்யர்களும் மடத்துச் சர்வாதிகாரிகளும் குருக்களைக் கொள்ளைபடிக்கும் துணையாகக்கொண்டேயிருக்கிறார்கள். அக்கொள்ளைக்கு உத்தியோகஸ்தர்கள், வியாபாரத

(தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க)

# இதிகாசங்கள்

## இராமாயணம்—கிஷ்கிந்தா காண்டம்

கட்டுரை—10

(திரு: சந்திரசேகரப் பாவலர்)

**சருக்கங்கள் 58 முதல் 67 முடிய:—**

சம்பாதி கண்ணீர் பெருக்கி, "சடாயு என்னுடைய தம்பி; எனக்கு இப்போது அவனைக்கொன்ற இராவணனைப் பழிவாங்க ஆற்றலில்லை. நானும் சடாயுவும் ஒருவரையொருவர் வெல்லக்கருதி உயரப்பறந்தோம்; சூரிய வெப்பத்தால் சடாயு வருந்தினன்; அவனை என் சிறகுகளால் மறைத்துக் காத்தேன்; அதனால் வெப்பந் தாங்கமாட்டாமல் என் சிறகுகள் எரிந்துபோக நான் இங்கே விழுந்தேன்; அது முதல் சடாயுவைப்பற்றிய செய்தி எனக்குத்தெரியாது" என்றான். அங்கதன் இராவணனைப்பற்றி வினவினான். சம்பாதி, "ஒருநாள் இராவணன் ஒரு பெண்ணைத் தூக்கிப்போனான்; அவள் இராமா இலக்குவனா என்று கூவி நகைகளைக் கழற்றி எறிந்தனள்; அவன் சீதையை இங்கிருந்து நூறு யோசனைத் தூரத்திலுள்ள இலங்கையில் வைத்திருக்கிறான்; நீங்கள் போய் அவளை மீட்டுக்கொண்டு வாருங்கள்" என்று கூறி அவர்கள் உதவியால் கடலில் தம்பிக்கு நீர்க்கடன் கழித்தது. சாம்பவன் சீதையைத் தூக்கிச்சென்ற விவரம் கேட்க, சம்பாதி "கேளுங்கள்; ஒருநாள் என் மகன் உணவில்லாமல் திரும்பி வந்தான்; நான் கண்டித்தேன்; அதற்கு அவன் தான் அன்று ஒருபெண்ணைத் தூக்கி வந்த இராவணனை அப்பெண்ணோடு கொன்றுவர எண்ணினதாகவும், அப்பெண்ணைத் தூக்கிச் சென்றவன் பணிந்து விடைபெற்றுச் சென்றதாகவும், அதனாலேயே உணவில்லாமல் வந்ததாகவும் கூறினன். இதனாலும் இராவணனே தூக்கிச் சென்றான் என்பதை அறிந்தேன். முயற்சியை விடாதீர்கள்" என்று கூறிற்று. அப்போது சம்பாதிக்கு இறகுகள் முளைத்தன. அதனால் அது மகிழ்ந்து 'நான் சிறகற்று இந்த மலையில் விழுந்தேன். இங்கே நிசாகர முனி தவமியற்றினன். அவனுக்கப்புறமும் நான் எண்ணாயிரம் ஆண்டுகளாக இங்கே வாழ்ந்தேன். அம்முனிவன், ஒருநாள் நானும் சடாயுவும் மனித உருவுடன் அவனை வணங்கியதை நினைப்பூட்டியதோடு என் சிறகற்றுச் செய்தியறிந்து சீதையை இராவணன் தூக்கிச் செல்வானென்றும், சீதை பட்டினி கிடப்பதை யறிந்து இந்திரன் அவளுக்கு அமுதம் அனுப்ப அவள் உண்டு ஓராண்டுவரை பசியாதிருப்பாள் என்றும், வானரர் இங்கே அவளைத் தேடி வருவார்களென்றும், நான் அவர்களிடம் நடந்ததைக் கூறவேண்டுமென்றும், அப்போது எனக்கு சிறகு முளைப்படியும் முளைக்குமென்றும் சொன்னான். மூன்று சீதையைக் கண்டு பிடியுங்கள்' என்று கூறிப் பறந்துபோயிற்று.

மறுநாள் அங்கதன் சபை கூட்டிக் கடலைத்தாவ ஆலோசித்தான். பலரும் தங்களால் இயலாதென்று கூறிவிட்டனர். அங்கதன் தான் போகிறேனென்ன, சாம்பவன், "அரசனாகிய நீ போதல் தக்கதன்று; நீ எங்களை ஏவுவதே போகவேண்டும்" என்றான். அங்கதன், "ஒருவரும் போகவில்லையென்றால் என் செய்வது? தக்கானைத்தேடு." என்றான்.

சாம்பவன் தனியிருந்த அனுமானை நோக்கி, "வல்லமையுடையோய்! வானர வீரனாகிய கேசரியின் மனைவி அஞ்சனையென்பாள்; அவள் குஞ்சரன் என்ற வானரனுக்கு மகள்; அவள் மனித உருவுடன் ஒருநாள் உலாவ காற்றரசன் அவளுடைய வெண் பட்டை அவிழ்த்து அவளைக் காமத்துடன் இறுகத்தழுவி அவளை கருக்கொள்ளச் செய்தான். அவள் தன்னைக் கெடுத்தபாவி யாரென்ன, வாயு நிகழ்ந்தது கூற, அவள் மகிழ்ந்தாள். அவள் பெற்ற பிள்ளையே நீ; பிறந்தவுடன் நீ சூரியன் மேல் பாய, இந்திரன் வச்சிரத்தால் உன்னை அடிக்க, உனது இடது அனு கன்னம் ஒடிந்து விழுந்தாய் அதனால் அனுமான் எனப்பெயர் பெற்றாய். அது கண்டு வாயு சினம் கொள்ள நான்முகனும் இந்திரனும் உனக்கு வரம் தந்தனர். ஆதலின் நீ கேசரியின் க்ஷேத்திரத்தில் வாயுவுக்குப் பிறந்தாய். அதனால் நீ கேசரிக்கு க்ஷேத்திர புத்திரன். வாயுவுக்கு ஔரச புத்திரன். இவ்வளவு பெருமையை உடைய நீயே கடலைத் தாண்டவேண்டும்" என அனுமானைப் புகழ்ந்தான். அனுமானும் அதற்கு இணங்கித் தனது பெருமைகளை மிகைபடப் பேசி வளர்ந்தான். சாம்பவன் மறுபடியும் அவனைப் புகழ, அனுமான் தன் வேகத்தைத் தரை தாங்காதாகையால் கடலைத் தாண்டும்பொருட்டு மகேந்திர மலையில் ஏறி நின்றான். இவ்வரலாற்றை ஆராய்வோம்.

சம்பாதியும் சடாயுவும் ஒருவரோடொருவர் போட்டி போட்டு விண்ணில் பறந்தனராம்! சூரியனை அணுகினால் வெப்பம் தாக்கும் என்ற உணர்ச்சிகூட அவர்களிடம் இல்லை போலும்! இவர்களுடைய தந்தையாகிய அருணன் சூரியனுடைய தேரை ஓட்டிப் போகிறவனாயிருக்க, சூரியன் கொஞ்சமும் அருளில்லாமல் இவர்களைக் காய்ந்தனனே! அருணன் நொண்டி. இவன் இரவும் பகலும் ஓயாமல் சூரியனுடைய தேரைச் செலுத்திக்கொண்டே யிருக்கவேண்டும். அவ்வாறாக இவன் இந்த இரண்டு பிள்ளைகளை எவ்வணம் பெற்றெடுத்து வளர்த்தானோ? எல்லாம் வியப்பே!

சம்பாதிக்கு ஒரு மகன் இருந்தனனாம். அவன் நாடோறும் பல உயிர்களை அடித்துக்கொன்று சம்பாதிக்குக் கொடுத்து வந்தனனாம். இவர் தம் அருள் ஒழுக்கம் மிக அழகியதே!

சம்பாதியை உயிர் விடாமல் எண்ணாயிரம் ஆண்டுகளிருந்தால் இராம தூதரைக் கண்டவுடன் சிறகுகள் முளைக்குமென நிசாகர முனிவன் கூறினனாம். இந்திரன் சீதைக்கு அமுதம் அனுப்புவானென்றும், அதை அவள் உண்டு பசியாதிருப்பாளென்றும் அம்முனிவன் கூறினனாம். மிகவும் உத்தமோத்தமனாகிய இந்திரனிடமிருந்து வந்த அமுதத்தைச் சீதை வாங்கி உண்ணவேண்டியது அவசியமே! இவ்வொழுக்கமும் அழகியதே.

ஒருவனுக்கு ஓர் உறுப்புக்கேடடைந்து விட்டால், அவன் இளைஞனாயின் அது விரைவில் பொருந்தி விடும்; வயதாய் விட்டால் பொருந்துவதில்லை. மிகக் கிழப்பருவத்தை உடைய சம்பாதிக்கோ சிறகு எரிந்து எண்ணாயிரம் ஆண்டுகளுக்கப்புறம், அதுவும் வானரர்களைக் கண்டவுடன் வளர்ந்ததாம்! என்னே விந்தை! இதனினும் வியப்பு நிசாகர முனிவன் இந்நிகழ்ச்சியை எண்ணாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே அறிந்ததுதான்!

காற்றவாயனுடைய தகாத செயலைப் பாலகாண்டத்தில் கண்டோம். அங்கே அவன் அரசனுடைய நூறு பெண்களைத் தன்னை மணக்க இசையாத குற்றத்திற்காக முடமாக்கிய தீய செய்கை காணப்பட்டது. அதைப் போலவே இங்கே உலாவிச் சென்ற அஞ்சனையை அவளுடைய விருப்பமில்லாமலே தழுவிக் கருவுண்டாக்கிய தீய செயல் காணப்படுகின்றது. அப்பெண் தன்னைச் சேர்ந்தவன் காற்றரையனென உணர்ந்ததும் மகிழ்ந்தனளாம். அவ்வுத்தமி தன் கணவனாகிய கேசரியை விடுத்து அந்நியனாகிய காற்றைக் கூடிப்பெற்ற பிள்ளையே அனுமான்! கேசரிக்கு அனுமன் க்ஷேத்திர புத்திரனாய் அதாவது அவனுடைய க்ஷேத்திரத்தில் (வயலில்) வேறொருவன் பயிரிடப் பிறந்த பிள்ளை. அவன் வாயுவுக்கு ஔரசபுத்திரன்: அதாவது தனக்கே பிறந்த பிள்ளை. இவ்வாறு சாம்பவன் அனுமானை வ்யபசாரி பிள்ளையே! எனப் புகழ்ந்தனனாம். அதைக் கேட்டு அனுமான் மகிழ்ந்து கடலைத் தாண்ட இசைந்தனனாம். என்னே அழகு! அழகு! அனுமானுடைய மனப்பான்மை இருந்தவாறுமிக அழகியதே.

அனுமான் எவ்வாறு வியபசாரி பிள்ளையெனக் கூறப்படுகின்றானோ அதைப் போலவே வாலியும் சுக்கிரீவனும் கூறப்படுகின்றனர். ரிட்சரஸ் என்ற வானர மன்னனுக்கு இந்திரனால் வாலியும், சூரியனால் சுக்கிரீவனும் பிறந்தனராம்! ரிட்சரஸ் என்பவனுடைய மனைவிக்குப் பிறந்தனரோ, அன்றி அவனுக்கே பிறந்தனரோ! கதையில் ஒருநாள் ரிட்சரஸ் என்ற வானரன் பார்வதியால் சாபம்பெற்றகுளத்தில் விழுந்து பெண்ணுருவடைய, அவனைக்கூடி இந்திரன் வாலியையும், சூரியன் சுக்கிரீவனையும் பெற்றனராம்! (ஆண் கருக்கொண்டு பெற்ற பிள்ளைகள் கண்டிராப் புதுமையே! இதைப் போலவே பெண்ணுருவெடுத்த திருமாலைப்புணர்ந்து சிவன் ஒரு பிள்ளையைப்பெற்றனராம்! அப்பிள்ளையே சாத்தனாம்! என்னே புதுமை! இனி, கம்பர் போக்கைக்காண்போம்.

சம்பாதியிடம் அங்கதனும் சாம்பவனுமே பேசினதாக, கம்பர் அதனிடம் பேசியவர் அனுமானே எனக்கூறுகின்றார் சம்பாதியை அனைவரையும் கொன்று தின்பேனெனக் கூறியதாக அதனை ஓர் அரக்கனென அனுமன் எண்ணிக் கொல்லப் போயினன் என அவர் கூறுகின்றார். சடாயுவின் இறப்பை அனுமான் சம்பாதி கேட்கக்கேட்கக் கூறினனென்றும், சம்பாதி வருந்தி வானரர் அனைவரையும் இராமனுடைய பெயரைக்கூறச் செய்தது எனவும், அதனால் சம்பாதிக்குச் சிறகுவளர்ந்தனவுக் அவர்புகழ்க்கதையைக்கூறுகிறார். இராமனைத் தெய்வமாக்கவும் அவனுடைய பெயருக்கே இவ்வளவு தெய்வத்தன்மை இருக்கிறதென்றும் உண்மையறியாமக்களிடை உணர்ச்சியைப் பரப்புவதுதான் கம்பருடைய நோக்கம். இதற்காக முழுப்பொய்களையா அவர் அளத்தல் வேண்டும்? கம்பருடைய கவிகள் அழகாகவும் வியப்பாகவும் இனிமையாகவும் இருக்கலாம். ஆனால் அவைகளால் விளையும் நன்மையினும் தமிழ் மக்கள் அடைந்ததீமை நூறாயிரமடங்கு அதிகமென்பதையும், தமிழ் மக்களிடைப் பரவியுள்ள குருட்டு நம்பிக்கைகளுக்கும் தமது பகைவனாகிய இராமனிடைக் கொண்டுள்ள அறியா அன்புக்கும் இக்கம்பரே முதற்காரணமானவர் என்பதையும்அறிஞர் சிந்திப்பாராக. வால்மீகி கூறியிருக்கிறார்: அதையே கம்பர் கூறுகிறார் என்பதும் இல்லையே? நாய் கடித்ததுகூட வலிக்கவில்லை, அதன் பின்பட்ட அடியே மிகுதியும்துன்புறுத்துகின்றதுஎன்று உலகினர் சொல்வார்கள். அதற்கேற்ப வால்மீகியாவது தம்மினத்த வஞ்சகத்தையதிகமாகவொன்றும்மறைக்காமல்கூறினர் என்னலாம். அவர் எழுதியவரலாற்றைப்படித்தால்தமிழ் மக்களுடைய அறிவுதெரியாது. அவ்வாறிருக்க நமது கம்பர் உண்மையை மறைத்துப் பொய்யைப் புனைந்து

# புராண ஆபாசங்கள்

## மாறுவேடம் பூண்டு புராண ஆபாசத்தை வெளியாக்கும் இரு இளைஞர்கள்

[தரும பரீக்ஷை என்னும் பண்டைய ஓலைச் சுவடியிற் கண்டது]

(இடம்: பாடலீபுத்ரம் பிரம்மாலயம்)

ஐந்தாம் நாள்

ஸ்ரீ விபுதப்ரயன், வித்திபாபகன், வாதவல்லபனுகிய மனோவேகன் தன் மித்திரன் வாயுவேகனுடனே கூடி இன்று மஞ்சளாடையுடுத்தி ஸ்வேதாம்பரி வேடதாரிகளாக பிரம்மாலயத்து அக்னித் திசைவழியாகச் சென்று பேரிகைகொட்டி சிம்மாதனத்திலிருந்தனர். பேரிகை சப்தங்கேட்டதும் பல பொதுஜனங்களும், வேத சாஸ்திர, ஆகம, காவிய, நாடக லட்சணதக்ஷரென்ற விப்ர ஜனங்களெல்லாம் திரண்டு வந்து சிம்மாதனத்திலிருக்கும் இரு இளைஞர்களையும் ஆச்சரியமாகப் பார்த்து, ஹே! ஸ்வேதாம்பர முனிகளே! நீங்கள் யார்? உங்கள் குரு யார்? இங்கு வந்த காரணம் யாது? இவ்விடத்தில் எங்களை வாதத்தில் ஜெயிக்கவல்லவரேயன்றி ஏனையோர் பேரிகை கொட்டவும் சிம்மாதனத்திலமரவும் அருகராகார். ஆகையால் தகுந்த வாதவல்லமை பெற்றிருப்பின் வாதம் செய்து சிம்மாதன மேறுங்கள் என, இருவரும் எழுந்து வேறாசனத்தில் அமர்ந்தபின், மனோவேகன் விப்ரர்களைப் பார்த்து 'எங்களுக்குக் குரு யாருமில்லை. நாங்கள் காரண தபசிகளாக வந்தோம். எங்கள் ஊர் கூர்ஜர தேசத்தில் வச்ச கிராமமாகும். நாங்கள் அவ்வூர் கிராமாதிகாரியின் புத்திரர்கள். எங்கள் வீட்டில் ஆடுகள் மந்தை மந்தையாக இருந்தனவாதலால் அவைகளில்சிலவற்றையெங்களிருவரும் மேய்க்கும் தொழிலைற்றுக் கொண்டிருந்தோம். அவ்வாறே இன்று ஆடுகளை மேய்க்கக் காட்டிற்கு ஓட்டிக்கொண்டுவந்தோம். அவைகளை மேயவிட்டுவிட்டு அங்குள்ள மாமரத்தில் பழுத்திருக்கும் ரசமான பழங்களைக் கண்டு சாப்பிட அவாக்கொண்டோம். ஆனால்மரமேறத்தெரியாமல் விழித்துக்கொண்டிருந்தோம். கடைசியாக,

ஸர் வௌஷதீனும் சஜம்
ப்ரதானம்
ஸர் வேஷு பானேஷு
ஜலப்பிரதானம்
ஸர் வக்ஷை யானம் நயனம்
ப்ரதானம்
ஸர் வஸ்ய காத்ரஸ்ய சிரப்ரதானம்

என்ற சுலோகப்படி எங்கள் தலையை வெட்டி மரத்திலெறிந்தோம். அவைகள் மரத்தில் உள்ள பழங்களைச் சாப்பிட, சாப்பிடக் கீழேகிடந்த எங்கள் வயிறு நிரம்பிற்று. உடனே தலையும் கீழே விழுந்து உடலில் மாட்டிக்கொண்டு எழுந்தோம். எழுந்து ஆடுகளைத் தேடுகையில் அவைகள் காணாமையால் இனிமேல் வீடுசென்றால் பெற்றோர் அடிப்பார்கள் என்று பயந்து இம்மாதிரியாக வேடம்பூண்டு தேச சஞ்சாரர்களாக வந்துவிட்டோம் என்று' கூறினான். உடனே விப்ர ஜனங்களும் மற்றவர்களும் பெரு நகைப்பு நகைத்தனர். விப்ர ஜனங்கள் ஐயா! வேடதாரிகளே! இத்தகைய அபத்தவார்த்தைகள் பேசுவது உசிதமல்ல. சரீரத்தைக் கீழே விட்டு சிரசுமாத்திரம் மரமேறி பழம் சாப்பிடுகிறதும், கீழே கிடக்கும் சரீரத்தின் வயிறு நிரம்புவதும், பிற்பாடு சிரசு சரீரத்தில் ஒட்டிக்கொள்வதும், உடனே எழுந்து வருவதும், எந்தக் காலத்தில் எவரால் நடத்திக் காட்ட முடியும்? இத்தகைய அக்கப் போர்கள் இப்பெருஞ் சபையில்கூறுவது தகாத செய்கையாகும் என்று கண்டித்தனர்.

உடனே மனோவேகன் சாந்தமான வார்த்தையால்விப்ரர்களைப்பார்த்து, 'நாங்கள்சொன்னவை அபத்தமாகில் உங்களுடைய புண்ணிய கதைகளாகிய இராமாயணம் பாரதம் முதலியவைகளில் இத்தகைய அபத்தங்கள் இல்லையோ? உதாரணமாக உங்கள் இராமயணத்தில் இராவணன் என்ற இராக்கதன் திக்விஜயம்செய்து புறப்பட்டுச்சுற்றிவருகையில் கைலாசகிரியைத்தன்னுடையதோளினால் தூக்க, அதைக்கண்ட பரமேசுவரன் தன்னுடையகால் பெருவிரலினால் அழுத்த, பர்வதம் பளுவாகி இராவணனால் தூக்க முடியாமல் ஆச்சரியப்பட்டு தன்னுடையபத்துத்தலைகளையும் குடுக்கையாகச் செய்து, கையைத்தண்டாக்கி,கை நரம்பை தந்தியாகச்செய்து, கீதஸ்தோத்திரங்களால் சிவனுக்குச் சந்தோஷமுண்டாக்கி சந்திரகாசம்என்னும்ஆயுதம் வாங்கி, அங்கே சேதனம் செய்து சிரசை ஈஸ்வரர் பாதத்திலே வைத்து அர்ச்சிக்க, உடனே அவைகள் கண்டத்தில் பற்றிக்கொண்டனவென்பது கூறப்பட்டில்லையோ? தவிர வாலியினுடைய குமாரன் அங்கதன் ஹனுமானோடு இலங்காபுரி சென்று இராவணேசுவரனுடன் யுத்தம் செய்து பங்கம் செய்ய, இராவணன் கோபித்து அங்கதனைச் சந்த்ரகாசத்தினாலே இரண்டாகத் துண்டிக்க வாலி சுதன் இரண்டாய்த் துண்டுபட்டு விழுந்தனன். அதைக்கண்ட அனுமான் இரண்டு துண்டுகளையும் கொண்டுவந்து ஸ்ரீராமபிரான் எதிரில் போட்டு துக்கமுடையவனாகி யிருக்க, ஸ்ரீராமரும் சந்தபந்தமென்கிற மருந்தை அரைத்துப்பூசஇரண்டும், ஒன்றாய்ப் பற்றி ஜீவன் வந்துப் பழைய அங்கதனானனென்று உங்கள் புராணத்தில் கூறப்பட்டில்லையோ? அதுவுமன்றி, மற்றொரு புராணத்தில் மழைக்காலத்தில் மேகமாக முழங்க அந்த இடி சப்தத்தினாலே ஒரு ஸ்திரீக்குக் கர்ப்பமுண்டாகி நவமாதஞ் சென்றபின் ஒரு ஆண் சிரசைப் பெற்றனள். உடலில்லாத அந்த சிரசானது பிறந்தவுடன் மாதாவைக் கடிப்பதும் அங்குமிங்கும் குதிப்பதும் தாண்டித் தாண்டி ஓடுவதும் ஆகிய விநோதச் செய்கைகள் செய்தது. இதைக்கண்ட ஜனங்கள் அதற்குத் தலைமுகன் என்று பெயரிட்டு அழைத்தார்கள். சிலநாள் சென்றபின் தீர்த்த யாத்திரையாய்ச்சென்ற அகஸ்திய முனிவரைத் தலைமுகனென்ற தலை பார்த்துத்தன் வீட்டிற்கு விருந்துக்கு அழைத்தது. அதற்கு அகஸ்தியர் "கலியாணமாகாதவர் வீட்டில் நான் விருந்துண்ணுவதில்லையாகையால் நீ ஒரு ஸ்திரீயை கலியாணம் செய்துகொண்டுவா" என்றனர். இதைக்கேட்ட தலைமுகன் தன் தாயினிடத்தில் வந்து "எனக்குக் கலியாணமாகாவிடில் நம் வீடு தானத்திற்கு உரியதாகாதாம்; ஆகையால் எனக்கு விவாகம் செய்துவை" என்றனன். தாயார் தன்னிடத்திலுள்ள திரவியத்தையெல்லாம் செலவழித்து ஒரு பெண்ணை தன் மகனாகிய தலைக்கு மணம்செய்து வைத்தனள். இப்படி சிலநாள் சென்றபின் ஒருநாள் தலைமுகன் தன் மனைவியை அழைத்து ஒரு காவடி கட்டச்சொல்லி ஒரு பக்கத்துக்கூடையில் தானும் மற்றொரு பக்கக்கூடையில் சமையற் சாமான்களையும் வைத்து அதை தோளில் தூக்கிக்கொண்டு ஊர் ஊராக பிச்சை வாங்கி பிழைக்கப் போகும்படி கட்டளையிட்டனன். அவளும் அவ்வாறே காவடி கட்டித் தலைமுகனையும் சாமான்களையும் தூக்கிக்கொண்டு ஒரு ஊர்போய்ச் சேர்ந்தாள். அக்காவடியை ஓரிடத்தில் வைத்துத் தலைமுகனை காவலாக்கி பிச்சைக்குச் சென்றனள். அப்பொழுது அவ்விடத்தில் சிலர் சூதாடிக்கொண்டிருந்தனர். அச்சூதாட்டத்தினால் ஒருவருக்கொருவர் சண்டையுண்டாகி ஒருவருக்கொருவர் வெட்டிக்கொண்டனர். அவ்வாறு வெட்டுண்ட உடல்களில் ஒன்று துள்ளி விழும்போது தலைமுகன்பேரில் பட அந்தத்தலையும் உடலும் ஒன்றாய் ஒட்டிக்கொண்டது. தலைமுகன் உடலைப் பெற்று சந்தோஷமாக உட்கார்ந்துகொண்டிருக்கும்போது, மனைவி பிச்சை வாங்கிக்கொண்டு காவடியை நோக்கி வருகையில் தன் நாயகன் உடலோடு கூடி உட்கார்ந்திருப்பதைக்கண்டு சந்தோஷித்து பிரம்மா விஷ்ணுருத்திரன் மூவருமே நம்மைக் கண் திறந்து பார்த்துக் கருணை புரிந்தாரென்று களித்திருந்தாள். உடலுக்குரியவன் வந்து பார்த்து இவன் என்னுடைய நாயகனென்று இழுத்தனள். தலைக்குரியவள் தன் நாயகனென்று இழுத்தனள். இருவரும் சண்டையிட்டுக் கொண்டு நியாயாதிபதியினிடம் போக, அவரும் சிரசுக்குரியவளே அனுபவிக்க வேண்டுமென்று தீர்மானித்தனன். அய்யா! பார்ப்பனர்களே! உங்கள் பாட்டன்மார்கள் புளுகைக் காட்டிலுமா ஒன்று உலகிலிருக்கப்போகின்றது! இன்னும் மற்றொரு அண்டப்புளுகையும் கேளுங்கள்; மஹாபாரதத்திலே சித்திரபிராட்சசன் சிரசை அறுத்து உக்ரசேத்திரன் கருடனை அழைத்து இந்த சிரசை நிலத்தில் விடாமல் ஆகாயத்தே திரியென கட்டளையிட அவ்வாறே கருடனும் சிரசைத் தூக்கிக் கொண்டு சுற்றிக்கொண்டிருக்க, சித்திரபியினுடைய சரீரம் பீமசேனனுடைய மனைவியாகிய இடும்பையினுடைய கர்ப்பத்துள் ஜனித்து, நவமாத பரிபூரணமாகி முண்டமாய் பிறக்க அந்த உடற்கட்டையை மயானத்தில் எறிந்தனர். அச்சமயத்தில் ஆகாயத்திலே கருடனால் தூக்கிக்கொண்டு சுற்றிய சித்திரபியினுடைய சிரசானது கீழே கிடக்கும் முண்டத்தைக்கண்டு ஆவலாக கருடனையும் இழுத்துக்கொண்டு உடலில் வந்து ஒட்டிக்கொண்டு உயிர் பெற்று எழுந்தது. உடனே கருடன் பார்த்துப் பயந்து ஓடிவிட, இந்த சிரசும் உடலும் ஒன்றாகி, மனிதனாகி, தாயாகிய இடும்பையினிடத்தில் வர, அவள் ஆச்சரியப்பட்டு நீர் யார் என்று கேட்டனள். அதற்கு அவன் தன் விருத்தாந்தத்தைச் சொல்ல, சந்தோஷப்பட்டு கடோர்கஜன் என்று நாமமிட்டனர் என்றும், ஈஸ்வரன் இச்செய்தியைக் கேட்டு கருடனை கடோர்கஜனுக்கு துவஜமாகி இரு என்று உத்திரவு கொடுத்ததாகவும், அதனாலேயே கடோர்கஜனுக்கு கருடத்வஜனென்று பெயருண்டாயிற்றென்றும் கூறப்பட்டிருக்கின்றதே. இதை எந்த அக்கப் போரில் சேர்ப்பது? ஒரு பலத்து சிரசும் மற்றொருவ[illegible] முண்டமும் ஒன்றாய் ஒட்டிக் கொள்ளும்போது ஒரே பலத்தில் எங்கள் தலையும் உடலும் [illegible]

---

பகைவனைப் புகழ்ந்து பாடிப்போற்றினரே. இவரால் விளைந்த தீமைக்கோர் அளவுமுண்டோ?

சம்பாதியும் சடாயுவும் வல்லமை காணப்போட்டிபோட்டு உயரப் பறந்தனராகக் கம்பர் அவர்கள் தேவருலகைக் காணப் பறந்து சென்றனரென்று கூறுகிறார். சிறகற்று விழுந்த சம்பாதியை நோக்கிச் சூரியன், வானரர், இராமன்பெயர் கூறச் சிறகுபெறுவாய் என்றவரந்தனையெனவும் இல்லாததொன்றைக் கூறினதோடு, அவர் முனிவன் கூறியதையும் கூறுகிறார். சம்பாதிக்கு ஒருமகன் இருந்ததையும் அவன் இராவணனைசீதையோடு சந்தித்ததையும் அவர்கூறவில்லை. வாயு; கேசரியின் மனைவியாகிய அஞ்சனையைச் சேர்ந்த விவரத்தைக் கம்பர் கூறாது மறைத்தார். இத்துடன் கிட்கிந்தா காண்ட ஆராய்ச்சி இனிது நிறைவு பெறுகிறது இனி தொடர்ந்து சுந்தரகாண்ட ஆராய்ச்சி வெளிவருவதாகும்.

# மத மாற்றங்கள்

## திருவண்ணாமலையில்

### சுமார் 200 ஆதிதிராவிட குடும்பங்கள் மகம்மதியராகத் தயார்

இந்நகர ஜனசங்கை கணக்கின்படி மூன்றிலொருபங்கு ஆதித்திராவிட மக்கள் வசிக்கின்றனர். அவர்கள் நான்கு திக்கிலும் பெரியசேரி, கீழ்னுத்தூர் சேரி, கல்சேரி, சமுத்திரம் சேரியென நான்கு பெயருள்ள தெருக்களில் தெரு ஒன்றுக்கு சுமார் 400, 500 குடும்பங்களில் வசிக்கின்றனர். கூர்ந்து யோசிக்குங்கால், இந்நகருக்கே ஓர் அரண் போன்றும் விளங்குகின்றனர். என்றாலும் உயர்வகுப்பாரெனச் சொல்லிக் கொள்பவர்கள் இவர்களை மிகவும் கேவலமானவர்களாகக் கருதி, எவ்வித சுதந்தரமும் வழங்க மறுக்கின்றனர். இந்நகரம் முத்தித்தலங்களிலும் முதன்மைபெற்றதும் நினைத்த அளவில் முத்தியளிக்கக் கூடியதும் எறும்பு முதல் எவ்வித ஜீவராசிகளும் இந்நகரில் ஜனிப்பதே சிறந்ததெனலாம். அவ்வண்ணமே பூனை குதிரை, பன்றி முதலிய வடிவங்களாய் சாபம் பெற்றவர்களெல்லாம் இத்தலத்தை மிதித்தும், தெரிசித்தும் நினைத்தும் முத்தியடைந்துள்ளாரென வேதங்கள் கோஷிக்கும். இவ்வித மகிமை பொருந்திய க்ஷேத்திரத்தில் அரிய மானிட ஜென்மமாக ஜெனித்த இவர்களிலேயே ஒரு வகுப்பாரை கேவலமாக நினைப்பதும் நடத்துவதும் யாது காரணமோ யாமறியோம். அத்தலபெருமை மூர்த்திப்பெருமை முதலிய பெருமைகளும் மற்றவர்களுக்கு இருப்பது போல ஆதித்திராவிட மக்களுக்கும் உண்டு என்பதை மறந்தனரோ? இவர்கள் அநாகரீகர்களாயிருக்கிறார்கள் என்று சொல்லிக் கொள்ளும் போலி வார்த்தையை நிவர்த்திக்க நாகரீகத்தைக் கொள்ள தங்களுக்குள்ளேயே ஒரு சங்கம் ஸ்தாபித்து அநேக ஒழுங்கான முறைகளை போதித்து மாரீசமுன்னவர்களாக சிலர் இருப்பதை அந்தப்பொருளைக் கொண்ட சில உயர்வகுப்பாரென்போர்கள் அவ்வித முன்னேற்றத்திற்குத் தடங்கலாய் சில சூழ்ச்சிகளைச் செய்து குல அபிமானமுள்ள தலைவர்களுக்கும் பல இன்னல்களை விளைவிக்க முன் வருகின்றனர். நமது மாபெருந் தலைவர்கள் சொல்லியபடி தற்கால ராம ராஜ்யத்தில் சொல்லும் இவ்விதத் தவிலிலர்களுக்கு செல்வாக்கு உண்டாவதும் எவ்வண்ணம் ஆதித்திராவிட மக்களை எவ்விதத்திலும் முன்னேற விடாமல் தங்கள் பாதத்திலேயே மிதித்து அடிமைகளாக வைத்திருக்கவேண்டுமென்கின்றனர். இவ்வித நவயுக காலத்திலும் அதர்ம வேத வாக்கியங்களிலும் தங்களுக்கு விமோசனம் கிடைக்காதென குடும்பங்கள் தங்களுடைய சுயமரியாதையைக் காப்பாற்றிக் கொள்ளத்தகுந்தது மகம்மதியமதம் ஒன்றுதான் யெனநிச்சயித்தும் அதன் பயனாய் திரு. ஜனாப் சங்கர கணப்பர் முதலிய பெருந்தகையார்களின் பிரசாரத்தை அனுசரித்தும் சிலையம்பட்டி ஆதித்திராவிட மக்கள் மகம்மதியமதத்தைதழுவினதை ஆதரித்தும் இவ்வூரிலும் சுமார் 200 குடும்பங்கள் மகம்மதிய மதத்தில் சேரத்தயாராகயிருக்கின்றனர் ஆகையால் இந்நகர முஸ்லீம்கள் ஆதித்திராவிடமக்களுக்குவேண்டிய தைரியமும் உற்சாகமும் உண்டாகுமாறு போதித்து இவ்வேழைகளை மகம்மதுநபியின் சீடர்களாகச் செய்வதுடன் இவர்களை கேவலமாக நடத்தியவர்கள் வெட்கிதலைகுனியும் வண்ணம் செய்யவேணுமாயும் முஸ்லிம் தலைவர்கள்முன்வரவேண்டுமாய்கோரப்படுகிறார்கள். தங்களுடன் ஒத்துழைக்கக் கல்விநிலையுடைய ஆதித்திராவிடர்களில் சிலர்முன்வருவார்கள் என்பதில் ஐயமில்லை என்று ஆதித்திராவிட ஐக்யவாலிபசங்கத்தின் காரியதரிசி எழுதுகிறார்.


## விளம்பரம்

கரந்தைத் தமிழ்ச் சங்கம்
சங்கக் கல்லூரியின் உதவிக்கென
நடக்கும் பெருநிதிச் சீட்டு

18-1-1930 ஆம் தேதியில் தவறாது சீட்டுக் குலுக்கப்பெறும். விற்பனையான சீட்டுப் புத்தகங்களின் அடிக் கட்டைகளையும் விற்பனைத் தொகைகளையும், விற்பனையாகாது மீதமிருக்கும் சீட்டுப் புத்தகங்களையும் 15-12-1929 ஆம் தேதிக்கு முன்னரே கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவருக்கு சீட்டு விற்றோர் அனுப்புமாறு வேண்டுகிறேன்.

நா. கந்தசாமி,
சீட்டின் தலைவர்.

கரந்தை,
12-10-29

இனாம்! இனாம்!
லேடி போட்டோ காலண்டர்
இன்ப லீலா படங்கள்
64 வகை சிற்றின்ப ரகசிய உருவ ஒரிஜினல் மாதர் போட்டோ படங்கள்
ஆல்பம் உள்பட விலை ரூ. 5.
வெளிநாட்டு ஆர்டர்களுக்கு போஸ்டேஜ் முன்பணம் ரூ. 1½ அனுப்பவும்.
K. G. STORES, VEPERY, MADRAS.


கொள்ளாதா? அதுவுமன்றி, ஆதியில் க்ஷத்திரியன் ஒருவன் உமை தேவனைப் பிரார்த்தித்து திவ்ய பிண்டம் ஸ்தாபித்து தன்னுடைய மனைவிமார் இருவருக்கும் இரண்டாய்ப்பங்கிட்டு கொடுத்தனன். அவர்கள் இருவரும் அதைச் சாப்பிட்டு கர்ப்ப முண்டாகி நவமாத பரிபூரணமாகி அரை அரை சரீரமாகப் பெற்றார்கள். உடனே அந்த இரண்டு அரை குழந்தைகளையும் ஜரையென்னும் தாதியினிடத்தில் கொடுத்து குப்பையில் எறிந்து விடும்படி ஏவினர். அவளும் அவைகளை யெடுத்துக் கொண்டு போய் இரண்டையும் ஒன்றாய்ச்சேர்த்துப் பார்த்தாள். உடனே இரண்டும் ஒன்றாய் ஒட்டிக் கொண்டு உயிர் பெற்றதென்றும், அதற்கே ஜராசனனென்ற பெயருண்டாயிற்றென்றும் அவனே பீமனுடன் யுத்தம் செய்கையில் பீமன் அவனை இரண்டாய்க்கிழித்து எறிய இரண்டும் ஒன்றாய் ஒட்டிக் கொண்டு பீமனோடு யுத்தம் செய்ததாக உங்கள் மகா பாரதத்தில் கூறப் பட்டிருக்கிறதே. இதை ஒப்பிட்டுப் பார்க்கையில் எங்களை பொய்யரென்று கூற உங்கள் நாக்குத் துணியுமோ? உங்கள் வாய்திறவுமோ?" என்று கேட்டான். இதைக் கேட்ட விப்ரர்கள் வெட்கி தலைகுனிந்து நிற்க, மகா ஜனங்களெல்லாம் கலகலவென்று கைகொட்டிச் சிரித்தனர். உடனே விப்ரர்கள் ஹே!. வேடதாரிகளே! இது வரையில் நீங்கள் கூறியவை எங்கள் மதபுராணத்தில் கூறப்பட்டிருப்பது பொய்யோ மெய்யோ? கிடக்கட்டும் உங்கள் சரீரம் கீழே கிடக்க சிரசு விருட்சமேறி பழம் சாப்பிட கீழேகிடக்கும் வயிறு நிறம்பியது எங்கள் புராணத்திலுண்டா? இந்தப் பொய்யை மூட்டை என்றே கூறவேண்டும் என்றனர். அதற்கு மனோவேகன் "ஐயா விப்ரர்களே!

கூயோனி ஜாதம் மதுமத்ய மாம்ஸம்
கதம் நமஸ்ந்து தயா பரோக்ஷாம்
க்ஷயான ஸம்ஜாத தர்ஸோபோக்யம்
ஸர்வம் மூதம் போக விஸ்திதாஸ்ம்
கதம்ஸ்பர்யா விதிதப்ரணீய
கதம் நமர்யாமி தாப்ல திப்ராம்
தாம்ஸாம்ப்ர பேதப்ரபு ஜாஸ்தி
ஜம்தும்
திவ்ய மால்யாத்ரவஷான நககாம
ஸயோஜ்ய சாயம்தி புஷ்ரணபும்ஸாம்
யோகஸ்திதாஸ் தி தாப்யபுத்தா
த்வசித் பலேத் திவ்யமநுஷ்ய பாஜம்
நதம்
த்ரிர உதாமி சிதம்ந புக்த ஸ்தலசா
ஜலசா
கசாபக்து பக்ஷ பாயசம்கென.

என்றபடி இறந்து போன மாதா பிதாக்களுக்கு மாளைய பட்ச திதியென்றும், மற்றவருஷதிதியென்றும், கூறி, இவ்விடத்தில் குமாரன் கன்னியிலும் மாமிசத்திலும் பாலிலும் சோற்றிலும் நெய்ச்சோற்றிலும் வஸ்திரங்களிலும் பிராமணர்களை சந்தோஷிக்கச்செய்தால், இறந்துபோனவர்களான பிதுருக்கள் திருப்தியடைகிறார்கள் என்றுகூறி நடத்திவருகின்றீர்களே! இது ஏமாற்றலா? உண்மையா? உண்மையாயின் எக்காலத்திலோ இறந்தவருக்கு இன்னொருவர் சாப்பிட்டுத் திருப்தி அடைகிறதென்றால், ஒரே பவத்தில் ஒரே மனிதனுடைய சிரசு விருட்சத்திலுள்ள பழத்தினை சாப்பிட கீழேயுள்ள வயிறு திருப்தியடையாதா! கூறுங்கள்" என்றனன். உடனே விப்ரர்கள் ஒன்றும் கூறாமல் மௌனமுற்றிருக்க, ஜனங்கள் கை கொட்டி நகைத்து இனிமேல் இந்த புராணக்கதைகளைக்கேட்டு ஏமாறக் கூடாதென்று ஞானம் பெற்று இவைஞர் இருவருக்கும்ஜெயவாதிகளென்று பட்டம் கொடுத்து வீடுபோய்ச்சேர்ந்தனர்.

## திருப்பூர்

### 41 'தீண்டப்படாதார்' குடும்பங்கள் கிறிஸ்தவராயது

திருப்பூரின் சுற்றுப்புறத்துள்ள நல்லூர் சுல்தான் பேட்டை முருங்கப்பாளையம் முதலிய ஊர்களிலுள்ள 'தீண்டப்படாதார்' வகுப்பைச் சார்ந்த 41 பேர்கள் தங்கள் குடும்பங்களுடன் அக்டோபர் 16ந் தேதி புதன்று கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்து கொண்டனர். சில மாதங்கட்குமுன் சுல்தான் பேட்டையிலுள்ள மேற்படி வகுப்பைச் சார்ந்த பலர் கிறிஸ்தவர்களாக மாறியதும் அக்கோயில்களில் யாதொரு வித்தியாசமுமின்றி சேர்த்துக் கொள்ளப்பட்டதையும், தாழ்த்தப்பட்டவர்களென்ற கேவல வார்த்தைப் பிரயோகிக்கப் படாமலிருந்து நல்ல உடைகளையணிந்து சுயமரியாதையை அடைந்ததையும் பார்த்து, இந்த 41 குடும்பங்களும் கிறிஸ்தவர்களாயினர் எனத் தெரிகிறது. இன்னும் பெருந்திரளான மக்கள் இங்கு கிறிஸ்துவமதத்தைச் சாரத் தயாராய் இருக்கின்றனராம்.


நறுமணம்! பெருங்குணம்!
காப்பிக் குடியை ஒழிக்கும்
ஹேப்பி பவுடர்
Registered No (3108)

பலஹீனம், தாகம், உஷ்ணம், பித்தம், மலக் கட்டிதகளை நீக்கிப் புஷ்டியைத் தருவதில் நிகரற்றது. வி. பி. வேறு. அயல் நாட்டுக்கு முன் பணம்.

| | | | | |
|---|---|---|---|---|
| ½ சேர் டின் 3, | ரூ. | 1 | 0 | 0 |
| டஜன் ½ | ரூ. | 1 | 12 | 0 |
| ¼ பவுண்டு டஜன் 1, | | 3 | 0 | 0 |

S V. ராஜப்பா,
ஹேப்பி பாக்டரி, பழனி, S I

இனாம்!

கிளேஸ் பேப்பரில் இரண்டு கலரில் அச்சிட்ட, தமிழ் இங்கிலீஷ் தேதிகளடங்கிய 1930-ம் வருஷத்து காலண்டர் இனாம். விலாசம் தெளிவாய் எழுதவும்.

சரஸ்வதி அண் கோ.,
கோவில்பட்டி, S. I. Ry.

# பூனாவில் ஆலயப்பிரவேசம்

## தமிழ்நாட்டிலும் சத்தியாக்கிரகம் துவக்க யோசனை

### நேபியர் பார்க்கில் பொதுக்கூட்டம்

சென்னை மவுண்ட் ரோட்டிற்கு அருகாமையில் உள்ள நேப்பியர்பார்க்கில் 22-10-29 தேதி மாலையில் பூனாவில் பார்வதி ஆலயத்தில் நடக்கும் சத்தியாக்கிரகத்தை ஆதரிப்பதற்காகவும் தமிழ் நாட்டிலும் ஆலயப் பிரவேச விஷயமாய் ஏதாவது யோசனை செய்வதற்காகவும் உயர் திரு. டபிள்யூ. பி. ஏ. சவுந்திரபாண்டியன் அவர்கள் தலைமையில் ஒரு மகாநாடு கூடியது. அக்கூட்டத்திற்கு திருவாளர்கள் சிவராஜ் பி. ஏ. பி. எல், எம். எல். ஸி; ராவ்சாகிப் ரங்கநாதம் செட்டியார், கௌன்சிலர் தர்மலிங்கம் பிள்ளை, பண்டித முனுசாமி, பாலகுருசிவம், வி. ஐ. முனுசாமிப் பிள்ளை, எல்லப்ப வாத்தியார், சாமிசகஜாநந்தம், ராமாநுஜலு நாயுடு முதலிய அநேகர் வந்திருந்தார்கள்.

திரு. சிவராஜ் அவர்கள் திரு. சௌந்திர பாண்டியன் அவர்களை தலைமை வகிக்க பிரேரேபித்தார். திரு. வித்துவான் முனிசாமி அவர்கள் சுயமரியாதை பாடல்கள் பாடி ஆமோதித்தார்.

நீண்ட கரகோஷத்தினிடையே திரு. பாண்டியன் அவர்கள் அக்கிராசனம் வகித்து கூட்டம் கூட்டப்பட்டதின் நோக்கத்தை விளக்கி தீண்டாமையின் கொடுமையையும் தீண்டப்படாதார் தாழ்ந்த ஜாதிக்காரர் என்பவர்கள் படும் கஷ்டத்தையும் இழிவையும் எடுத்துச்சொல்லி, சமீப மாகாணத்தாராகிய பம்பாய் மாகாணத்தார் ஆரம்பித்திருக்கும் சத்தியாக்கிரகமானது அவர்கள்வேறு பல வழிகளிலெல்லாம் முயற்சித்துப் பார்த்த பிறகே ஆரம்பிக்கப்பட்டதென்றும், சமூகக்கொடுமைகளோடு போர் புரிவதற்கு சத்தியாக்கிரகமே நல்ல ஆயுதமென்றும், சுயமரியாதை இயக்கமானது பலாத்காரத்தைவிட சத்தியாக்கிரகத்தையே நம்புகின்றதென்றும், ஏனெனில் சமூகக் கொடுமைகள் சில சுயநலக்காரர்களால் உண்டாக்கப்பட்டிருந்த போதிலும் பாமர ஜனங்கள் அவைகளை மதக் கடமை என்றும் சாஸ்திரக் கட்டளை என்றும் அறிவில்லாமல் நம்பிக்கொண்டிருக்கின்றபடியால் அறியாத மக்களிடம் பலாத்காரத்தை உபயோகிப்பது அதர்மமென்றும், அது இருவருக்கும் கெடுதியையே உண்டாக்குமென்றும், நியாயமாய் எத்தனையோ காலமாக தாழ்த்தப்பட்ட மக்கள் தங்கள் கஷ்டங்களை எடுத்துச்சொல்லியும் கொஞ்சமும் பயன்படாமல் போய் விட்டது என்றும், இதற்கு உதாரணம் காங்கிரசே போதுமென்றும், 50 வருஷமாக இந்தியா தேசியத்திற்கு என்று நடத்தப்படும் காங்கிரஸ் தீண்டாமை விஷயத்திற்கு யாதொரு உதவியும் புரியவில்லையென்றும், ஆனால் தீண்டப்படாதார்களுக்கும் சொத்து சுயராஜ்யம் தங்களிடம் கொடுக்கும்படி மாத்திரம் கேட்கின்றார்கள் என்றும், மற்றொருவரிடம் அரசாங்க மிருக்கும் காலத்திலேயே இம்மாதிரி கொடுமை செய்பவர்கள் தங்களிடம் ஆட்சி வந்தால்இன்னும் எவ்வளவுகொடுமைகள் செய்வார்கள் என்றும், ஆதலால் தேசியவாதி என்பவர்களையும் சுயராஜ்யம் வாங்கித் தருகிறேன் என்பவர்களையும் காங்கிரசையும் நம்பக்கூடாதென்றும், தங்களுக்கு தாங்களே தங்களிடமே நம்பிக்கைவைத்து முயற்சி செய்ய வேண்டுமென்றும், எங்கு பார்த்தாலும் எந்தகிராமத்தில் பார்த்தாலும் மேல் ஜாதிக்காரன் என்பவன் கீழ்ஜாதிக்காரன் என்பவனை கொடுமைப் படுத்துவதிலும் தீண்டாமையையும் ஜாதி வித்தியாசத்தையும் தனது ஆதிக்கத்தையும் நிலை நிறுத்துவதிலுமே தான் கவலை கொள்ளுகின்றார் என்றும், ஆதலால் நாம் நமது சக்தியையும் நிலைமையையும் எதிரிகள் சக்தியையும் நிலைமையையும் நன்றாய் அறிந்துவிட்டோம் என்றும், கொஞ்ச காலமாகவே தமிழ்நாட்டின் சுற்றுப் பிரயாணத்தின் மூலம் நாங்கள் ஆதிதிராவிடர் முதலிய தாழ்த்தப்பட்ட மக்களின் சுயமரியாதை உணர்ச்சியை நன்றாய் பார்த்து வருகின்றோமாதலால் அவர்கள் சத்தியாக்கிரகத்திற்கு தயாராயிருக்கிறார்கள் என்பதே தனது நம்பிக்கை என்றும், நாம் வேறொருவருடைய உரிமையில் பிரவேசிக்க வேண்டியதில்லை என்றும், நமக்கு உள்ள மனிதத்தன்மை உரிமையைத் தான் அடையவேண்டுமென்கின்றோமென்றும், எவ்வளவு கொடுமையாக பிறர் நம்மை நடத்துவதாகத் தெரிந்தாலும் ஆத்திரப்படாமலும் பழி வாங்கும் உணர்ச்சி இல்லாமலும் பொறுமையுடனும் உறுதியுடனும் தியாக உணர்ச்சியுடனுமே போராட வேண்டுமென்றும், இந்த தத்துவத்தில் ஆரம்பிக்கப்படும் சத்தியாக்கிரகத்திற்கு என்னால் கூடிய உதவியை செய்யத்தயாராயிருக்கிறேன் என்றும், சுயமரியாதை இயக்கம் வெறும்வாய்ப்பேச்சல்லவென்றும், உயிரைக்கொடுத்தாவது காரியத்தில் பலனைக்காட்டித்தீருமே ஒழிய காங்கிரஸ் தேசியம் போன்ற மேடைப்பிரசங்க இயக்கமென்று யாரும் எண்ணிவிடாதீர்கள் என்றும், சத்தியாக்கிரகத்தை ஆரம்பித்துவிட்டால் சத்தியாக்கிரகத்தில் உயிர்விட ஆயிரக்கணக்கான இளைஞர்கள் தயாராயிருக்கின்றார்கள் என்றும், ஆகையால் நமக்கு முன்னாலேயே ஆரம்பித்து நமக்கு வழிகாட்டிகளாக ஏற்பட்ட பூனா பார்வதி கோவில் சத்தியாக்கிரகிகளையும் அதை நடத்தும் டாக்டர் அம்ருதகார் அவர்களையும் நாம் பாராட்ட வேண்டுவது அவசியமேயாகும் ஆனதால், அதற்காகஒரு தீர்மானம் நிறைவேற்றப்படும் என்றும் கூறி, திரு பாலகுருசிவம் அவர்களை தீர்மானத்தைப் பிரேரேபிக்கும்படி கேட்டுக்கொண்டார்.

திரு பாலகுருசிவம் எழுந்து கோவில்களில் தனக்கு நம்பிக்கையில்லையென்றும், சாஸ்திரங்களில் தனக்கு நம்பிக்கை இல்லை என்றும், கோயில்களில் சாமி கண்டிப்பாய் இல்லைஎன்றும், கோவில்களை இடித்தால்தான் மக்கள் சுதந்தரமும் ஒழுக்கமும் அடைய முடியுமென்றும். கோயில்களால்நமக்கு இழிவு உண்டாவதால் அதை விலக்க எப்படியாவது பலாத்காரம் செய்தாவது கோயிலுக்குள் போய் இழிவை ஒழித்துத் தீர வேண்டும் என்றும், கோயிலைப் பற்றி பலசித்தர்களும்பெரியார்களும் அது சுடுகாடு என்றும், திருட்டுப் பிசாசுகள்வாழும் இடமென்றும், விபசாரவிடுதி என்றும் சொல்லி இருக்கிறார்கள் என்றும் தாவாரமில்லாதனக்கொருவீடும் இல்லை(இப்படிப் பட்டவர்களுக்கு) தேவாரமேதுக்கடி குதம்பாய் தேவாரமேதுக்கடி என்று பாடி இருக்கிறார்கள் என்றும், சுயமரியாதை இயக்கம் வந்த பிறகே பழைய காலத்துச் சித்தர்கள் பெரியார்கள் முதலியவர்கள் பெருமையும் ரிஷிகள் முனிவர்கள் அவதாரங்கள் என்பவர்களின் அயோக்கியத்தனமும்நன்றாய் விளங்குகிறதென்றும், சுயமரியாதைஇயக்கம்அறிவுக்கண் திறந்து விட்டதால் இனி யாராலும் ஏமாற்ற முடியாதென்றும், பேசி பூனா சத்தியாக்கிரகிகளை, பாராட்டுவதாகவும், தலைவரை போற்றுவதாகவும் ஒரு தீர்மானம் பிரேரேபித்தார். பிறகு திரு. எல்லப்ப வாத்தியார் ஆமோதித்தார்.

**திரு ஈ. வே. ராமசாமிபெரியார்**

பிறகு திரு. ஈ. வெ. ராமசாமி அவர்கள் எழுந்து பேசியதாவது:—

சகோதரர்களே! நமது தமிழ் நாட்டில் சுயமரியாதை மகாநாடு நடந்து 8, 9 மாதங்கள் ஆகிவிட்டன. அடுத்து பம்பாயில் சுயமரியாதை மகாநாடு நடந்து 3, 4 மாதமே ஆயின. ஆனால் பம்பாய்க்காரர்கள் இதற்குள் சத்தியாக்கிரகம் துவக்கிவிட்டார்கள். சத்தியாக்கிரகம் அன்றியும் வடநாட்டில் இல்லாமலும் பல கோயில்கள் எல்லோருக்கும் திறந்து விடப்பட்டு விட்டன. நாமோ மற்றொருவர் செய்த சத்தியாக்கிரகத்தைப் பாராட்டுவதில் முனைந்திருக்கின்றோம். இதை நினைக்கும்போது நம்மை நாம் வாய்ப்பேச்சு வீரர்கள் என்றே சொல்லிக் கொள்ள வேண்டும். நிற்க சிலர் நம்மை "உங்களுக்குத் தான் இத்தமாதிரி கடவுள்களிடத்தில் நம்பிக்கையே இல்லையே, அப்படி இருக்க எதற்குகாக கோயிலுக்குள் போக சத்தியாக்கிரகம் செய்ய வேண்டும்" என்று கேட்கின்றார்கள். ஆனால் சகோதரர்களே! நாம் மாத்திரமல்ல; இப்போது எங்கு பார்த்தாலும் ஆஸ்திகர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் கூட நம்மைப்போலவேதான் அதாவது, கோயில் இருப்பது கல்லும் செம்புமே ஒழிய அவை கடவுள்கள் அல்லவென்பதை தாராளமாய் ஒப்புக் கொள்ளுகின்றார்கள். ஆனால் கடவுளை மனிதன் நினைக்க ஞாபகம் வருவதற்காகவே கோயிலும் அதனுள் இருக்கும் கல் செம்பு காரை மரம் படம் முதலிய சிலை உருவங்களும், பெரியோர்களால் செய்துவைத்த ஏற்பாடுகளாகும் என்றும் பாமர மக்களுக்கு இதைச் சொன்னால் புரியாதென்றும், அதையே கடவுள் வீடு என்றும், உள்ளிருப்பவைகளே கடவுள்கள் என்றும் சொல்லவேண்டியிருக்கின்றது என்று சொல்லப்படுகின்றது என்பதாக தத்துவார்த்தம் சொல்லுகின்றார்கள். இந்த தத்துவார்த்தம் சொல்லுகின்றவர்களைப்பற்றி நான் என்ன நினைக்கின்றேன் என்றால் ஒன்று இவர்கள் கடவுளை மிக்க கேவலப்படுத்துபவர்களாயிருக்க வேண்டும்; அல்லது கடவுள் தன்மை இன்னது என்பதை அறியாத மூடர்களாயிருக்க வேண்டும். இந்த இரண்டும இல்லாவிட்டால் பொதுஜனங்களை ஏமாற்றும் அயோக்கியர்களாயிருக்க வேண்டும் என்பதேயாகும்

ஏனெனில், எல்லாம் வல்லவரும் எங்கும் இருப்பவரும் சர்வ இயக்கத்துக்கும் காரணமான கடவுள் என்பவரை ஆறறிவுள்ள மனிதனுக்கு ஞாபகப்படுத்த மற்றொரு மனிதன் முயற்சி வேண்டுமென்றால், அதுவும் அதற்கு ஒரு கட்டடமும் கல் உருவமும் வேண்டுமென்று ஒருவன் சொல்வானானால், அவன் கடவுள் என்பதற்கு மேல்கண்ட எல்லாம் வல்ல சக்தியும் எங்கும் உள்ள சக்தியும் ஒப்புக்கொண்டவனாவானா என்று கேட்கின்றேன். (சிரிப்பும் கரகோஷமும்). ஆதலால் ஒரு சமயம் கோயில்கள் மூடர்களால் கட்டப்பட்டது என்று சொல்வதானால் எனக்கு ஆட்சேபனை இல்லை. அப்படிக்கில்லாமல கோயில்கள் அறிவாளிகளால் கட்டப்பட்டது என்று சொல்வதானால் கண்டிப்பாய் அந்த அறிவாளிகள் என்பவர்கள் சூழ்ச்சியும் வஞ்சகமும் நிறைந்தவர்களாய்த்தானிருக்கவேண்டும். ஏனெனில் அந்தக் கோயில்கள இப்போது அந்த பெரியோர்கள என்பவர்களின் ஆதாரப்படி (ஆகமப்படி) நடந்து வருவதாகவே இருக்கின்றது. அந்த ஆகமங்கள் என்பவைகளே மனிதன் அந்தக் கோயிலுக்குள் போகவும் அங்குள்ள சாமியை வணங்கவும் பல நிபந்தனைகளைக் கொண்டதாக இருக்கின்றது. அந்நிபந்தனைகள் மனிதத் தன்மைக்கு சிறிதும் பொருத்தமில்லாததாயிருக்கின்றன.

அதில் ஒருசிறிதும்ஒழுக்கத்திற்கும் பக்திக்கும் ஆதாரமானதும் கடவுள்

ஞாபகம் வருவதற்கு ஆதாரமானதுமான காரியங்கள் இல்லவே இல்லை. அங்குள்ள கடவுள்களைப் பார்த்தால் கடவுள் ஞாபகம்வருமென்றால் அங்குள்ள தாசிகளைப்பார்த்தால் தாசிகள் ஞாபகம் வராதா என்று கேட்கின்றேன். மற்றும் அங்கு கடவுளை வணங்கவரும் மற்ற பெண்களைப் பார்த்தால் பெண்கள் ஞாபகம் வராதா, என்று கேட்கின்றேன். உணர்ச்சியற்ற குழவிக்கல்லை பார்த்த மாத்திரத்தில் கடவுள் ஞாபகம் வருவதானால், உயிருள்ள ஜீவன்கள் பெண்கள் தங்களை பிறர் பார்க்க வேண்டுமென்றே அலங்கரித்துக் கொண்டுவந்து நின்றால், ஏன் அந்த ஞாபகம் வராது? அன்றியும் அங்கு கடவுளுக்கு நடக்கும் மற்ற காரியங்களையும் பார்த்தால் ஏன் பார்க்கின்ற மனிதனுக்கு மற்ற ஞாபகமும் வராது என்று கேட்கின்றேன். கோயிலைப்பற்றி என்னுடைய கண்ணியமான அபிப்பிராயமெல்லாம் கோயில்கள் கண்டிப்பாகபாதைக்கும் ஒழுக்கத்திற்கும் ஏற்பட்டது அல்லவென்றும் மக்களை மூடர்களாக அடிமைப் படுத்தவும் உயர்ந்தஜாதி தாழ்ந்தஜாதி என்கின்ற ஜாதி வித்தியாசத்தை நிலைநிறுத்தவும் ஒரு கூட்டத்தார் பாடுபடாமல் இருந்துகொண்டு சோம்பேறித் தனமாய் வயிறு வளர்க்க வேண்டி பொதுஜனங்கள் பாடுபட்டு சம்பாதித்த பணத்தை கொள்ளை அடிக்கவும், வசதி செய்து கொள்வதற்காகவே ஏற்பட்டதாகும். முன் காலத்தில் இருந்த அரசர்கள் மூடர்களும் அயோக்கியர்களுமாயிருந்ததால், இம்மாதிரி கோயில் சூழ்ச்சிக்கு அவர்களும் அனுகூலமாயிருந்து வந்திருக்கின்றார்கள். சில அரசர்களுக்கு இம்மாதிரியான கோயில் மூலமாகவே ஆக்ஷியும் அனுகூலமும் ஏற்பட்டிருக்கின்றது. ஆகையால் கோயில்கள் என்பது சோம்பேறிக் கூட்டமும் அரசர்களும் சேர்ந்து தங்கள் சுயநலத்திற்காக பாமர மக்களை ஏமாற்றுவதற்கு செய்த சூழ்ச்சியேயாகும். அவ்விதசூழ்ச்சியை ஒழிக்கவே நாம் எல்லோருக்கும் கோயில் பிரவேசம் கேட்கின்றோம். இன்றைய ஜாதி வித்தியாசத்திற்கு ஆதாரமாயுள்ள ரோடு கிணறு சாவடி பள்ளிக்கூடம் முதலியவைகள் எல்லாம் ஒரு விதமாக மாற்றப்பட்டு வந்து கொண்டிருந்தாலும் இந்த கோயில்கள்தான் சிறிது மாறுவதற்கு இடம் தராமல் ஜாதி வித்தியாசத்தை நிலைநிறுத்த உபயோகப்பட்டு வருகின்றது ஆதலால்தான், நான் தீண்டாத மக்கள் என்போர் கண்டிப்பாய் கோவிலுக்குள் பேய்த்தீர வேண்டுமென்கிறேனே ஒழிய, பக்திக்காகவோ மோட்சத்திற்காகவோ பாவ மன்னிப்புக்காகவோ அல்லவே அல்ல. கோவிலில் சமத்துவமடைந்து விட்டால் மற்ற காரியங்களில் வித்தியாசம் இருக்க முடியவே முடியாது. கோவில்பிரவேசத்து நாம் செய்யும் ஒவ்வொரு முயற்சியும் ஜாதிவித்தியாசத்தை ஒழிக்கச்செய்யும் முயற்சியே ஒழிய வேறில்லை. இன்றையதினம் எல்லோரும் கோவிலுக்குள் ஜாதிவித்தியாசமின்றி விடப்பட்டு விட்டார்கள் என்று ஏற்பட்டு விட்டால், நாளையதினமே நான் அங்கு எதற்காகப் போகின்றீர்கள்? அங்குஎன்னஇருக்கின்றது? அங்கு போனதால் உங்களுக்கு என்னபலன். ஏற்படுகின்றது? ஏன் உங்கள் பணத்தையும் நேரத்தையும் ஊக்கத்தையும் அறிவையும் பாழாக்குகிறீர்கள்? என்று சொல்லி தடுக்கவே முயற்சிப்பேன். ஏனென்றால் கோவிலில் உள்ள ஜாதி வித்தியாசம் காரணமாகவே சில மூடர்கள் கோயில்களை புனிதமான இடம் என்று கருதிக்கொண்டு தங்கள் பணத்தையும் புத்தியையும் பாழாக்கி வருகின்றார்கள். நம் நாட்டின் வறுமைக்கும் முட்டாள்தனத்திற்கும் கோயில் வரியும் புரோகிதர்கள் வரியும் ஆகமங்களுமே காரணமாகும் என்பது எனது உறுதியான எண்ணம். தரித்திரமும் ஜாதிவித்தியாசமும் ஒழிந்து நமது நாட்டில் அறிவும் செல்வமும் பெருக வேண்டுமானால் இந்தக் கோவில்களும் புரோகிதர்களும் அடியோடு அழிக்கப்பட்டாக வேண்டும். எனவே, இம்முயற்சிகள் பலாத்காரத்தின் மூலம் நடக்குமது என்பது எனக்கு ஒரு சிறிதும் நம்பிக்கை இல்லாததும் பிடிக்காததுமான காரியமாகும் எனெனில், நூற்றுக்கு தொண்ணூறு மனிதர்கள் உண்மையாகவே தீண்டாமையை நம்பிக்கொண்டு ஆட்சேபிக்கும்படியான பாமரத் தன்மையில்இருக்கின்றார்கள். அவர்களிடம் பலாத்காரம் செய்வது நியாயமற்றதும் பாதகமானதுமாகும். சத்தியாக்கிரகத்தின் மூலம் இவர்களுக்கு தானாகவே தீண்டாமை என்பது புரட்டு என்று வெளிப்பட்டு விடும். பிறகு பொது ஜன அபிப்பிராயம் நமக்கு அனுகூலமாக திரும்பிவிடும். அப்போதுதான் எதிரிகள் பலாத்கார மேற்பட்டுவிடுமோ என பயந்துவிடுவார்கள். நாம் இப்போது பலாத்காரமாரம்பித்தால் பாமர மக்கள் தொல்லையும் சர்க்கார் தொல்லையும் எதிரிகள் சூழ்ச்சியும் நம்மை தோல்வியிலேயே கொண்டு போய் விட்டுவிடும். நாம் சத்தியாக்கிரகம் செய்வதில் கூட மிக்க ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். ஏனெனில், நாம் எந்தக் கோவிலாவது சத்தியாக்கிரகம் ஆரம்பித்தால், அந்தக் கோவிலால் பொறுக்கித் தின்னும்படியான அர்ச்சகர்கள் கோவிலைப் பூட்டி சாவியைக் கொண்டுபோய் நமது மூட சிகாமணிகளாகிய தர்மகர்த்தாக்களிடம் கொடுத்து "உங்கள் பெரியவர்களால் கட்டப்பட்டு எவ்வளவோ சக்தியுடன் இருந்து வந்த கோயிலின் பெருமையை அழிக்க வந்து விட்டார்கள்; அதை நீங்கள் தான் காப்பாற்ற வேண்டும், இல்லாவிட்டால் உலகமே முழுகிப் போம்" என்று சொல்லி அவனுக்கும் கூடாக சாவி கொடுத்து விட்டுப் போய்விடுவார்கள், கடைசியாக தர்மகர்த்தாவாயிருப்பவன் பாமர மக்களை ஏவி விடுவான். அவர்கள்முரட்டுத்தனமாய்பலாத்காரத்தில் இறங்கும்ஆத்திரத்துடன் வருவார்கள். அந்த சமயத்தில் நாம் ஜாக்கிரதையாய் இருந்து சிறிதும் பொறுமையை இழக்காமல் அவர்களால் ஏற்படும் துன்பங்களை சகித்துக் கொண்டு இருந்து விட்டோமானால் நாம் வெற்றி அடைந்துவிடுவோம் என்பது உறுதி. நல்லவேளையாய் நம்மில் ஒருவர் இருவர் பாமர மக்கள் பலாத்காரத்தால் உயிர்விட நேர்ந்துவிட்டால் கண்டிப்பாய் நமக்கு வெற்றி என்பது திண்ணம். வைக்கம் சத்தியாக்கிரக வெற்றிக்கு முக்கிய காரணம் எல்லாம் நமது பொறுமையும் சகிப்புமே யாகும். அங்குள்ள பாமர மக்கள் நம்மை அடித்தார்கள், கத்தியால் குத்தினார்கள், கண்களில் சுண்ணாம்பு பூசினார்கள், 2, 3 தடவை தண்டித்தார்கள். இவ்வளவுக்கும் சத்தியாக்கிரகிகள் பொறுமையாய் இருந்து சகித்துக் கொண்டிருந்ததால் நாம் வெற்றியடைந்தோம். ஆதலால் பொறுமையும் சகிப்புமில்லாத சத்தியாக்கிரகம்வெற்றிதராது. நாம் சாத்வீகத்துக்கும் உறுதியுடனிருந்தால் சர்க்காரும நம்மை ஒன்றும் செய்துவிட முடியாது. அவர்கள் எத்தனை பேர்களை ஜெயிலில் வைக்க முடியும்? நம்மில் ஒரு ஆள் பாமர மக்களால் அடிபட்டு இறந்தவுடன் சர்க்கார் நூற்றுக்கணக்கான போலீஸ்காரர்களைக் கொண்டு வந்து போட்டு நமக்கு அடிவிழுகாமல் காப்பாற்ற அங்கு காவல் காப்பார்கள். இல்லாவிட்டால் நம்மை கைதி செய்வார்கள். எத்தனை பேரைதான் கைதி செய்ய முடியும் என்பதை பார்த்து விடலாம். ஆகையால், நாம்சாத்வீகத்துடன்சத்தியாக்கிரகம்தொடங்கினால் சமர்க்குபணமும் ஆள்களும் வந்து குவிந்தவண்ணமாய் இருக்கும். திருவாளர்கள் சவுந்திர பாண்டியன், சிவராஜ், பாலகுருசிவம், முனிசாமிபிள்ளை முதலியவர்கள் எல்லாம் இதில் முனைந்து நிற்பதாக வாக்குக் கொடுத்திருக்கையில் உங்களுக்கு பணத்திற்காவது ஆள் களுக்காவது பஞ்சம் இருக்க முடியுமா என்று யோசித்துப் பாருங்கள். ஆகையால் பம்மாய் மாகாண நமது சகோதரர் பூனாவில் சத்தியாக்கிரகம் ஆரம்பித்து நம்மை தட்டி எழுப்பி அதற்காக நாம் அவர்களுக்கு நம்முடைய நன்றியறிதலை தெரிவித்துக் கொள்வதுடன், அவர்களுக்கு ஊக்கமும் தைரியமும் வரும்படி நாம் அவர்களை மனமார பாராட்டக் கடமைப் பட்டிருக்கின்றோம் என்று பேசி முடித்தார். உடனே தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்டு பெருத்த கரகோஷத்துடன் நிறைவேறிற்று. அக்கிராசனர் யாருக்காவது ஆக்ஷேபனை உண்டா என்று கேட்டார். ஒருவர்கூட ஆக்ஷேபிக்கவே இல்லை.

பிறகு அக்கிராசனர் தனது முடிவுரையாக சில வார்த்தைகள் சாத்விகத்தைப்பற்றிபேசினார். பிறகுகடைசியாக திரு. சாமி சகஜானந்தம் தலைவருக்கும் உபன்யாசகர்களுக்கும் வந்தனோபசாரம் சொல்லுகின்றேன் என்று எழுந்து, சத்தியாக்கிரகம் உயர்ந்த ஜாதி இந்துக்களால் செய்ய வேண்டுமே ஒழிய நாம் செய்யவேண்டியதில்லை என்றும், ஜெயிலுக்குப் போனால் பெண்டு பிள்ளைகளுக்கு யார் சாப்பாடு போடுவார்கள் என்றும், திரு. ராமசாமி பல தடவை ஜெயிலுக்குப்போய் அனுபோகமிருப்பதாலும், அவருக்கு சாப்பாட்டிற்கு இருப்பதாலும், அவர் எத்தனை தடவை வேண்டுமானாலும் போகலாம் என்றும், வைக்கம் முதலிய சத்தியாக்கிரகத்தில் ஜெயிலுக்குப்போனவர்கள் இன்னமும் கஞ்சிக்கு அலைகின்றார்கள் என்றும், நாம் நன்றாகப்படித்த பிறகு தான் இவ்வித உரிமைக்கு யோக்கியதை உடையவர்களாவோம் என்றும், இவர்களுக்கு அக்கறை இருக்குமானால் சட்ட சபையில் ஒரு சட்டம் செய்யட்டும் என்றும், சட்ட சபையில் தனக்குப் பார்ப்பனர்களும் பார்ப்பனரல்லாதார்களும் ஆதரவாயில்லை என்றும், ஆதலால் முதலில் பார்ப்பனர்களுக்கும் அல்லாதவர்களுக்கும் போய் பிரசாரம் செய்யட்டும் என்றும் சொன்னார். அக்கிராசனர் இதற்கு விடை அளிக்கும்படி திரு ஈ. வெ. ராமசாமியைக் கூப்பிட்டார்.

பெருத்த கரகோஷத்தினிடையே எழுந்து பேசியதாவது:—

சகோதரர்களே! சாமி சகஜானந்தம் பேசி இருப்பது எனக்கு ஆச்சரியமாய் இருக்கிறது. உங்கள் சமூகத்திற்கு இழைக்கப்பட்டிருக்கும் இழிவை நீக்க வேறு சமூகத்தார், அதிலும் உங்களை கொடுமைப்படுத்தி அதினால் வாழும் சமூகத்தார் பாடுபட வேண்டும் என்று சொல்லுவது பரிகசிக்கத் தக்கதாகும். அந்தப்படி நீங்கள் எதிர்பார்ப்பதும்மிக்க அறியாமையேயாகும். மேல் ஜாதிக்காரர் என்பதன் எப்போதும் உங்களுக்கு நன்மை புரிய வரமாட்டார்கள் அன்றியும்உங்கள் முன்னேற்றத்தில் தடை செய்யாமல் இருக்கவும்மாட்டார்கள். தவிரவும் உங்கள் சுயமரியாதைக் குறைவுக்கு நீங்கள் பாடுபடாமல் வேறு யார் பாடுபடுவார்கள்?

தவிர, நீங்கள்ஜெயிலுக்குப்போனால் உங்கள் பெண்டு பிள்ளைகளை யார் காப்பாற்றுவார்கள் என்று சொல்லுவது கோழைத்தனமே யாகும். தனது பெண்டு பிள்ளையைக் காப்பாற்றவே உலகத்தில்இருக்கும் மனிதன் ஒரு நாளும் சுயமரியாதை அடைய முடியாது நமது நாட்டு பொது அடிமைத்தனத்திற்கே இதுதான் காரணம். "நாம் செத்துப் போனால் நமது பெண்டு பிள்ளைகளை யார்காப்பாற்றுவார்கள்" என்று எண்ணுவது அடிமை தனத்திலெல்லாம் மூடமானது அடிமைத்தனம். நீங்களும் உங்கள் பெண்டு பிள்ளைகளும் வாழ வேண்டியது முக்கியமா அல்லது

உங்களை ஈனஜாதி என்றும் சொல்லி கழுதைகளும் நாய்களும் மலம் தின்னும் பன்றிகளும் நடக்கும் தெருவில் நடக்கக் கூடாதென்றும், மலம் கழுவும் குளங்களில் தண்ணீர் எடுக்கக் கூடாதென்றும், மலத்தைத்தொடுவதை விட உங்களைத் தொடுவது கேவலமென்றும்பிறர்சொல்லுவதிலிருந்தும் அந்தப்படி இன்றும் நீங்கள்நடத்தப் படுவதிலிருந்தும் மீளுவதுமுக்கியமா என்று தான் உங்களைக் கேட்கின்றேன். மேல்கண்ட இழிவை நீக்கிக் கொள்வதற்கு உதவாத உயிரும் அறிவும் எதற்காக உங்களுக்கு வேண்டும்? இந்த நிலையில் உள்ள உங்களுக்கு பெண்டுபிள்ளைகள்தான் எதற்காக வேண்டும். நீங்கள் ஒவ்வொருவரும் என்ன இழிவும் அவமானமும் உங்களுக்கு இருந்தாலும் இருக்கட்டும். உங்கள் பெண்டுபிள்ளைகள்மாத்திரம்சவுக்கியமாய் இருந்தால் போதும் என்று நினைத்தீர்களானால் என்றுதான் நீங்கள் மனிதர்களாகப் போகிறீர்கள். சுயமரியாதை உணர்ச்சி கடுகளவாவது இருந்தால் பெண்டு பிள்ளைகளோடு வாழவேண்டும் என்கின்ற எண்ணம் உங்களுக்குத் தோன்றுமா என்றுகேட்கின்றேன். தவிர, ஜெயிலுக்குப் போகின்றவர்களின் பெண்டு பிள்ளைகளுக்கு வேறு ஒருவன் சாப்பாடுபோடுவதாயிருந்தால்இன்றையதினம் நமது நாட்டில் 100-க்கு தொண்ணூறு பேர்கள் ஜெயிலிலேயே வசிக்க விரும்புவார்கள். பெண்டு பிள்ளைகளுக்கு வேறு ஒருவரின் சாப்பாட்டை எதிர்பார்த்து ஜெயிலுக்குப் போவதில்தியாகமென்ன இருக்கின்றது என்று கேட்கின்றேன். தவிர, நீங்கள் நன்றாகப் படித்த பிறகுதான் இவ்வித உரிமைக்கு அருகர்களாவீர்கள் என்று அவர் சொல்லுகிறார். இதைக்கேட்க எனக்கு மிகவும் வருத்தமாயிருக்கின்றது. இந்த நாட்டில் 100 க்கு 90 பேர் கொஞ்சம்கூட படிக்காதவர்கள், அப்படியானால் அவர்கள் எல்லாம் நாயிலும் பன்றியிலும் கடையாய் இருக்கின்றார்களா என்று கேட்கின்றேன். இன்றையதினம் உங்களை தெருவில் நடக்க வேண்டாம் என்று தடுத்து விட்டு நடக்கும் மற்றவர்கள் எல்லாம் படித்தவர்களா? அன்றியும் உங்களைத்தவிர மற்றபடி நடக்கும் நாய் பன்றிகள் படித்தவைகளா என்று கேட்கின்றேன். தவிர உங்களில் ரிக்ஷாவண்டி இழுப்பவர்கள் முதல் மலம் எடுத்து ஜீவிக்க நிர்ப்பந்தப்பட்டிருப்பவர்கள் வரை எந்தக் காலத்திற்கு படித்து முடிவது? நீங்கள் எந்த காலத்தில் தெருவில் நடப்பது? கோயிலுக்குள் போவது? எந்த காலத்திற்கு இழிவை விலக்கிக் கொள்வது என்பது எனக்குச்சிறிதும்விளங்கவில்லை. தவிரவும், ஒருவன் படித்ததினாலேயே யோக்கியனாய்விடுவானா? மேல்ஜாதியாய் விடுவானா? என்றேகேட்கின்றேன். என்னைப்பொறுத்த வரையில் நான் படித்தவர்களில் அநேகரை அயோக்கியர்கள் என்றே அறிகிறேன். பெரியபண்டிதர்களும்பெரியவித்வான்களும்தேவாரம்பிரபந்தம்ஆகமம் சாஸ்திரம் திருக்குறள் முதலியவைகள் படித்த மதப்பித்தர்களும் அயோக்கியர்களாகவே காணப்படுகின்றார்கள் பெரியபெரிய ஆங்கிலேயர் பட்டம் பெற்றவர்கள் அதைவிட மோசமாயிருக்கிறார்கள். மதப்படிப்போ ஆங்கிலப் படிப்போ சாஸ்திரப் புராணப் படிப்போ படித்தவர்களில் யாராவது ஒரு யோக்கியர் இருக்கிறார் என்று சாமி சகஜானந்தம் அவர்கள் சொல்லுவாரா என்று வணக்கமாய் கேட்கின்றேன். படிப்புக்கும்சுயமரியாதைக்கும்என்ன சம்பந்தம் என்று கேட்கின்றேன். மனிதன் சுயமரியாதை பெறுவதற்கு எதைப்படிக்க வேண்டும்என்று சாமி சகஜானந்தம் சொல்லுகின்றார்என்பது எனக்கு விளங்கவில்லை இந்த நிலையில் கணக்கு போடவும் கையெழுத்து போடவும் தெரிந்துவிட்டால் வயிறு வளர்க்க அது ஒரு வழியாகுமே தவிர இழிவை ஒழித்து விடுமோ? சுயமரியாதையில் கவலையும் உணர்ச்சியும் இருந்தால் எந்தப்படிப்பு இல்லாவிட்டாலும் மனிதனாக இருக்க முடியும் அதில்லாதவன் எந்தப் படிப்பு படித்தாலும் நடைபிணமாகத்தான் சுயநலக்காரனாய்த்தான் வாழ முடியும். இதில் ஒன்றும் சந்தேகமில்லை. என்னுடைய அனுபவத்தையே நான் சொல்லுகின்றேன். தவிர தமக்கு அக்கரை இருக்குமானால் சட்டசபையில் ஒரு சட்டம் செய்யட்டுமே என்கிறார்.

சட்டசபையின் யோக்கியதையை அறிந்த இவர் இப்படிப் பேசுவது எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. சட்டசபையில் யார் இருக்கிறார்கள்? சர்க்காருக்கும், அதிகாரிகளுக்கும் பார்ப்பனர்களுக்கும், நம்பிக்கை உள்ள அடிமையாக எவர் நடந்து கொள்ளுகின்றார்களோ அவர்களே பெரிதும் நியமனம் பெறுகிறார்கள். 22 ஆயிரம் 30 ஆயிரம் 50 ஆயிரம் ரூபாய் செலவு செய்கின்றார்களோ, அவர்களே பெரிதும் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இந்தக் கூட்டத்திற்கு சுய புத்தியோ, சுயமரியாதை உணர்ச்சியோ, பொதுநல ஆசையோ இருக்க முடியுமா என்று கேட்கின்றேன். சாமி சகஜானந்தம் இந்தத் தடவை ஒரு சட்டம்கொண்டு போனால் அடுத்ததடவை இவரை சர்க்காரும் பார்ப்பன அதிகாரிகளும் பார்ப்பனரல்லாத மேல்ஜாதியார் என்னும் அதிகாரிகளும் கண்டிப்பாய் நியமிக்க மாட்டார்கள் என்பது எனக்குத்தெரியும். இவ்வளவையும் மீறி யாராவது சட்டம் கொண்டு போவதாயிருந்தாலும் அச்சட்டத்தை சட்ட சபைக்குக் கொண்டுவர ராஜப்பிரதிநிதி அனுமதி கொடுப்பாரா என்கின்ற நம்பிக்கை எனக்கு இல்லை. ஏனெனில், மக்கள் பல ஜாதிகளாய் உயர்வு தாழ்வாய் ஒருவரோடு ஒருவர் போராடிக்கொண்டு இருந்தால் தான் நமது சர்க்கார் நிம்மதியாய் இருக்கமுடியும். இல்லாவிட்டால் நாம் எல்லோரும் ஒன்றுசேர்ந்து சர்க்காரின்மீது பாய்ந்துவிடுவோம் என்கின்ற பயம் சர்க்காருக்கு எப்போதும் உண்டு. ஆகையால், சுலபத்தில் சர்க்காரார் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். நாம் தகுந்த கிளர்ச்சி செய்து தக்க தியாகம் செய்வதின் மூலம் பொதுஜன அபிப்ராயத்தை நம் பக்கம் திருப்பிக்கொண்டு செல்வாக்குடன் இருக்கின்றோம் என்றால் சர்க்கார் ஒரு சமயம் இணங்கிவரக் கூடும். 25 வருஷமாய் விவகாரத்தில் இருந்த சாரதா மசோதாவுக்கு இதுவரை சாக்குப்போக்கு சொல்லி வந்த சர்க்கார் இன்று இணங்கியதின் கருத்து நம்முடைய கிளர்ச்சியே யாகும். மிஸ் மேயோ எழுதின புஸ்தகமும் சிவா என்கின்ற புஸ்தகமும் சைமன் கமிஷனை ஆதரித்ததற்கு கூலியும் வெளி அரசாங்கங்கள் நமது அரசாங்கத்தைப் பார்த்து நகைக்குமே என்கின்ற பயமும் "இனிமேல் நீங்கள் எங்களுக்கு விரோதமா யிருந்தால் உங்கள் சாஸ்திரத்தில் இதுவரை கைவைக்காமல் இருந்து உங்களுக்கு அனுகூலம் செய்துகொண்டு வந்ததிலிருந்து விலகிக் கொள்வோம்" என்பதை பார்ப்பனர்களுக்குக் காட்டி, அவர்களை மிரட்டுவதற்காகவுமே சர்க்கார் அனுகூலமா யிருந்தார்கள் என்று நினைக்கின்றேன். ஆகையால் சட்டம் செய்வது என்பது சுலபமான வேலையல்ல. இன்றைய சர்க்கார் வெள்ளைக்காரர், பார்ப்பனர், பணக்காரர் ஆகிய மூவர்களுடைய கூட்டு வியாபாரமாய் நடை பெறுகின்றது. இம்மூன்று கூட்டமும் ஏழைகளுக்கு நன்மை செய்யவோ தீண்டாமையை விலக்கவோ சுலபத்தில் சம்மதிக்குமா என்று கேட்கின்றேன். தவிரவும் சீர்திருத்தமும் சுயமரியாதையும் சட்டம் கொண்டுவந்து ஓட்டு வாங்கி நிறைவேற்றி பெற்றுவிடலாம் என்று நினைப்பது ஒருநாளும் முடியாத காரியம். ஓட்டு என்பது கூட்டுக் கொள்ளையே தவிர வேறில்லை. என்னுடைய உரிமையை கொடுக்கின்றாயா அதற்காக உயிர் விடட்டுமா என்கின்ற கொள்கையுடைய மக்கள் தான் எங்கும் வெற்றி பெற்றிருக்கின்றார்கள். இந்தப்படி நடக்கின்றாயா? அல்லது ஜெயிலில் பிடித்து போடட்டுமா என்று சொல்லும் அரசாங்கம் தான் சீர்திருத்தங்கள் செய்திருக்கின்றது. அதை விடுத்து இம்மாதிரி காரியங்களுக்கு ஓட்டும் சட்டசபையும் ஜாலவேடிக்கையும் வேடிக்கைபார்க்கும் விளையாட்டுப் பிள்ளை நிலையங்களே யாகும்.

தவிர இங்குசெய்யும்பிரசாரத்தை பார்ப்பனர்களுக்கும் அல்லாதவர்களுக்கும் போய் செய்யட்டும் என்றுசொல்லுகின்றார். பார்ப்பனர்கள் நமது பிரசாரத்தினால் புத்தி திருத்தி விடுவார்கள் என்று எதிர் பார்ப்பது சுத்தப் பயித்தியக்காரத் தனமாகும். அவர்கள் தெரியாதவர்களாய் இருந்தால் நியாயம் சொல்லலாம். நன்றாய் தெரிந்தே எங்கு தங்கள் ஆதிக்கமும் சோம்பேறிப் பிழைப்பும் போய் விடுகின்றதோ என்று சுயநலக்கருதி ருக்குப் பிடிவாதமாய் இருப்பவர்களை நாம் எந்தப் பிரசாரத்தால் எப்படி மாற்றக்கூடும்? பார்ப்பனரல்லாதவர்களோ முக்கால் வாசிப்பேர் பார்ப்பனரைப் பின்பற்றுபவர்களாகவும் பார்ப்பனருக்கு தாசிமகனுயிருந்தாலும் சரி நாம் பறையனுக்கு மேலா யிருந்தால் போதும் என்று முட்டாள் தனமாய் கருதிக்கொண்டிருக்கின்றவர்கள். என்றாலும் நம்மால் கூடியதை செய்துதான் வருகின்றோம். எதற்கும் உங்கள் முயற்சியும் சுயமரியாதை உணர்ச்சியும் இல்லாவிட்டால் ஒரு காரியமும் நடவாது. தவிரவும் இத்தீண்டாமை ஒழிவதற்கு இது ஒரே ஒரு மார்க்கம் தான் என்று நான் சொல்லவரவில்லை. தீண்டாமைஒழிய வேண்டுமானால் மதத்தை விட்டு விடுங்கள், அல்லது ஏதாவது ஒரு மதம் வேண்டுமேனால் தீண்டாமை இல்லாத மதத்தைத் தழுவலாம். உதாரணமாக மகமதிய மதத்தில் மனிதனில் உயர்வு தாழ்மையும் தீண்டாமையும் இல்லை. இனியும் உங்களுக்குத் தோன்றுகின்ற மதத்தை தழுவலாம். ஆகவே, நீங்கள் தயவு செய்து நான சொல்லுவதையும் சாமி சகஜானந்தம் சொல்லுவதையும் பெருமையுடனும் சுய புத்தியுடனும் ஆராய்ச்சிசெய்து பார்த்து உங்களுக்கு சரி என்று தோன்றியபடி நடவுங்கள். என்று பேசி முடித்தார். பிறகு சாமி சகஜானந்தம் எழுந்து நான் திரு ராமசாமி பேசியதை மறுக்கவில்லை என்றும், எங்களிடம் செய்யும் பிரசாரத்தை பார்ப்பனரிடமும் உயர்ந்த ஜாதி இந்துக்களிடமும்செய்யக்கூடாதா என்று சொல்வதாகவும் சொல்லி வந்தனோபசாரம் சொல்ல கூட்டம் முடிவுபெற்றது.

---

## நோட்டீஸ்


கோயம்புத்தூர் தென் பிரிவு
பஞ்சாயத்து கோர்ட்டு
1929-ம் அ. செ. 386.

வாதி:—வெ: அருணாசலம் செட்டியார்

பிரதிவாதி:—சேலம் கால்நடை ரிஜிஸ்திரேஷன் பாங்கி லிமிடெட் காரியதரிசி, ராஜகோபால் செட்டி.

இதனால் பிரதிவாதிக்கு தெரியப்படுத்தும நோட்டீஸ் என்னவென்றால், வாதி பிரதிவாதி பேரில் இந்த கோர்ட்டில் கணக்குப்படி ரூ 46-5-0 க்கு ஒரு தாவா தொடர்ந்திருப்பதால் மேற்படி தாவா 1929-ம் வருஷம் நவம்பர் மாதம் 4-ந் தேதி விசாரணைக்கு போடப்பட்டிருக்கிறது. அந்தத் தேதியில் பிரதிவாதியாவது அல்லது அவருடைய ஏஜண்டாவது நேரில் ஆஜராகி தகுந்த ஆட்சேபனை செய்யாதிருக்கும் பட்சத்தில் மேற்படி கெம்பர் ஒரு கட்சியாய் தீர்ப்பு செய்யப்படும்.

சி. ஆர். ஹரிராவ்,
20/114, சாணுவன் தெரு,
கோயம்புத்தூர்.



"அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே"

குடி அரசு

சென்னை 1929 அக்டோபர் 27உ

# இராஜகோபாலாச்சாரியின் தேசீயம்

சென்ற வாரம் பார்ப்பனர்களின் தேசியம் என்று தலையங்கமிட்டு திரு. சத்தியமூர்த்தி அய்யர் முதலிய பூரண சுயேச்சை வாதிகளுடையவும், காங்கிரஸ் வாதிகளுடையவும் தேசியத்தின் யோக்கியதையைப் பற்றி எழுதி இருந்தோம். இந்த வாரம் திரு. சி. இராஜகோபாலாச்சாரி போன்ற "ஒத்துழையா தியாகிகளின்" தேசியத்தைப்பற்றி எழுத வேண்டி நேரிட்டுவிட்டது. அதாவது, ஸ்ரீவில்லிபுத்தூர் தாலூக்கா காங்கிரஸ் மகாநாட்டிற்கு அக்கிராசனம் வகித்த திரு. சி. ராஜகோபாலாச்சாரியார் தமது தலைமை உபன்யாசத்தில் முக்கம போல் தேசியப்புரட்டு பரிபாஷையாகிய தீண்டாமை, கதர், மதுவிலக்கு ஆகிய மூன்று வார்த்தைகளை உபயோகித்துவிட்டு, பார்ப்பன தேசிய சூழ்ச்சிபரிபாஷையாகிய சாதித்துவேஷத்தை ஒழிக்கவேண்டும் என்னும் வார்த்தையைச் சொல்லிவிட்டு சுயமரியாதை இயக்கம் தெய்வங்களையும், அவதாரங்களையும், புண்ணிய ஸ்தலங்களையும், பெரியோர் சாஸ்திரங்களையும் நிந்திப்பதாகச் சொல்லி பாமர மக்களை கிளப்பி விட பார்த்து இருக்கின்றார். சமீபத்தில் இவரால் வடநாட்டிலிருந்து அழைத்துவரப்பட்ட திரு. பட்டேல் அவர்களுக்கு இவர் எதைச் சொல்லிக்கொடுத்து நம்மையும் சுயமரியாதை இயக்கத்தையும் வையச்சொன்னாரோ அதேவார்த்தைகளை அப்படியே சற்று மெருகுகொடுத்து இப்பொழுது இவரும் சொல்லி இருக்கிறார். திரு. ராஜகோபாலாச்சாரியார் தீண்டாமை விலக்கு தத்துவம் நாம் அறியாததல்ல. அவருடன் நாம் காங்கிரசிலும் ஒத்துழையாமையிலும் இருக்கும்போது அவரது தீண்டாமைவிலக்கை நேரில் கண்டிருக்கின்றோம். அதாவது, தீண்டாமை ஒழிப்பதற்கென்று காங்கிரசில் ஒதுக்கிவைத்த பணத்தை முழுதும் தன் பேரில் பிரித்துவைத்துக்கொண்டு அதனால் ஒரு காரியமும் செய்யாமல், செய்யவும் விடாமல் காப்பாற்றிய வீரராவார். செய்கைதான் இப்படி என்றாலோ, காரியத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி கூட்டம் பிறவியில் ஜாதி வித்தியாசம் கூடாது என்று தீர்மானித்தவுடன் ராஜினாமா எழுதிக்கொடுத்து தனது சிநேகிதர்களையும் ராஜினாமா கொடுக்கச்செய்தவர். கதர் விஷயத்தில் இவர்களது ஏழைகளைக் காப்பாற்றும் நாணயமும் கதரால் நாட்டிற்கு க்ஷேமமுண்டாகும் நாணயமும் கதரின்பேரால் பார்ப்பன ரல்லாதார்களிடத்தில் பத்து லட்சக்கணக்காய் ரூபாய் வசூலித்து கதர் திட்டத்தில் 100-க்கு 90-பேர் திரு. ராஜகோபாலாச்சாரியின் ஜாதியாரே உட்கார்ந்து கொண்டு வயிறு வளர்ப்பதும், தாங்கள் என்ன அக்கிரமம் செய்தாலும் தங்களை விலக்க முடியாமலும், யாரும் கணக்கு கேட்க முடியாமலும் இருக்கும்படி செய்து கொண்ட சூழ்ச்சியும், அதில் நடக்கும் அக்கிரமங்களை அன்னியர் எழுதிக் கேட்டால் அதற்கு அவர்கள் சொல்லும்பதிலும், திரு. ராஜகோபாலாச்சாரிக்கும் திரு. எஸ். ராமநாதனுக்கும் இந்த ஒருவாரமாக நடக்கும் கடிதப்போக்குவரத்தை கவனித்தவர்களுக்கே நன்றாய் விளங்கும். மற்றபடி இவரது மதுவிலக்கு கவலையைப் பற்றி தெரியவேண்டுமானால், தேர்தல் வரும்போதெல்லாம் கள்ளுக்கு மரம் பதினாயிரக்கணக்காய் விட்டுக்கொண்டிருக்கும் திரு. சி. வி. வெங்கிட்டரமணய்யங்காருக்கு மதுவிலக்குப் பேரைச் சொல்லி ஓட்டு வாங்கிக் கொடுத்தது, தனது இஷ்டப்படி நியமிக்கப்பட்ட மந்திரிகள் இருக்கும் காலத்தில் மதுவைப்பற்றி ஒரு வார்த்தையும் பேசாமல் இருப்பதும், மறுபடியும் தேர்தல் வரும்போது மாத்திரம் பார்ப்பனர்களும் அவர்களது அடிமைகளும் மாத்திரம் சட்ட சபைக்கு வரும்படியாகச் செய்வதற்கு மதுவிலக்கை ஒரு சூழ்ச்சியாக உபயோகிப்பதுமான தந்திரங்களைப் பார்த்தால் விளங்காமல் போகாது. தவிர, ஜாதித்துவேஷத்தை ஒழிக்க வேண்டும் என்பது.

"சிறந்த தேசத் தொண்டர்களில் சிலர் சமூக சீர்திருத்தம் செய்யது வேஷத்தை சாதனமாகக்கொண்டது தேசத்தின் துரதிர்ஷ்டம்" என்கின்றார். இதில் தீண்டாமையை ஒழிக்கவேண்டும் என்பவர்களிடத்தில் ஜாதித்துவேஷம் இருக்கக் கூடுமா? தீண்டாமை ஒழிக்க இணங்காதவர்களிடத்தில் ஜாதித்துவேஷம் இருக்கமுடியுமா என்பதை வாசகர்கள்தான் உணரவேண்டும். தீண்டாமையை ஒழிப்பதனாலும் சமூகத்தில் ஏதாவது சீர்திருத்தம் செய்யவேண்டுமானாலும் தீண்டாமையினால் பலன் அனுபவிப்பவர்களுக்கும் சமூகக் கொடுமையினால் நலமனுபவிப்பவர்களுக்கும் நஷ்டமாவது மனத்தாங்கலாவது இல்லாதிருக்கமுடியுமா? என்று கேட்கின்றோம். இந்த மனத்தாங்கலுக்குப் பயந்தால் ஒருசிறு காரியத்தையாவது நடத்த முடியுமா என்பதை யோசித்துப்பார்க்க விரும்புகின்றோம். அயோக்கியர்களையும் சுயநலக்காரர்களையும் சூழ்ச்சிக்காரர்களையும் மக்கள் வெறுப்பதும், அவர்கள்மீது மக்களுக்கு துவேஷமேற்படுவதும், உலகம் அவர்களை நிந்திப்பதும் இயற்கை என்பதையும், "இயற்கையைவெல்ல யாராலும் முடியாது" என்று சொல்லும் திரு. இராஜகோபாலாச்சாரியாரே உணராமல் போனது "தன் குற்றம் தனக்குத் தெரியாது" என்கின்ற பழமொழிக்கு இரும்புப் பூண் போட்டதுபோலாகின்றது. "சீர்திருத்தக்காரர்கள் அந்தரங்க சுத்தியோடு வேலை செய்தால் யாருக்கும் எவ்வித தீமையும் விளையாது" என்கின்றார். இது பயனற்ற வார்த்தை என்றே சொல்லுவோம். ஏனெனில், எவ்வளவு நல் லெண்ணத்தோடானாலும் ஒரு கேட்டை விலக்க முயற்சித்தால் அக்கேட்டினால் பிழைப்பவனுக்கு கெடுதி ஏற்பட்டுத்தான் தீருமே ஒழிய அது கேட்டை விலக்குபவனின் நல்ல எண்ணத்தினால மறைந்துவிடாது. ஒரு சமயம் அந்தக் கெடுதி அவன நியாயமாய் அனுபவிக்க வேண்டிய கெடுதியா? அல்லது அநியாயமாய் அனுபவிக்கும் கெடுதியா? என்று வேண்டுமானால் யோசிக்கக்கூடியதாயிருக்கும். அதாவது, எவ்வளவு நல்லெண்ணத்தோடு காத்திருந்து ஒருதிருடனைப்பிடித்தாலும் பிடிபட்ட திருடன் நம்மை குத்திவிட்டு ஓடவோ முடியாவிட்டால் வசைபாடவோ செய்வானே ஒழிய நமது நல்லஎண்ணம் அவனை "என்னைபிடித்துவிட்டாயே புண்ணியவானே" என்று புகழச் செய்யாது என்பதை உறுதியாய்ச் சொல்லுவோம். தவிர 'ஜாதித்துவேஷம் ஒழிய வேண்டும் என்று எல்லோரும் தினந்தோறும் கடவுளை வேண்டிக்கொள்ளவேண்டும்' என்று உபதேசம் செய்கின்றார். திரு. ராஜகோபாலாச்சாரிக்கு உள்ள கடவுள் பக்தியும் அவருடைய இருதய சுத்தமும் நமக்கு நன்றாய்த் தெரியும். ஆதலால், இது விஷயத்தில் அவருக்கு நாம் ஒன்றும் சொல்ல வரவில்லை. ஆனால், அவர் யாரைப் பார்த்து இப்படிச் சொன்னாரோ அவர்களைப் பார்த்து ஒன்று கேட்கின்றோம். அதாவது கடவுளால் துவேஷத்தை ஒழிக்கக்கூடும் என்பதில் கடுகளவு நம்பிக்கையாவது திரு. ராஜகோபாலாச்சாரியார் முதலிய யாருக்காவது இருக்குமானால் திரு. ராஜகோபாலாச்சாரியார் எதை துவேஷம் என்று கருதி இருக்கின்றாரோ அது சிறிது கூட துவேஷமல்ல வென்றும், அறியாமையினாலோ தந்திரத்திற்காகவோதான் இந்தப்படி சொல்லப் படுகின்றதென்றும், உண்மையாய்—உண்மையாய்—உண்மையாகவே சொல்லுகிறோம். ஏனெனில் துவேஷத்தை அழிக்கசக்தியுள்ள கடவுள் அறிவுடையவராய் இருந்தால் மக்களுக்கு கெடுதியைத தரும் துவேஷத்தை உற்பத்தி செய்திருக்கவேமாட்டார். அவரில்லாமல் துவேஷம் ஏற்படவே முடியாது என்பதுதான். தவிர "மனிதன் தனக்கு எல்லாம் தெரிந்து விட்டதாகக் கருதி அகம்பாவப்படக்கூடாது' என்கின்றார். இது எதற்கு ஆக சொல்கிறார் என்பது ஒருபுறமிருந்தாலும் மனிதன தனக்கு "ஒன்றும் தெரியாது" "எல்லாவற்றிற்கும் வேறு காரணமிருக்கும்" என்று கருதுகிற காரணமே அடிமைத்தனத்தின் ஜீவநாடி என்பது நமது அபிப்பிராயம். அன்றியும் தனக்கு எல்லாம் தெரியும் என்று நினைப்பதைவிட தனக்கு ஒன்றுமே தெரியாது என்பதினால் அதிகக்கெடுதியே உண்டாகுமே தவிர சிறிதும் நன்மை உண்டாகாது.

ஆதலால் இவைகள் எல்லாம் வெறும் அலங்கார வார்த்தைகளே தவிர காரியத்திற்கானவைகள் அல்ல தவிர தெய்வங்களையும், அவதார புருஷர்களையும், புனித ஸ்தலங்களையும், குற்றம் கூறுவதாகவும் அது பெரிய பேடித்தன மென்றும் சொல்லுகின்றார்.

இங்கு வாசகர்களுக்கு ஒன்று சொல்லுகின்றோம். அதாவது, எவை தெய்வங்கள், அவற்றுள் எந்த தெய்வங்களை என்ன குற்றம் சொன்னோம்? யார் அவதார புருஷர்கள், அவர்களின் எந்த குணத்தை குற்றம் சொன்னோம்? எது புனிதஸ்தலம், அதை எப்படி குற்றம் சொன்னோம்? என்பதைப்பற்றி ஒரு வார்த்தையாவது கூறாமலும் நாம் சொன்னதாகச் சொல்லப்படும் குற்றங்களுக்கு ஒரு சமாதானமும் சொல்லாமலும் சும்மா பாமரமக்களின் முட்டாள் தனத்தையும் வெறியையும் தனக்கு ஆதாரமாய் வைத்துக்கொண்டு தனது மனதார சூதாய்பேசி பாமர மக்களை நம்மீது ஏவிவிட முயற்சிப்பது பேடித்தனமா? அல்லது நாம் உள்ளதை உள்ளபடி நினைத்து நினைத்தபடி வெளியில் ஆதாரங்களுடன் எடுத்துச் சொல்லுவது பேடித்தனமா என்று யோசித்துப் பார்க்கும்படி வேண்டிக் கொள்ளுகின்றோம். தவிர, "பிராமணர் பிராமணரல்லாதார் சண்டை இல்லாவிட்டால் தென்னாட்டு பிராமணர்கள் பாலிய விவாகத்தடை மசோதாவை எதிர்த்திருக்க மாட்டார்கள்" என்று சொல்லுகின்றார். இது உண்மையாய் இருக்குமானால், 'பிராமணர்கள் மனப்பான்மையின்' யோக்கியதையை அறிவதற்கு வேறு ஆதாரம் வேண்டுமா என்று கேட்கின்றோம். அதாவது, நமது நாட்டில் என்ன காரியத்திற்காக பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் சண்டை இருக்கின்றதோ அதற்காகத்தான் பார்ப்பனர்களுடைய சீர்திருத்த எதிர்ப்பும் இருக்கின்றது என்று சொல்லுகிறார். நாமும் இதைத்தான் சொல்லுகின்றோம் பார்ப்பனரல்லாதார் பார்ப்பனருடன் போராடுவதின் முக்கிய தத்துவம் பார்ப்பனரல்லாதாரைவிட பார்ப்பனன் பிறப்பினால் மேலானவன் என்கின்ற ஆதிக்கம் இருக்கக் கூடாது என்பதற்காகவே ஒழிய வேறல்ல. திரு. ராஜகோபாலாச்சாரியார் சொல்லுகின்றபடியே பார்ப்பனர்கள் தங்கள் ஆதிக்கத்தை நிலை நிறுத்தவே அதாவது, பார்ப்பனரல்லாதாருக்கு விரோதமாகவே எவ்வித சீர்திருத்தங்களையும் எதிர்க்கிறார்கள் என்றாகின்றது. இது தன்னை அறியாமல் சொன்ன உண்மை என்றே கருதுகிறோம். கடைசியாக பொதுஜனங்களுக்கு ஒன்று சொல்லுகின்றோம்.

நாட்டில் எந்த சீர்திருத்தமோ சீர்திருத்த இயக்கமோ புறப்பட்டாலும் பார்ப்பனர்கள் அதை நாஸ்திகம் என்றும், தெய்வ நிந்தனை என்றும், சாஸ்திர நிந்தனை என்றும், அவதார நிந்தனை என்றும், புண்ணியஸ்தல நிந்தனை என்றும், தேசத்துரோகம் என்றும், மதத்துவேஷம் என்றும், ஜாதித்துவேஷம் என்றும், பழிகளைச் சுமத்தி பாமரமக்களை ஏய்த்தே இதுவரை தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்தி வந்திருக்கின்றார்கள். அந்தமுறையையே நமது திரு. ராஜகோபாலாச்சாரியார் பின்பற்றியது சிறிதும் அதிசயமல்ல. ஏனெனில், திரு ராஜகோபாலாச்சாரியார் வருணாசிரம தர்மத்தில் மிக்க நம்பிக்கைகொண்டவர். பெரியவர்கள் செய்ததெல்லாம் நன்மையானதே என்று சொல்லுபவர். மூடர்களுக்கு மூடப்பிள்ளையும், புத்திசாலிக்குப் புத்திசாலிப் பிள்ளையும் யோக்கியனுக்கு யோக்கியப்பிள்ளையும், அயோக்கியனுக்கு அயோக்கியப் பிள்ளையும் தான் பிறக்கும் என்றும் சொல்லி இருக்கிறார். ஆகதனது முன்னோர்களுடைய இழிவே தனக்கு இருப்பதாகவும் குணமே மிகவும் மேலானதென்றும் கருதிக் கொண்டிருப்பவர் இப்படியெல்லாம் சொன்னதில் ஆச்சரியமொன்றுமில்லை. ஆனால் இவர் சொன்னதையெல்லாம் பொது ஜனங்கள் நம்பிவிடுவார்களா என்பதுதான் நாம் முடிவுகாட்டவேண்டிய விஷயமாகும். முடிவாக பார்ப்பனர்கள் காங்கிரசும் தேசியமும் பூரண சுயேச்சையும் ஒத்துழையாமையும் என்ன தத்துவத்தைக்கொண்டது என்பதை பொது மக்கள் அறியவேண்டியே இதை எழுதினோம்.

# விதவா விவாகம்

## திரு: ஈ: வெ: இராமசாமியாரின் எழுச்சியான சொற்பொழிவு

விதவா விவாக சகாய சபையின் ஆதரவில், சென்னை பிரம்ம சமாஜ் கட்டிடத்தில் 19-10-29 தேதியில் திரு ஈ. வெ. ராமசாமி அக்கிராசனத்தில் ஒரு கூட்டம் கூடிற்று.

அக்கூட்டத்தில் திருவாளர்கள் ராமபத்திர சர்மா, மணி திருநாவுக்கரசு, டி. எம். நடராஜன், ராஜா, ஆர் நடேசய்யர், வெங்கடேசய்யா ஆகியவர்கள் பேசினார்கள். திரு. ஈ. வெ ராமசாமியின் முடிவுரையாவது:—

சகோதரிகளே! சகோதரர்களே! உலகமானது இப்போது எம்மாதிரியான முன்னேற்றத்தில் போய்க் கொண்டிருக்கின்றதென்பதை நாம் பார்த்து வருகின்றோம். மனிதனது புத்திக்குப்படாத அற்புத சக்திகளெல்லாம் மனிதனிடமிருந்து வெளியாகிக்கொண்டு வருகின்றது. சையன்ஸ் அதாவது வஸ்து தத்துவ சாஸ்திர ஆராய்ச்சியின் பயனாக மகா அதிசயங்களையெல்லாம் மனிதன் செய்கின்றான். சமீப முயற்சி என்னவென்றால், சந்திர மண்டலத்திற்குப் போக முயற்சிக்கத் தொடங்கி செவ்வாய் மண்டலத்திலிருந்து சமாச்சாரப் போக்குவரத்துகள் நடத்தப்பட்டு விட்டன. மற்றும் அடுத்த 500 வருடத்தில் மனிதன் அடையக்கூடிய முற்போக்கை இப்போதே நிர்ணயிக்கப்படுகின்றது. எனவே, நம்மைச் சுற்றியுள்ள உலகம் இந்நிலையிலிருக்க நாமோ நமது ஆராய்ச்சிக்காரர்களால் 3000 வருஷத்திற்கு முன்னால் நாம் இருந்த நிலையை அடைய வேண்டுமென்று தொல்காப்பிய ஆராய்ச்சி செய்யப்பட்டு பெருமைபடுகின்றோம். அப்படிப்பட்ட தொல்காப்பியம் 2000 வருஷத்திற்கு முந்தியதா 3000 வருஷத்திற்கு முந்தியதா என்கின்ற ஆராய்ச்சி இன்னமும் நமக்குள் முடியவில்லை. ஆராய்ச்சிக்காரர்கள் யோக்கியதை இப்படி என்றால், நமது பண்டிதர்களுடைய யோக்கியதையோ சமணர்கள் கழுவேறப்பட்டார்களா அல்லது தானாக கழுவேறினார்களா என்பதற்கு சமயம்போல் பேச ஆதாரம் தேடிக்கொண்டிருக்கின்றார்கள். இவர்களில் தேசியப் பண்டிதர்களின் யோக்கியதையோ தேசிய மேடையில் ஏறி தாயைப்புணர்ந்தும் தகப்பனைக் கொல்லும் மோட்சத்திற்குப் போன புராணத்தையும் பெண்ஜாதியைக்கூட்டிக்கொடுத்து மோட்சத்திற்குப் போன புராணத்தையும் படித்தால் சுயராச்சியம் வந்துவிடுமென்ற தேசியப் பிரசாரம் செய்கின்றார்கள்.

இவ்வளவும் போதாமல் இந்த 20 வது நூற்றாண்டின் இன்றையதினத்தில் நாம் கூட்டம் கூடி விதவைகள் கலியாணம் செய்துகொள்ளலாமா, வேண்டாமா என்கின்றதற்கு உள்ள மதத்தின் தடைக்கும் சாஸ்திரத்தின் ஆட்சேபத்திற்கும் பதில் சொல்ல இங்கு உட்கார்ந்திருக்கின்றோம்.

சகோதரர்களே! நமது நாட்டு நிலையைக் குறிக்க நமக்கு இதைவிட வேறுயோக்கியதை என்னவேண்டும்.

நமது ஆராய்ச்சியும், அறிவும், ஊக்கமும், முயற்சியும் நமது காலமெல்லாம் இந்தமாதிரி காரியங்களுக்கே உபயோகித்துக்கொண்டிருந்தோமானால் நாம் என்றுதான் மனிதர்களாவது?

விதவைகளுக்கு விவாகம் செய்யலாமா என்பதற்கும் சாஸ்திரத்திற்கும் என்ன சம்பந்தம் என்பது எனக்கு விளங்கவில்லை ஒரு சமயம் விவாகம் எந்த மாதிரி செய்வது என்பதைப்பற்றி யோசிப்பது என்றாலும் சமாதானம் சொல்லலாம். அப்படிக்கின்றி விவாகம் செய்யலாமா வேண்டாமா என்பதற்கே சமாதானம் சொல்லுவதென்றால் அதுசுத்தமுட்டாள் தனமென்று தோன்றவில்லையா? என்னைக்கேட்டால் இந்தக் கொடிய நாட்டில் விதவைகளுக்கு துன்பத்தை இழைத்தவர் நமது ராஜாராம் மோகன்ராய் அவர்கள் என்பதே எனது அபிப்பிராயம். ஏனெனில், அவரால்தான் நமது விதவைகள் இருக்கவும் கஷ்டப்படவும் ஏற்பட்டு விட்டது. எப்படியென்றால், ராய் மோகன் அவர்கள் உடன்கட்டை ஏறும் வழக்கத்தை நிறுத்தாதிருந்திருப்பாரானால் ஒவ்வொரு பெண்டும் புருஷன் இறந்த உடனே அவனோடு கூடவே, அவன் பக்கத்தில் "மாங்கல்ய ஸ்திரீ"யாகவே உயிருடன் கட்டையில் வைத்து சுடப்பட்டு "சுற்பு லோகத்தை" அடைந்து "மோட்சத்தி"லிருந்திருப்பாள். கற்புலோகமும் மோட்சமும் எவ்வளவு புரட்டாயிருந்தாலும் ஒன்று மாத்திரம் நிச்சயம்:- அதாவது உயிருடன் சுடப்பட்ட பெண்ணுக்கு ஒரு மணி நேரம்தான் கஷ்டமிருந்திருக்கக் கூடும். ஆனால், அந்தப்படி சுடாமல் காப்பாற்றப்பட்ட பெண்ணுக்கு அதன் ஆயுள் கால முழுவதும் அங்குல அங்குலமாக சித்திரவதை செய்வது போன்ற கஷ்டத்தை வினாடிதோறும் அனுபவித்து வரநேரிடுகின்றதா இல்லையா என்றுதான் கேட்கின்றேன். இப்பொழுதும் விதவைகளுக்கு உடனே மணம் செய்ய வேண்டும். மணமில்லாதபெண் இருக்கக் கூடாது என்ற நிர்ப்பந்தம் கொஞ்ச காலத்திற்காவது இருக்க வேண்டும். இல்லையானால் உண்மையான ஜீவகாருண்யத்தை உத்தேசித்து பழைய உடன்கட்டை ஏறும் வழக்கத்தையாவது புதுப்பிக்கவேண்டும் என்பதுதான் எனது அபிப்பிராயம். ஏனெனில், விதவைத் தன்மையை நினைத்தால் வயிறு பற்றி எரிகிறது நெஞ்சம் கொதிக்கிறது. மனிதனுக்கு தன் பெண்ஜாதி சமீபத்தில் இல்லாத காலங்களில் போக இச்சை ஏற்பட்டால் உடனே போக மாதர்களை கொண்டு அவ்விச்சை தணிக்க வேண்டியதும் மிருகங்களுக்கு ஏற்படும் நிலைமை தீர்த்துக் கொள்ள மைதான வெளியில் சொரிகல் நட்டு வைக்க வேண்டியதும், 32 தர்மங்களில் இரண்டு தர்மமாகக் கொண்டு கோயில்களில் தாசிகளை வைத்தும் கிராமங்கள்தோறும் சத்தங்களில் சொரி கல் நட்டு வைத்தும் இருக்கிறார்கள். ஆனால். இப்பேர்ப்பட்ட ஜீவகாருண்ய அறிவு நமது பெண்மக்களிடம் மாத்திரம் ஏன் காட்ட முடியாமல் போய் விட்டது என்பதை நினைக்கும்போது ஜீவகாருண்ய புரட்டும் 32 தர்மங்களின் புரட்டும் நன்றாய் விளங்கும்.

அதோடு மாத்திரமல்லாமல் அம்மாதிரி ஜீவகாருண்யம் கூடாது என்பதற்கு சாஸ்திரம் இருப்பதாயும், அந்த சாஸ்திரம் கடவுளால் சொல்லப்பட்டதாகவும் மனிதர்கள் என்பவர்கள் சொல்ல வருவார்களானால் அப்படிப்பட்ட சாஸ்திரத்தையும் கடவுளையும் மனிதர்களையும் என்ன செய்வது என்பதை நீங்கள்தான் யோசித்து முடிவு கட்டவேண்டும்.

ஒரு பெண்ஜாதியை இழந்தவன், கலியாணம் செய்துகொள்ளலாமா வேண்டாமா என்பதைப்பற்றி எந்தப் பெண்ணாவது அபிப்பிராயம்

சொல்ல வருகிறார்களா? அப்படிக்கிருக்க புருஷனை இழந்தவள் கலியாணஞ்செய்து கொள்ளலாமா? வேண்டாமா? என்பதைப்பற்றி அபிப்பிராயம் சொல்ல புருஷனுக்கு என்ன பாத்தியம் என்பது நமக்கு விளங்கவில்லை. நாட்டில், சிறப்பாக நமது சமூகத்தில் விதவைகள் கர்ப்பமடைந்து கர்ப்பத்தை அழிப்பதும், பிள்ளைகளைப்பெற்று கொலைசெய்வதும், வீடுகளைவிட்டு பெற்றோர் அறியாமல் நினைத்த புருடர்களுடன் ஓடுவதும், பிறகு பொது விபசாரிகளாகி குச்சுகள் மாறுவதும் முதலான காரியங்களை தினமும் கண்ணால் பார்த்தும் தாங்களாகவே துன்பங்கள் அடைந்தும் வரும்போது விதவா விவாகம் சாஸ்திர சம்பந்தமா? ஜாதிவழக்கமா? என்று பார்க்கும் மூடர்கள் மனித வர்க்கத்தைச் சேர்ந்தவர்களா என்று கேட்கின்றேன். சாஸ்திரத்தில் இடம் இருந்தால்என்ன? இல்லாவிட்டால் என்ன? ஜாதியில்வழக்கம்இருந்தால்என்ன? இல்லாவிட்டால்என்ன? அதைப்பற்றி கவனிப்பதில் பலன் என்ன? புருஷனிழந்த பெண்ணுக்கு புருஷ இச்சை இருக்குமா? இருக்காதா? அவளுக்கு புருஷன் வேண்டுமா? வேண்டாமா? என்பதைத் தானே கவனித்து முடிவு கட்டவேண்டும். அமாவாசையில் பிறந்த பிள்ளை திருடும் என்று ஜோசியத்திலிருந்துவிட்டால் அந்த பிள்ளை திருடின திருட்டையெல்லாம் ஜோசியம் நம்புகிறவன் சும்மா விட்டு விடுவானா என்று கேட்கிறேன்.

தினம் புருஷனுடன் வாழ்ந்து கொண்டு புருஷன் என்பதாக தனக்கு ஒரு எஜமான் இருக்கிறான் என்று நினைத்துக்கொண்டு அடிமைத்தனத்தில் இருந்து குழந்தை குட்டிகளைப் பெற்றுக்கொண்டு இருக்கும் மாங்கலியப்பெண்களின்போக உணர்ச்சியைவிட மேல்கண்ட கவலையில்லாத பெண்களின் உணர்ச்சி எத்தனைமடங்கு அதிகமாயிருக்கும் என்பதை நீங்களே நினைத்துப் பாருங்கள். ஒரு ஜீவனைப் பட்டினியாகப்போட்டு கொல்லுவதிலும், ஒரு பெண்ணை விதவையாக வைத்து சாகாமல் காப்பாற்றுவது கொடுமை அல்லவா என்பதை யோசித்துப்பாருங்கள். ஒரு பெண் எதற்காக விதவையாய் இருக்கவேண்டும் என்பதற்கு இதுவரை யாராவது காரணம் சொன்னார்களா? அல்லது எந்த மதமாவது, எந்த ஜாதியாவது காரணம் சொல்லியிருக்கின்றதா? காரணமில்லாமல் இவ்வித கொடுமையான ஜீவஹிம்சையை செய்துகொண்டிருக்கும் சமூகம் வடிகட்டின முட்டாள்தனமுடையது என்பதற்கு என்ன ஆட்சேபனைகள் சொல்லப் போகின்றீர்கள்.

விதவைகளாயிருப்பது கடவுள் கட்டளை என்று கருதுவீர்களானால் விதவைகளுக்குப் போக உணர்ச்சியும், அதனால் ஏற்படும் கவலையும், சில சமயங்களில் கர்ப்பமுண்டாக்கப்படுவதும், அது அழிக்கப்படுவதும், பெற்ற குழந்தையை கழுத்தைத் திருகுவதுமான காரியங்கள் நடைபெற முடியுமா என்று யோசித்துப் பாருங்கள்.

விதவைத்தன்மை நாட்டில் இருப்பதாலேயே சாஸ்திரங்களும் கடவுள் செயல் என்பவைகளும், சோதிடம் என்பவைகளும் பொய் என்பதாக உங்களுக்கு விளங்குகின்றதா? இல்லையா? ஏனெனில், நம்மில் ஒவ்வொருவனும் கலியாணம் செய்வது கடவுளை பூ வைத்தோ, கருட தரிசனமோ, குறியோ கேட்டுத் திருப்தி அடைந்தும், ஜோசியம் பொருத்தம் பார்த்து திருப்தி அடைந்தும் சாஸ்திர விதிப்படியும் செய்கிறான். அப்படியிருக்க இந்த கதி நேர்ந்தால் மேற்கண்டவைகள் நிஜமாயிருக்க முடியுமா? இந்த அஸ்திவாரப் புரட்டை நாம் நம்பி மதம், ஜாதி, வழக்கம் என்று சொல்லுகின்றோமே? நமக்கு வெட்கமில்லையா? அல்லது புத்தியில்லையா? என்று கேட்கின்றேன்.

பெரும்பாலும் மதப்படியும்ஜாதிவழக்கப்படியும் நடக்காதவர்களேதான் மதம் என்றும், சாஸ்திரமென்றும், ஜாதி வழக்கம் என்றும் தொல்லைபடுத்துகிறார்கள்.

தங்களைப் பொறுத்தவரை தாங்கள் நம்பும் மதக்கொள்கைப்படியும் சாஸ்திரப்படியும் நடக்க முடியாதவர்களேதான் நாம் செய்யும் காரியத்திற்கு இடையூறாக மதத்தையும் சாஸ்திரத்தையும் வழக்கத்தையும் கொண்டுவந்து போடுகிறார்கள், இப்படிப்பட்டவர்களால் தங்களுக்காக கொண்டு வந்து போடப்படும் மதத்திற்கும் சாஸ்திரத்திற்கும் கடுகளவு புத்தியுள்ள எந்த மனிதனாவது மதிப்பு கொடுக்க முடியுமா என்று பாருங்கள்.

உதாரணமாக, சாரதா மசோதாவை எடுத்துக்கொள்ளுங்கள். பெண்கள் பருவமடைந்ததற்குப் பின்னால் கல்யாணம் செய்தால் சாஸ்திரம் விரோதமாம்-பாவமாம், நரகம் கிடைக்குமாம். இதற்காக சத்தியாக்கிரகம் செய்து உயிர்விட வேண்டுமாம். நீங்கள் இந்த வீரர்களை உண்மையானவர்கள் என்று நம்புகிறீர்களா?

இந்த வீரர்களின் ஆண் பெண் கடவுள்களுக்கும் அவர்களது சொந்தக்காரருக்கும் எப்போது கலியாணம் நடந்தது? கல்யாணம் நடந்ததை இவர்கள் பார்க்கா விட்டாலும் எப்போது நடந்ததாக இவர்கள் சாஸ்திரம் கூறுகின்றது என்பதை சற்று நினைத்துப் பாருங்கள்.

சீதைக்கும், ருக்குமணிக்கும், சத்தியபாமைக்கும், பார்வதிக்கும் வள்ளியம்மாளுக்கும், தெய்வயானைக்கும், மீனாட்சிக்கும், ஆண்டாளுக்கும், நாச்சியாருக்கும், திரௌபதைக்கும் எப்போது கலியாணம் நடந்தது? இவர்கள் பருவமடைந்த பிறகா? அதற்கு முந்தியா என்று கேட்கின்றேன். பழைய ராஜாக்கள் என்பவர்கள் காலத்திலும் மதசம்பந்தமான புராணங்களிலும் எங்காவது மைனர் பெண்களையோ பத்து வயதுக்குள்பட்ட பெண்களையோ கலியாணம் செய்து கொடுத்ததாக இவர்கள் சொல்லக்கூடுமா என்றுகேட்கின்றேன். தவிரவும்மேற்கண்ட ஆண்பெண் கடவுள்கள் தாய்களாகவே கலியாணம்செய்துகொண்டார்களா அல்லது அவர்களின் தாய்தகப்பன்மார் கட்டு சாத மூட்டையை தோளில் சுமந்து திரிந்து மாப்பிள்ளை தேடி சகுனம், குறி, சோதிடம் பொருத்தம் முதலியவை பார்த்து கலியாணம் செய்து கொடுத்தார்களா என்றுயோசித்துப்பாருங்கள்.

இந்த சாஸ்திரத்தைவைத்துக்கொண்டிருப்பவர்கள் சாஸ்திரத்தில் பருவமடைந்த பிறகு கலியாணம் செய்வதற்கு இடமில்லை என்று சொல்ல வருவார்களானால் அதிலும் அதற்காக இவர்கள் சத்தியாக்கிரகம் செய்வேனென்று சொல்வார்களானால், இவர்கள்நம்மை எவ்வளவுமுட்டாள்கள் என்று நினைத்துக்கொண்டிருக்கின்றார்கள் என்பதை நினைத்துப்பாருங்கள். எனவே, சகோதரர்களே! உங்களுக்கு ஒரு காரியம் சரி என்றுபட்டால் அது சாஸ்திர சம்மதமா? விரோதமாஎன்றுஎதிர்பார்ப்பது அறியாமையும், அடிமைத்தனமுமாகும். இந்த லோகத்திற்கு அவசியமான காரியம், மேல் லோகத்தில் என்ன பலனைத் தரும் என்பது மற்றொரு அடிமைத்தனமாகும்.

இவ்வளவும் தவிர இப்படிச்செய்தால் அவர்கள் என்ன பேசுவார்கள். இவர்கள் என்ன சொல்லுவார்கள் என்று நினைப்பது எல்லாவற்றையும் விட சுய அறிவும் சுய உணர்ச்சியும் அற்ற அடிமைத்தனமாகும்.

சகோதரர்களே! கடைசியாக உங்களுக்கு ஒன்று சொல்லுகின்றேன். அதாவது எந்தக் காலத்திலோ எங்கிருந்தோ யாராலோ எதற்காகவோ யாருக்கோ எழுதிய ஒரு புஸ்தகத்தை இந்தக்காலத்திற்கு இந்த இடத்திற்கு நமது நன்மைக்காக நமது நன்மையில் கவலைகொண்டவர்களால் எழுதப்பட்டதென்றும், அதன்படி நடந்து தீரவேண்டுமென்றும் கருதுகின்றவன் மனிதனல்ல என்பதுதான் எனது மாற்ற முடியாத உறுதியான அபிப்பிராயமாகும் என்று பேசினார்.

பிறகு திரு. ஆர். நடேசய்யரால் வந்தனம் கூறப்பட்டுகூட்டம் இனிது முடிந்தது.

## அறிக்கை

### அகில திருவாங்கூர் பார்ப்பனரல்லாதார் முதன் மகாநாடு.

அகில திருவாங்கூர் பார்ப்பனரல்லாதார் முதன் மகாநாடு நாகர் கோயில் நகரத்தில் நவம்பர் 15-ந்தேதி 16-ந் தேதிகளில் கூடும். அது காலை செங்கற்பட்டு ஜில்லா போர்டு தலைவர் ராவ்பகதூர் எம். கிருஷ்ணசாமி அவர்கள் இம்மகாநாட்டுக்குத் தலைமை வகிப்பதாக ஒப்புக் கொண்டுள்ளார். வரவேற்புக் கழகத் தலைவராக திரு. பி. சிதம்பரம் பிள்ளை பி. ஏ. பி. எல்., அவர்களைத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. திரு. ஏ. சங்கர பிள்ளை பி. ஏ. பி. எல். அவர்கள் பொதுக் காரியதரிசியாக வேலை செய்து வருகின்றார்.

இம்மகாநாட்டுக்கு சென்னை திருவாங்கூர் முதலிய எல்லாப் பாகங்களிலிருந்தும் பார்ப்பனரல்லாதார் பெருந்திரளாக வருவதற்கு அறிகுறியாக தினதினம் இதைப்பற்றி இங்கு கடிதங்கள் வந்த வண்ணமாகவே இருக்கின்றன.

டாக்டர் எம். ஏ. நெட்டோ.

---

திருவையாறு:—20-10-29 அன்றிரவு இவ்வூர் சுயமரியாதையை உடைய தனித்தமிழ் ஏறு திரு: ஏ. வீராசாமி பிள்ளை என்பார் உடல் துறந்தார். இவர் சுயமரியாதை இயக்கத்திற்கும் தமிழ் மக்களும் ஆற்றிய தொண்டு பொன்னே எனப் போற்றற்பாலதாகும் என்று திருவையாறு தமிழ் மாணவர்க் கழக மாணவர் திரு. குருசாமி என்பார் எழுதுகின்றார். [இவரது அறுதாபக் கட்டுரையை இவ்வாரம் வெளியிட முடியாதமைக்கு யாம் பெரிதும்வருந்துகின்றோம். ப—ர்]

அருப்புக் கோட்டை:-12-10-29ந் தேதியன்று திரு. நா. சு. அ. அவர்கள் தலைமையில் திரு ஆ. அருணாசலம் அவர்கள் வாசகசாலையின் நன்மை என்பதைப்பற்றி ஓர் சொற்பெருக்காற்றினார்.

21—10—29ந் தேதி யன்று சாலியர் மகாஜன சங்கத்தின் ஆதரவில் இவ்வூர் சப் ரிஜிஸ்திரார் திரு. ஆ. சோமசுந்திரம் பி. ஏ. அவர்கள் தலைமையில் பிரைஸ் சீட்டு குலுக்கப் பெற்றுப் பலருக்கு 2000 ரூபாய் முதல் பரிசளிக்கப்பட்டதென்று ஒரு நிருபர் தந்தி மூலம் தெரிவிக்கின்றார்.

## பார்வதி ஆலயத்தில் சத்தியாக்கிரகம்

### கோயிலில் போலீஸ் பந்தோபஸ்து

இந்நகருக்குத் தெற்கிலுள்ள பெரிய குன்றின்மீதிருக்கும் பார்வதி ஆலயத்திற்குப் போக தங்கட்குள்ள உரிமையை நிலைநாட்டுவான்வேண்டி நேற்று தீண்டப்படாதார்கள் சத்தியாக்கிரகம் செய்தபொழுது மூவர் காயம் அடைந்தனர். அம்மூவரில் தீண்டப்படாதார் தலைவரான திரு. ராஜ்போசும் ஒருவர். நகரில் அதிக கிளர்ச்சி ஏற்பட்டிருக்கின்றது. கோயிலின் கதவு அழுத்தமாகப் பூட்டப்பட்டுள்ளது. அதன் முன் பலமான போலீஸ் பந்தோபஸ்து போடப்பட்டுள்ளது. கலெக்டர் திரு. கொல்டு அநேகம் ஆபீசர்களுடன் அங்குவந்திருந்தார். தீண்டப்படாதாரிடம் அநுதாபமுள்ள இந்துக்களும் தீண்டப்படாதார்களும் காலையில் ஆலயத்திற்குவந்தனர். அவர்கள் முதலில் தங்களில் பத்துப்பேர்களை சத்தியாக்கிரகம் செய்யும்படி அனுப்பத் தீர்மானித்தனர். அப்பத்துப்பேர்களும் ஆலயத்தின் படிக்கு அருகே வந்ததும், அங்கு இவைகளை கவனித்துக்கொண்டு நின்றிருந்த கூட்டத்தார் கம்புகளையும், செருப்புக்களையும், குடைகளையும் விட்டெறிந்தனர். அதில் மூவர் காயமடைந்தனர். அவர்களை வைத்தியசாலைக்குக்கொண்டுபோகப்பட்டது. மற்றைய சத்தியாக்கிரகிகள் திரும்பிவிட்டனர். இதன் சம்பந்தமாய் இருவரைக்கைது செய்யப்பட்டுள்ளதாய் கூறப்படுகின்றது. மீண்டும் சத்தியாக்கிரகம்செய்வதைப் பற்றி யோசிக்க சத்தியாக்கிரகக் கமிட்டி இன்று மாலை கூடுகின்றது.

(திராவிடன்)

### பெண் தேவை

திருச்சி:—ஆண்டார் தெருவிலுள்ள திரு: பிச்சப்பிள்ளை மகன் திரு. மருதப்பா என்னும் 21-வயதுள்ள ஒரு வேளாள குல மாணவர்க்கு அழகிய ஒரு ஐயங்காரப் பெண் தேவையாம். மணமளிக்கக் கருதப்படும் பெண்ணுக்கு 14-வயதுக்கு மேற்படக் கூடாதாம். பெண்ணளிக்கப் பிரியமுடையவர் குடியரசு விலாசத்துக்கு எழுதவும் [பெண் வயது 16-க்கு மேற்பட்டிருத்தல் நலமென்பது எமது கருத்து—ப-ர்.]

மாயனூர்:-இவ்வூர் பள்ளர் வகுப்பைச் சார்ந்த திரு: நல்லுசாமி மூப்பனுருக்கு 'உயர்ந்த' சாதியில் உள்ள சுயமரியாதைக்காரர்கள் பெண்ணளிக்கக் கூடுமா என்று தெரிவிக்கின்றார். உடன்படுபவர்கள் திரு: பி. நல்லுசாமி மூப்பனார், மாயனூர், குளித்தலை தாலூக்கா, திரிசிரபுரம் ஜில்லா என்ற விலாசத்திற்கு நேரில் தெரிவித்துக் கொள்ளவும் இவருக்கு நன்செய் 50 ஏக்கரும் புன்செய் 30 ஏக்கரும் ரொக்கத்தில் 3000 ரூபாயும் ஆடுமாடுகள் வீடுகள் முதலிய சொத்துக்களும் இருக்கின்றனவாம்.

யூனியன் சேர்மன்:—இவ்வூர் யூனியன் சேர்மன் அவர்கள் ராமநாதபுரம் ஜில்லா போர்டு தலைவரால் சில குற்றங்கள் பொருட்டு நீக்கப்பட்டார் என்றும் அறிவிக்கப்படுகின்றது.

## செய்தித்திரள்

திருமணம்:-பெரியகுளம் இயந்திர விற்பனர் திரு.எம். ரெங்கசாமிநாயுடு தன் மருமகள் செல்விமனோண்மணிக்கும், திண்டுக்கல் திரு. கோபால கிருஷ்ணனுக்கும் சுயமரியாதைநெறியில் 24—10—29அன்று திருமணம் நடத்திவைத்தார்.

திருப்பத்தூர்:— திருப்பத்தூரைச் சார்ந்த தம்பிப்பட்டியில் திரு. நாராயணன் அவர்கட்கும் இவ்வூர் செல்வி பாப்பாத்தி அம்மாளுக்கும் 21—10—29ல் மூடப் புரோகிதச் சடங்குகளை அறவே ஒழித்தும் மணநாள் சென்ற மறுநாள் பொருட்கவலையை இழைக்கவல்ல ஆடம்பரச் செலவை நீக்கியும் சுயமரியாதைத் திருமணம் வெகு சிறப்பாய் நடைபெற்றதென்றும் வீணே குணசேகரம், சிங்கபெருமாள் கோயில் முதலிய இடங்கட்கு அலைந்து அங்கும் காசை விரயம்செய்யாது இவ்வாறாகவே அவரவர்கள் வீட்டில் சுயமரியாதைத் திருமணங்கள் நிகழ்த்திக் கொள்ளுதல் நலமென்றும் தென்மாபட்டு திரு. முத்துராமன் தெரிவிக்கின்றார்.

வண்ணார் பண்ணை:—சித்த வைத்தியத்தை இலங்கையில் பரப்புவதற்காக வைத்திய சங்கமொன்றை ஸ்தாபிப்பதற்காக 19-10-29 சனிக்கிழமையன்று வண்ணார்பண்ணை இந்துக் கலாசாலை மண்டபத்தில் திரு. வை. துரைசாமி அவர்கள் ஆதரவில் ஓர் பொதுக் கூட்டம் நடத்தப்பெற்றதென்று வைத்திய பூபதி வெ. சிவசுப்பிரமணியமும் திரு. எஸ். எம். பொன்னையாவும்தெரிவிக்கின்றனர்.


ரத்த விர்த்தி, தேக பலம், தாது புஷ்டிக்கு
தேத்தான்விதை லேகியம்

# தங்கபஸ்பம்

## சாப்பிடுங்கள்

பரீட்சைக்கும் பலனுக்கும் உத்தரவாத முள்ளது.

**எப்படி?** ஒரு தொட்டி கலங்கிய ஜலத்தில் ஒரு தேத்தான் விதையை உரைத்துக் கலக்கினால் உடனே அந்த ஜலம் பூராவும் தெளிந்து சுத்தமாகிவிடும். அதுபோல் உங்கள் ரத்தத்தையும் சுத்தம் செய்து நல்ல ரத்தத்தை ஏராளமாகப் பெருக்கி தேக பலம், தாது புஷ்டி உண்டு பண்ணும். சகலவித உஷ்ணம், வெள்ளை, வெட்டை, நீர்ழிவு, காசம், க்ஷயம், இருமல்களுக்கு ஒரு மண்டலம் சாப்பிட்டால் போதும். குழந்தை முதல் ஆண் பெண் யாவரும் சாப்பிடலாம். அதிக ருசியுள்ளது. 50 வேளை டின் ரூ 2-8-0, வி. பி. வேறு. உயர்ந்த பலனை விரைவில் அடையவேண்டுவோர் லேகியத்துடன் சேர்த்துச் சாப்பிட 50 வேளை தங்கபஸ்பம் ரூ. 10-0-0. 100 வேளை ரூ. 20-0-0 நம்மிடம் சகல வியாதிகளுக்கும் உயர்ந்த மருந்துகள் இருக்கின்றன.

ஏஜண்டுகள் தேவை:—

தெண்டபாணி வைத்தியசாலை, பழனி.



பார்க்கப் பவுன் மோதிரம் தோற்கும்படியான
ஜ்வலிப்புள்ள அற்புத

## எலக்டிரிக் மோதிரம்



இது அமெரிக்காவில் ஓர் மின்சார நிபுணரால் கண்டு பிடிக்கப்பட்டது. இந்தியாவிற்கே புதிதாகும். பாலர் முதல் விருத்தர் வரை ஆண் பெண் யாரும் அணியலாம் நோய் வராமல் தடுத்துக் கொள்வதற்கும் நோயைக் குணப்படுத்துவதற்கும் உத்தரவாதமானது 8 வித லோகங்களால் மிகவும் பார்வையாக செய்யப்பெற்ற இம்மோதிரத்தை விரலில் அணிந்தால் அதினின்றும் மின்சார சக்தி வெளியாகி தேகத்திற்கு பலத்தைக் கொடுப்பதோடு காய்ச்சல், வாந்தி, பேதி, தொத்து வியாதிகள், வைசூரி, இன்புளுவன்சா, க்ஷயம், குட்டம், ப்ளேக், தலைவலி, அஜீர்ணம், மூலம், அன்னதுவேஷம், மலச்சிக்கல், வாதம், சூலை, வெட்டை முதலிய ஸ்திரீ வியாதிகள், எதுவுமே நம்மிடம் அணுகாது. நற்சாட்சி பத்திரங்கள் தினமும் வருகின்றன.


மோதிரம் 1-க்கு ரூ. 1—8—0 மோதிரம் 6-க்கு ரூ. 7—0—0
மோதிரம் 3-க்கு ரூ. 3—12—0 மோதிரம் 12-க்கு ரூ. 13—0—0
ஒரே தடவையில் 12 மோதிரம் வாங்குபவர்களுக்கு இங்கிலாந்தில் செய்யப்பட்ட டபிள்யூ. பி. பௌண்டன் பேனா தங்க பனேட் நிப்பு போட்டது. ஐந்தாம ஜார்ஜ் மன்னரால் ஸர்ட்டிபிகேட் கொடுக்கப்பட்டது. ரூ. 3 மதிப்புடைய இந்தப் பேனா இனாமாய்ச் சேர்த்து அனுப்பப்படும். உடனே எழுதுங்கள்.

லக்ஷிமி ட்ரேட்ஸ் கம்பெனி.

தங்கசாலைத் தெரு, மதராஸ்.



## ஒரு மாதத்திற்கு மாத்திரந்தான்





அமெரிக்கன் இமிடேஷன் டைமண்ட் எலக்ட்ரோ பினேட் மோதிரங்கள் தகுந்த கைதேர்ந்த வேலைக்காரர்களைக் கொண்டு செய்யப்பட்டது. இம்மோதிரத்தில் எழு கற்கள் பதித்திருக்கின்றது இக்கற்கள் வைரக் கற்களின் கெம்பீரமான பார்வை காட்டும் இது பார்வைக்கு வைர மோதிரமென்றே சொல்லுவார்கள், ரூ. 200-0-0 மதிப்புள்ள மோதிரத்தை தோற்கடிக்கக் கூடிய இமிடேஷன் வைர மோதிரம், இம்மோதிரத்தின் விலை ரூ. 1-4-0 மூன்று மோதிரம் ஒரே தடவையில் ஆர்டர் செய்பவர்களுக்கு (டேபில் டைம்பீஸ் இனாம்) ஆறு மோதிரம் ஆர்டர் செய்பவர்களுக்கு (பிடோரிஸ்ட் லீவர் கெடியாரம் இனாம்) மனதிற்கு திருப்திகரமில்லாவிட்டால் பணம் வாபீஸ்,

K. N. R. Bros., 421, Mint Street, Sowcarpet, Madras.

# இன்பவாழ்க்கையின் இரகசியங்கள்

(மூன்றாம் பதிப்பு)

அழகிய சீமை கலிகோ பைண்டு செய்யப்பட்டு கண்ணைக் கவரத் தக்க அநேக ஆப்டோன் படங்களுடன் 400-பக்கங்களுக்குமேல் அழகிய பெதர்வெயிட் பேப்பரில் சுத்தமான எழுத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

இதன் விலை ரூ. 2. ஷை தெலுங்கு புஸ்தகம் ரூ. 2.

இது, காதலர்க்கு இன்பந்தரும் நூதன நூல்; போகானந்தத்தை விரும்பும் பூமான்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த ஆனந்த இரகசிய சாஸ்திரம்.

உலகத்தில் ஆண் மக்களும், பெண் மக்களும் ஒரேவிதமான அன்புடையவர்களாய் ஒருவர்மீதொருவர் உண்மைக்காதல் கொண்டு, ஒருவரையொருவர் மணந்து கூடிக் களிப்புற்று, நற்சந்ததிகளைப் பெற்று, இல்லற நீதிகளை வழுவாமற் செய்து வாழ்ந்து வருவதே இன்ப வாழ்க்கையாம்; இத்தகைய வாழ்வை அடைதற்குரிய மார்க்கங்களை உணர்ந்து கொள்வதற்கேதுவாக நம் முன்னோர்கள் கொக்கோகம் முதலிய மதன நூல்களையும், வேறு பல அகப்பொருள் நூல்களையும் தமிழிலும், வடமொழியிலும் செய்துவைத்திருக்கின்றனர். அந்நிய நாட்டார்களும், அராபி, இந்துஸ்தானி, கன்னடம், தெலுங்கு, நாகரம், மராட்டி, இங்லீஷ், பிரெஞ்சு முதலிய பற்பல பாஷைகளிலும் இத்தகைய இன்பரச நூல்கள் பலவற்றை வெளியிட்டிருக்கின்றனர். எனினும், நம் தமிழ் நாட்டிலுள்ளவர்களிற் பெரும்பான்மையோர் அந்நூல்களைக் கிரமப்படி கற்றுக்கொள்ளாததால் இன்பவாழ்க்கையில் இரகசியங்களைத் தெரிந்து கொள்ளாதவர்களாய்க் கல்வியின்பத்தை இழந்து கவலைகொண்டு துன்புறுகின்றனர்; மணஞ் செய்தும் மகிழ்ச்சியின்றி வருந்துகின்றனர்; மனைவியிருந்தும் மைந்தரைப பெறாமல் வாடுகின்றனர்; புருஷனிருந்தும் புத்திரரைப் பெறாமல் புலம்புகின்றனர்; பணமிருந்தும் குணமில்லாமல் பரிதபிக்கின்றனர்.

விலாசம்:—ஆரியன் புக் டிபோ, திருவல்லிக்கேணி, மதராஸ்.



# இனும்! இனும்!! இனும்!!!

அடியிற் குறிக்கப்பட்டிருக்கிற பாக்கட் கெடிகாரம் வாங்குகிறவர்களுக்கு டேபில் டையம்பீஸ் இனாமாகவும், கையில் கட்டும் கடிகாரம் வாங்குபவர்களுக்கு லிவர் பாக்கட் கடிகாரம் இனாமாகவும் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். ஒரு முறை வாங்கிப் பார்த்தால் உண்மை விளங்கும்.





நெ. 1.

பாக்கெட் லீவர் கெடியாரம் இனாம். டேபில் டையம்பீசுடன

ரூ. 4-4-0.

எ. ஷை பொன் கிலிட் கெடியாரம் இனாம்டையம் பீசுடன் ரூ. 4-8-0.



நெ. 2.

பொன் கிலிட் சித்திர பட்டைகள் தீர்த்த ரிஸ்லெட் கெடியாரம் தங்க டைல் உள்ளது இனாம் பாக்கெட் கெடியாரத்துடன் ரூ. 6-12-0



நெ. 3.

பொன்கிலிட் 8-மூலை ஷேப் ரிஸ்லெட் இனாம் பாக்கெட் கெடியாரத்துடன் ரூ. 6-0-0



நெ. 4.

பொன்கிலிட் பீபாய் ஷேப் ரிஸ்லெட் கெடியாரம் தங்க டைல் உள்ளது இனாம்பாக்கெட்கடியாரத்துடன்

விலை ரூபா 6-15-0.

சுபீரியர் வாட்ச் கம்பெனி,
கெடியார வியாபாரிகள், மதராஸ்.



ஆனந்தவீரிய கோலாகலம் அற்புதமோகன சிங்காரம்
மதனகாமேஸ்வரக் குளிகை என்னும்

# தாது ஸ்தம்பன தங்க மாத்திரை

தாது புஷ்டியைத் தருவதில் நிகரற்றது; கிழவனையும் குமரனாக்கிவிடும். மகா அற்புத சக்தி வாய்ந்தது, கஞ்சா அபின் முதலிய லாகிரி வஸ்துக்களின் சேர்க்கை சிறிதுமில்லாதது;



இழந்துபோன இல்வாழ்க்கை இன்பத்தைச் சிறிது நேரத்திற்குள் மீண்டும் பெறச்செய்யும் பெருமையுடையது; வீரிய விருத்தியை யுண்டாக்குவதில் இதற்கு நிகரான மருந்து வேறெதுவுமே யிராது; மித மிஞ்சிய மாதர் சங்கமத்தாலும் வயது முதிர்ந்ததாலும், பலவித துர்வியாதிகளாலும் ஏற்பட்ட பலஹீனம், இரத்தக் குறைவு, நரம்புத்தளர்ச்சி, ஆண்மைக்குறைவு, போகத்தில் வெறுப்பு, துரிதஸ்கலிதம் முதலியவற்றை வெகு சீக்கிரத்தில் நீக்கி, இரத்தவிருத்தியையும், தேகபலத்தையு முண்டாக்கும், நரம்புகளுக்கு முறுக்கேற்றும், அபரிமிதமான இந்திரியப் பெருக்கை யுண்டாக்கும்; நீர்த்துப்போன தாதுவைக் கெட்டிப்படுத்தும்; சங்கமகாலத்தில் நீடித்த நேரம் இளைப்பின்றி யிருந்து இணையில்லா இன்பத்தை அனுபவிக்கச் செய்யும்; கிழத்தன்மையை நீக்கி யௌவனத்தைத் தரும்.

இது, தங்கம், வெள்ளி. முத்து. அயம், காந்தம் முதலிய உயர்ந்த உலோகச் சரக்குகளும், சஞ்சீவிக்கு நிகரான பல மூலிகைகளும் சேர்க்கப்பட்டுச் சிறந்த வைபாக செய்பாகங்களால் தயாரிக்கப்பட்டது.

இதனை ஒருமுறை வாங்கி உபயோகித்தால் இதன் மேலான குணம் தானே தெரியும். 20-மாத்திரைகொண்ட சீசா 1-க்கு விலை ரூபா 2

கருணாநிதி டிபோ, 1/6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.



ஆசிரியரின்றி ஆங்கிலந் தெரிந்துகொள்ளும்

# ஆனந்த ஆங்கில பாஷா போதினி

(மூன்றாம் பதிப்பு)




எம். ஏ. எல். டி. பட்டம் பெற்ற ஆங்கிலபோதகாசிரியர் ஒருவரால் இயற்றப் பெற்ற உயர்ந்த திருத்தங்களோடும், சிறந்த அமைப்புகளோடும், நிறைந்த போதனைகளோடும் இப்பதிப்பு வெளிவந்திருக்கிறது.

மேதினியில் உள்ள தமிழர்எல்லோருக்கும் இனிமையாக எளிதில் ஆங்கிலம் போதிக்கத்தக்கது. உயர்ந்த இங்கிலீஷ் போதனாமுறையில் முதன்மை பெற்றுத் தோன்றிய பெறுதற்கரிய பெரும்பயன் வாய்ந்தது. பற்பல கதைகளும், பாரதக் கதைகளும், ஸ்ரீ கிருஷ்ணர் சரித்திர சுருக்கமும் அடங்கியது. அவற்றிற்குப் பொருத்தமான அழகிற் சிறந்த 16 ஆப்டோன் படங்களுடன் கூடியது.

800 பக்கங்களுக்குமேல் திக்கு காகிதத்தில் அச்சிடப்பட்டுச் சீமை காலிகோ பைண்டு செய்யப்பட்டது.

இதன் விலை ரூபா 2. ஷை தெலுங்கு புஸ்தகம் ரூபா 2.

விலாசம்:—ஆனந்த போதினி ஆபீஸ், சென்னை.



குறைந்த சந்தா! நிறைந்த விஷயம்!!

# "ஆனந்தபோதினி"

ஓர் செந்தமிழ் வாரப்பத்திரிகை

"ஆனந்தபோதினி" மாதசஞ்சிகையின ஊழியம் உலகம் அறியும். அவ்வூழியத்தை அதிகப்படுத்தும் நோக்கத்துடன், பலருடைய வேண்டுகோளின் மேல் மாத சஞ்சிகையோடு "ஆனந்தபோதினி" வாரப்பத்திரிகையும் வெளிவருகின்றது. தமிழ்ப் பெரும் புலவர்களும் ஆங்கிலமறிந்த பேரறிஞர்களும் பிறரும் மதசமூகதேசிய முன்னேற்றத்தைப பற்றியதங்கள் தங்கள் ஆராய்ச்சி முடிவுகளைக் கொட்டிக் குவிக்கக்கங்கணங் கட்டியிருக்கின்றனர். எல்லாவற்றிற்கும் "ஆனந்தபோதினி" வாரப்பத்திரிகை பூலோக கற்பகமாக விளங்குகிறது.

உள்நாடு வருடசந்தா ரூ. 3. 6 மாத சந்தா ரூ 1-12-0. பினாங்கு, சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகட்கு வருட சந்தா ரூ. 4.

"ஆனந்தபோதினி" ஆபீஸ், தபாற்பெட்டி நெ. 167, மதராஸ்.

# பெண் மக்கள் பெருமை

## வைதீகர்களின் கொள்கை

(சாமி சிதம்பரனார்)

இனி உத்தமமான நமது தாய்மார்களைப் பற்றி இதற்கு முன்னிருந்த வைதீகர்கள் கொண்டிருந்த கொள்கைகளையும் அவர்கள் பொருட்டு ஏற்படுத்தியுள்ள கட்டுப்பாடுகளையும் கூறுகின்றோம். கீழ் கூறும் செய்திகள் ஸ்மிருதிகளிலும் தமிழ் நூல்களிலும் கூறப்படுவனவே யன்றி நம்மால் புதிதாகப் புனைந்து கூறப்படுவன அல்ல. அவைகளிற் பல தற்கால வழக்கத்திலும் இருந்து வருகின்றன.

பெண் மக்களைப் பற்றிப் பேசாத கலைகள் இல்லை; அவர்களைப் பற்றிக் கூறாத பாடல்களும் இல்லை; அவர்களை வெறுக்காத வைதீகரும் இல்லை; பெண் மக்களுக்குப் பெருமையுண்டாகும்படி உயர்த்திக் கூறும் கூற்றுக்களும் உண்டு. அவற்றைப் பின்னர் கூறுகின்றோம்; அவர்களை இழித்துக் கூறும் செய்திகளோ எண்ணிறந்தன. அறிஞர்கள், ஞானிகள், அவதார புருஷர்கள் என்று மதிக்கப்படுகின்ற பலர் அவர்களை இகழ்ந்தே கூறியிருக்கின்றனர். பெண் மக்களாலேயே ஆண்மக்கள் கெட்டுப்போனதாகக் கதைகளும் பல எழுதி வைத்திருக்கின்றனர்.

பெண்களின் பிறப்பையே பாவமான பிறப்பென்று கூறியுள்ளனர். உலகத்தில் மிகுதியான பாவத்தைச் செய்தவர்கள்தான் பெண்ணைப் பிறப்பார்களாம். இவ்வாறு கூறிய தன் நோக்கம் இவர்களை அடிமைப் படுத்துவதற்கே யன்றி வேறு எதற்காக? எண்ணறக் கற்று எழுத்தற வாசிப்பினும் பெண் புத்தி பின் புத்தி என்பது வைதீகர்கள் கூறும் பழமொழி. பேதமை என்பது மாதர்க்கு அணிகலம் என்று ஒருவர் சொல்லி விட்டார். பெண் மக்களை மிகவும் கடிந்துரைப்பவர்கள் மதவாதிகளும், முத்தி என்பதைப் பெற முயல்பவர்களும், ஜீவ காருண்யத்தைப் பற்றிப் பேசுகின்றவர்களும் ஆகிய அறிஞர்கள்தான். அவர்கள் உலகிற் பாவம் உண்டாவதற்குக் காரணம் பெண்மக்கள் என்றும்; பெண்மக்களின் கூட்டுறவினாலேயே ஆண்மக்கள் கெட்டுப் போகின்றார்கள் என்றும்; பெண்கள்பால் சிறிதும் அன்புகாட்டுதல் கூடாதென்றும்; அவர்கள் முகத்தில்கூட விழிக்காமல் வெறுத்தால் தான் நல்ல கதியைப் பெறலாம் என்றும் கூறுகின்றனர். இதனை.

'தூமகேது புவிக்கெனத் தோன்றிய
வாம மேகலை யுடை மங்கை
யரால் வரும்
காமம்இல்லை எனில் கடுங்கேடெனும்
காமம்இல்லை, நரகமும் இல்லையே'

என்று கவிச்சக்கரவர்த்தி என்னும் சிறப்புப் பெற்றக் கம்பர் கூறியிருப்பதனாலும் உணரலாம்.

கூட்டில் அடைக்கப்படும் பறவைகளைப் போல் பெண்மக்களை வீட்டிற்குள்ளேயே வைத்திருக்க வேண்டும் என்றும்; அவர்கள் வெளியில் தனித்துச் செல்லுதல் கூடாதென்றும் கூறியிருக்கின்றனர். இதனாலேயே இல்லறத்தில் உள்ள பெண்மக்களுக்கு, "இல்லாள்" "மனைவி" முதலிய பெயர்கள் வழங்குகின்றன.

பெண்மக்கள் பிறந்தது முதல் இறக்கும் வரையில் அடிமையாகவே வாழ்ந்து மடிய வேண்டுமென்பதே வைதீகர்கள் கொள்கை. அவர்கள் இளம்பருவத்தில் தாய் தந்தையர்களுக்குக் கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும். தாய் தந்தையர்கள் தங்கள் விருப்பப்படி யாருக்கேனும் மணஞ் செய்து கொடுத்தபின் கணவனுக்கு அடிமையாக இருந்து உயிர்வாழ வேண்டும். தன்மனத்திற்கு இசைந்த மணவாளனைத் தெரிந்து கொள்ளும் உரிமை பெண்களுக்கு இல்லை. தாய் தந்தையர்களால்பிடித்துக் கொடுக்கப்பட்ட கணவன் கல்லாயினும் புல்லாயினும் கழுதையாயினும் அவனைத் தெய்வமாகக் கொண்டு வழிபடுவதே பெண்களின் கடமையாம். அவர்கள் வேறு தெய்வம் என்பதைக் கூட வணங்க உரிமை அற்றவர்களாம். மணஞ் செய்யப்பட்ட பெண்கள் தங்கள் கணவனையும் தாய்தந்தையர்களையும், மற்றைய பெண் மக்களையும் தவிர வேறு எந்த ஆண் மக்களையும் பார்க்கக்கூடாதாம். அவர் தம்முடன் பிறந்த சகோதரர்களைக்கூடப் பார்க்கக் கூடாதாம். கணவன் இறந்தால் மனைவியும் உடனே இறந்துவிடவேண்டும். இக்கொள்கை பற்றியே முன்னர் "உடன்கட்டை ஏறுதல்" என்னுங் கொடுமையான செய்கை நமது நாட்டில் நடந்துகொண்டிருந்தது. அவ்வாறின்றி விதவைகளாக உயிர்வாழ விரும்புகின்ற பெண் மக்கள் தங்கள் பிள்ளைகளுக்குக் கட்டுப்பட்டு நடந்து கொள்ளவேண்டும். பொதுவாகப் பெண் மக்கள் வயிறு நிறைய உணவு கொள்ளுதற்குக்கூட உரிமை அற்றவர்கள். இதனை "உண்டிச்சுருங்குதல் பெண்டிற்கழகு" என்பதனால் உணரலாம். அதிலும் கைம்பெண்களாயிருப்பவர்கள் மிகச் சிறிய உணவையுடையவர்களாய் 'கைம்மை நோன்பு' என்பதை நோற்று உயிர் வாழ வேண்டுமாம்.

பெண்களை வேலை செய்யும் கருவிகளாகவும், பிள்ளைப்பெறும் இயந்திரங்களாகவுமே வைதீக ஆண் மக்கள் கருதியிருக்கின்றனர். பெண்கள் பெறும் குழந்தைகள் பெண்களாக இருந்தால் அவர்களை அவ்வாறு கப்பாராட்டப்படுவதில்லை. ஒவ்வொரு பெண்மக்களும் ஒவ்வொரு ஆண் மக்களையாவது பெற்றாக வேண்டுமாம். ஆண்மக்களைப் பெறாத பெண் மக்கள் பாவிகளாம். அவர்கள் முகத்தைப் பார்த்தால்கூடப் பார்த்தவர்களுக்குக்கூடப் பாவம் வந்துவிடுமாம்; ஆதலால் கணவன் மூலம் பிள்ளை உண்டாகாவிட்டால் கணவனுடைய அண்ணன் தம்பிமார்களைக்கூடியோ அல்லது குலகுருவைச் சேர்ந்தோ அல்லது வேறு எவ்வகையிலோ, பிள்ளைபெற்றுக்கொள்ள வேண்டியது முக்கியம் எனக்கூறி இருக்கின்றனர். இங்ஙனமே நடந்ததாக பல கதைகளிற் கேட்கின்றோம். அவைகள் நீதிகளாகவும் வடமொழி நூல்களிற் கூறப்படுகின்றது. பிள்ளை பெறுவதற்கு முன் கணவன் இறந்துவிட்டால் கைம் பெண்ணாயிருப்பினும் மேற்கூறிய வழிகளில் பிள்ளை பெற்றுக்கொள்ள வேண்டுமாம். அப்பொழுதுதான் குல முன்னோர்களாகிய "பிதுர்த் தேவதைகள்" என்று சொல்லப்படுகின்றவர்கள் நற்கதிபெறுவார்களாம்.

இனி வைதீகர்களால் புகழ்ந்து பேசப்படுகின்ற மனுதர்ம சாஸ்திரம் என்னும் ஸ்மிருதியில் பெண்களைப் பற்றி இழிவாகக் கூறியுள்ளனவற்றிற் சிலவற்றை எடுத்துக் காட்டுகின்றோம்.

"பெண்கள் விபசாரித்தனமும், நிலையற்ற மனமும், நன்றியில்லாமையும் ஆகிய குணங்களை இயற்கையாக உடையவர்கள்."

"பெண்களுக்கு மேற்கண்ட குணங்கள் பிரமன் சிருட்டித்தபோதே உண்டானவை என்பதை அறிந்து அப்பெண்கள் கெட்டுப் போகாமல் இருப்பதற்கான முயற்சிகளைச் செய்ய வேண்டியது ஆண்மக்களுடைய கடமை" என்று கூறப்படும். இச்சொற்றொடர்கள் பெண்களை எவ்வளவு தூரம் அவமானப்படுத்துகின்றன என்பதைச் சிறிது ஆராய்ந்து பாருங்கள். இவ்வாக்கியங்கள் பெண்கள் மீதுள்ள அருவருப்பினாலும், அவர்களை அடிமையாக்கி நடத்த வேண்டுமென்னும் எண்ணத்தினாலும் உண்டானவை என்பதில் சிறிதும் ஐயமுண்டோ?

"படுக்கை, ஆசனம், அலங்காரம் காமம், கோபம், பொய், துரோக சிந்தை இவற்றைப்பெண்களுக்காகவே மநுவானவர் கற்பித்தார்" என்பது மநுதருமசாத்திரத்தின் கூற்றாகும். இதனால் பெண்களைக் காமம் உடையவர்களென்றும், கோபம்உடையவர்களென்றும், பொய்யர்களென்றும் துரோக சிந்தை உடையவர்களென்றும் இழித்துக் கூறப்பட்டிருக்கின்றதைப் பெண்மக்கள் ஒப்புக்கொள்ளமுடியுமா? இத்தகைய குணங்கள் ஆண்மக்களிடம் மிகுதியாக இருக்கின்றனவா பெண் மக்களிடம் மிகுதியாக விருக்கின்றனவா என்பதை உலக நிகழ்ச்சிகளை உற்று நோக்குவோர் எவரும் எளிதில் அறிந்து கொள்ளலாம்.

"மாதர்கள் விபசார தோஷமுடையவர்கள் என்று அநேக சுருதிகளிலும் சாத்திரங்களிலும் கூறப்பட்டிருக்கின்றது" என்பது நாம் கூறும் சொற்றொடர் அன்று. வைதீகர்களால் போற்றப்படும் மநுதரும சாத்திரத்தின் "உயர்ந்த" வாக்கியமாகும். இதனால் மநுதரும சாத்திரமேயன்றி வேறு பல சாத்திரங்களிலும் பெண்களைப்பற்றி இழிவாகவே கூறப்பட்டிருக்கின்றன என்பதையும் உணரலாம்.

இங்ஙனமே எல்லா நூல்களிலும் பெண்மக்களைப்பற்றி மிகவும் இழிவாகவே கூறப்பட்டிருக்கின்றது. ஐந்தாம் வேதம் என்று ஆரியர்களால் புகழப்படும் வடமொழி நூலாகிய பாரதம் சைவ சமயத்தவர்களால் தெய்வத் தன்மை பொருந்தியதென்றும் அருள் நூல் என்றும் போற்றப்படுகின்ற பெரிய புராணம் ஆகிய நூல்களில் பெண்களைப்பற்றி கூறப்படும் கதைகள் மிகப் பலவாகும். தெய்வத் தன்மையுள்ள பாடல்கள் என்று கொண்டாடப்படும் திருப்புகழ் என்னும் நூலைப் போலப் பெண் மக்களைக் குறைகூறும் நூல் வேறொன்றும் இல்லை. இத்தகைய நூல்களைப் போற்றுகின்ற வரையில் பெண் மக்கள் விடுதலை பெறுவது எது?

ஆண் மக்களாலேயே பெண் மக்கள் துன்புறுவதும், இன்பம் இழப்பதும்; கண்கூடாயிருக்கப் பெண்மக்களால் தான் ஆண்மக்கள் கெடுகின்றார்கள் என்று கூறுவது எவ்வளவு அறிவற்ற உரையாகும்! யாருக்கும் தன்னைத் தானே அடக்கியாளும் ஆற்றல் வேண்டும். அவ்வாற்றல் இல்லாதவர்களை அறிவுடையவர்களென்றோ ஆண்மையுடையவர்களென்றோ கூற முடியாது. 'தீதும் நன்றும் பிறர் தரவாரா" என்று கூறும் அறிஞர் மொழி உற்று நோக்குதற்குரியதாகும். தன்னைத் தான் அடக்கியாளுந் திறமையற்றவர்களைக் கோழைகளென்றே கூற வேண்டும். பெண் மக்கள் எப்பொழுதும் தம்மைத்தாமே அடக்கியாளுந்திறமையுடையவர்கள். ஆகவே இவ்வகையில் நோக்கும்போது பெண் மக்கள் கோழைகளா? ஆண் மக்கள் கோழைகளா? என்பதை அறிந்துகொள்ளலாம். தமது மனத்தில் எழும் காம உணர்ச்சியை-ஆசையை-கெடுநினைப்பை அடக்கி ஆளமுடியாதவர்கள், ஞானிஎன்றும், யோகியென்றும் தவசியென்றும், சாமியென்றும் பெயர்வைத்துக்கொண்டு பெண் மக்கள் மீது பழி சுமத்தி யிருக்கின்றனரே. இவர்களை என்னென்போம்?

பெண் மக்கள் தமக்குச் செய்த நன்றியைச் சிறிதும் சிந்தியாமல், அவர்களைக் கூற்றுவனுக்கு ஒப்பிட்டுக் கூறும் மொழிகளும் நூல்களிற் காணப்படுகின்றன. ஆகவே, இவ்வாறு அவர்களைப் பலவகையில் இழித்துக் கூறுவதெல்லாம், ஆண் மக்கள் தங்கள் சுயநலத்திற்காகவே என்பதை ஒருவராலும் மறுக்க முடியாதென்பது உண்மை. இதுவரையில் பெண் மக்களைப்பற்றி வைதீகர்கள் இழிவு படுத்திக்கூறியுள்ளவற்றிற் பலவற்றைக் கூறினோம். இனி அவர்களுக்கு உயர்வு கொடுத்திருக்கும் சில செய்திகளைக் கூறுகின்றோம்.

# சாரதா மசோதா என்னும் பாலிய விவாகத் தடைச் சட்டம்

## 1930 ஏப்ரல் 1ந்தேதி முதல் அமுலுக்குவரும்

சமீபத்தில் இந்தியா சட்ட சபையி லும் ராஜாங்க சபையிலும் நிறை வேறி வைஸிராய் அநுமதியும் பெற்று விட்ட பாலிய விவாகத்தடைச்சட்டத் தின் முழுவிவரம்:-

பால்ய விவாகம் நடைபெறாமல் தடை செய்ய வேண்டியது அவசிய மாயிருப்பதால் கீழ்வருமாறு ஒரு சட் டம் இயற்றப்பட்டிருக்கிறது.

1. (1) இந்தச் சட்டத்திற்கு 1929-வது வருஷத்திய பாலிய விவாகத் தடைச்சட்டம் என்று பெயர்.

(2) பிரிட்டிஷ் பலுஜிஸ்தானம், சந் தால் பர்கானு முதலிய பிரதேசங்கள் உட்பட பிரிட்டிஷ் இந்தியா முழு தும் இந்தச் சட்டம் பிரயோகம் செய்யப்படும்.

(3) 1930 ஏப்ரல் 1-ந்தேதிமுதல் இந்தச் சட்டம் அமுலுக்கு வரும்.

2 (1) 18 வயதுக்குட்பட்ட ஆண் களும் 14 வயதுக்குட்பட்ட பெண்க ளும் 'பாலியர்' எனப்படுவார்கள்.

(2) கலியாணம் செய்யும் தம்பதி களில் மணமகனோ அல்லது மணமக ளோ பாலியமாயிருந்தால் அந்த விவாகம் பாலிய விவாகம் எனப்படும்.

(3) விவாகம் செய்யும் ஆணும் பெண்ணும் "விவாகம்செய்பவர்"கள் ஆவார்கள்.

(4) 18-வயதுக்குட்பட்ட ஆண் களும் 14-வயதுக்குட்பட்ட பெண் களும் "பருவமடையாதவர்கள்" (மைனர்கள்) ஆவார்கள்.

3 18-வயதுக்கு மேல் 21வயது க்குட்பட்ட ஒரு புருஷன் பாலிய விவாகம் செய்தால் அவனுக்கு ஆயி ரம் ரூபாய் வரை அபராதம் விதிக் கப்படும்.

4. 21-வயதுக்கு மேற்பட்ட புரு ஷன் பாலிய விவாகம் செய்தால் அவனுக்கு ஒரு மாதத்துக்குட்பட்ட சிறைத் தண்டனையோ ஆயிரம் ரூபாய் அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

5. பாலிய விவாகம் நடத்தி வைக் கிறவர்களுக்கும் அல்லது நடத்தக் காரணமா யிருப்பவர்களுக்கும் ஒரு மாதத்துக்குட்பட்ட சிறைத் தண்டனையோ ஆயிரம் ரூபா அபரா தமோ அல்லது இரண்டுமோ விதிக் கப்படும்.

6 (1) 'பருவமடையாதார்' பா லிய விவாகம் செய்தால் அவர்களின் பெற்றோர் அல்லது கார்டியன் கள் அல்லது அவர்கள் பாது காப்புக்குச் சட்டப்படியோ மற்றப் படியோ கடமைப்பட்டவர்கள், அக் கலியாணத்தை நடத்திவைக்கவோ அல்லது நடப்பதைத் தடுக்காமல் அசிரத்தையாக இருக்கவோ செய் தால், அவர்களுக்கு ஒரு மாதத்துக் குட்பட்ட சிறைத் தண்டனையோ ஆயிரம் ரூபாய் அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும். ஆனால் பெண்களுக்கு சிறை வாசத் தண் டனை கிடையாது.

7. 1897வது வருஷத்திய பொது விதிச் சட்டம் 25வது செக்ஷனிலும் இ. பி. கோ. 64வது செக்ஷனிலும் என்ன சொல்லப்பட்டிருந்தாலும் சரி, இச்சட்டத்தின் 3-வது செக் ஷன்படி குற்றம் செய்பவர் அபரா தம் கொடுக்கத்தவறினால், அதற்குப் பதிலாக சிறைவாசத் தண்டனை விதிக்க எந்தக்கோர்ட்டுக்கும் அதி காரமில்லை.

8. 1898வது வருஷத்திய கி. பி. கோ. 190.வது செக்ஷன் எவ் வாறு கூறினும் சரி, இந்தச் சட்டப்படியுள்ள குற்ற வாளிகளை விசாரணை செய்யவும், நடவடிக்கை நடத்தவும் பிரசிடென் ஸி மாஜிஸ்டிரேட்டு அல்லது ஜில்லா மாஜிஸ்டிரேட்டுகளைத் தவிர வேறெந் தக் கோர்ட்டாருக்கும் அதிகாரமில்லை

9. பாலியவிவாகம் நடைபெற்றது முதல் ஒரு வருஷ காலத்துக்குள் அதைப் பற்றிக் கோர்ட்டில் வழக் குத் தொடர வேண்டும். அதற்கு மேல் கொண்டு வரும் வழக்குகள் செல்லுபடியாக மாட்டா.

10. இச்சட்டப்படி வழக்குகளை ஒப்புக் கொள்ளும் கோர்ட்டார் 1898 வது வருஷத்திய கி. பி. கோ. 203 வது செக்ஷன்படி வழக் கைத் தள்ளுபடி செய்யவில்லை யானால் கி. பி. கோ. 20, 21வது செக்ஷன்படி விசாரணை செய்ய வேண்டும் அல்லது தம் அதிகாரத் துக்குட்பட்ட ஒரு முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு, அவ்வழக்கை விசா ரணை செய்யும்படி ஏற்பாடு செய்ய வேண்டும்.

11. (1) வழக்கைஒப்புக்கொண்டு எதிரி கோர்ட்டில் ஆஜராகும்படி சம்மன் அனுப்புமுன் (ஒரு கால் வழக்குத் தோல்வியுற்றால், 1898வது வருஷத்திய கி. பி. கோ. 250 வது செக்ஷன்படி எதிரிகளுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டியதாகவருமா கையால், 100 ரூபா ரொக்கமினாவி னும் அல்லது 100 ரூபாய்க்குஒரு முச் சலிக்காவோ கொடுக்கும்படி கோர்ட் டார் வாதிக்கு உத்தரவளிக்கவேண் டும். கோர்ட்டார் குறிப்பிட்ட காலத் துக்குள் வாதி அவ்வாறு செய்யாவிட் டால் வழக்கு தள்ளுபடி செய்யப் படும்.

(2) இவ்வகையிலும் வாங்கும் ஜா மீன் அல்லது முச்சலிக்கா 1898வது வருஷத்திய கி. பி. கோ. படி வாங் கப்படுவதாகக்கருதப்படும். எனவே, அந்தக் கோடின் 42வது செக்ஷன் படி அந்த ஜாமீன் அல்லது முச்சலிக் கா வாங்கப்படும்.

## ஆசார சீர்திருத்தம்

(ஸ்ரீ. ஆதிநாதன்)

மக்கள் ஆறு அறிவினர். அவர் கள் அதனால் முற்றிய விடுதலை பெற் றுத்தன் பிரியம் போல் நடப்பதற்கு உரியர் அவர்களை நன்றாக நடக்கவும் எல்லா உரிமையும் நுகரவும் செய்ய வேண்டுமென்று அரும்பெரும் தலை வர்கள் பாடுபட்டனர் படுகின்றனர்; படுவர்.

பெரியோர் தோற்றிய தூயமுறை களைப் பின்னுள்ளோர் நாளாக ஆக வழக்க மென்னும் காரணத்தைக் காட்டித்தன் நலத்துக்காக அறியாத மக்களைப்பயன் படுத்திக் கொண்ட னர். எவன் தெரிந்தோ தெரியா தோ வழக்கத்தை முன்னிட்டோ பொதுவான முறைகளில் தீங்கு செய்கின்றனனோ அவன் தானும் வாழ்ந்தபாடில்லை. அதனால் நான் இஃதுஒரு பகுதியாருடைய உரிமை யில், அறிவுடைய ஒவ்வொருவனு டைய முதற்கடமையே யாகும்என்று வற்புறுத்திக் கூறுகின்றேன்.

முதலில் தன்னைத்தானே ஒவ் வொரு மனிதனும் தனது உள்ள மறிந்த செந்நெறியின் வழியில் திரு த்திக்கொண்டு பின்னர் தன்சொல் லாலும் செயலாலும் எண்ணத்தா லும் பிறரை வழிப்படுத்த வேண் டும்.

மனச்சான்றை மதித்து நடக்கின்ற ஒவ்வொருவரும், அறத்தைப்பொ ருள் படுத்துகிறவர்களும், அறிவுள்ள வர்களும், தானும் பிறரும் உலகில் கூடியவரை நல் வாழ்வை நடாத்த வேண்டுமென்கிற உயர்ந்த கொள் கையுடையவர்களும் இடம்காலத்து க்கு ஏற்ற புதுமுறைகளை உடனே கைக்கோடல் வேண்டும்.

புதிய வண்டி நன்கு செல்லும் அழகாகவும், உறுதியாகவும் இருக் கும். நாள் செல்லச் செல்ல ஆடிய சைந்து ஓடி யொடிந்து சென்று சிர ழிந்து கழன்று கட்டழிந்து போகிற து. உடனே அதைச்சீர்திருத்த வே ண்டும் அல்லது புதிது செய்யவேண் டும்; இல்லாவிட்டால் வண்டி, மாடு ஓட்டுபவன், உள்ளிருப்பவன் யாவும் இடைவழியில் வீழ்ந்து பல்முகம் உடை ந்து கெட நேரிடும்.

அது போல் நமது ஆசாரமும் ஆகி விட்டது திருத்தத்திலுங்குறிப்பிறோம், இல்லாவிட்டால் யாவரும் கெட வேண்டியது தான். திருத்தத்தில் விருந்த முற்போக்கு உடையார் சிலர் மெதுவாக ஒப்புக்கொண்டு சிறிது சிறிது செய்பவர் ஒரு சாரார். இவர்களை எதிர்ப்பவர்ஒரு பகுதியி னர் பழிப்பவர், பழிப்பவர் மறுபிறி வினர்.

ஆழ்ந்த அறிவில்லாமல் அவர்கள் தங்களையும் தமது உயர்ந்த முறைக ளையும் கெடுக்க வந்தது சீர்திருத்தம் என்று கருதுகின்றனர்.

தன்னைத்தான் திருத்தவேண்டி யது எதில் என்றால்,

1. எண்ணமும் சொல்லும் செய லும் மாறுபடாதிருத்தல்.

2. நன்று என்றுதான் கண்டதை கூடியவரை உடனே கைக் கொள்ளு தல்.

3. தீதென்றுணர்ந்ததை அப்பொ ழுதே அகற்றல்

4. எதற்கும் சிறிதும் அஞ்சாத நல்லநெஞ்சம் உடையவனாக இருத் தல்.

5. வருகிற எதிர்ப்பு, துன்பம் யாவற்றையும் பொறுத்துக்கொண்டு நல்ல நெறி யொழுகல்.

6. நன்கு வேலை செய்து உடலை வலிமைபெறச் செய்தல்

7. விருந்த தனது வலிமையைத் தற் காப்புக்கும் பிறர்க்கு உதவும் பயன்படு தல்,

8 தூய்மையாக இருத்தல்.

9 எதிரிகளுக்கும் நன்மை கருது தல்.

10. யாவரிடத்தும் அன்பாகவும், பெரியோரிடத்துப் பணிவாகவும் நடந்து கொள்ளுதல். முதலியவைக ளில்.

இத்தகைய இலக்கணம் அமைந்த சீர்திருத்தக்காரன், கல்வி கேள்வி ஆராய்ச்சி (சிந்தனை) முதலியவற் றைக்கொண்டு உலக வியல்புகளை யும் மக்கள் நிலைமைகளையும் தெரிந் து அதிலுள்ள குற்றம் குறைகளைப் போக்கிச் செம்மை செய்யவும், புதிய நல்ல முறைகளைத்தான் கண்டு கை யாடிய வண்ணம் பிறரையும் மேற் கொள்ளச் செய்யவும் உரியவனு வான்.

ஒருகுடிப் பிறந்த பல்லோருள்ளு மூத்தோன் வருக வென்னு தவருள் அறிவுடையோனா றரசுஞ்செல்லும்; என்பர் ஆரியப்படை தந்த நெடுஞ் செழிய னென்னும் பாண்டியப் பேர ரசர்.

நல்லறிவுடையோர் நடக்கும் செந்நெ றிக்கண்ணே அரசரும் வந்துசேர்ந்து பொருந்துவார் என்றால் பிறரைக் கூறவும் வேண்டுமோ?

பிறரைச்சீர்திருத்தும் முறை: —

1. தனது சீலத்தாலும் நல்ல சொல்லாலும் பிறர் தாமே வந்துபின் பற்றச்செய்தல்.

2. தன்னைப் போல் பிறரும் உல கில் உரிமைபெற்று வாழ ஏற்றவழி களை நாடுதல்.

3. அவற்றை முதலில் தாம் கை யாடி உண்டாகும் பயனை உணர்ந்து பிறர்க்கும் அவர்கள் ஏற்கும் வகை யில் எடுத்துரைத்தல்.

4. பின்பற்றுவோர்க்கு அப்போ தைக்கப்போது அப்புதிய முறைகள் தூயவற்றை அறிவித்து நலமுறச் செய்தல்

5. எதிர்ப்பவர்கள் நல்லவர்களாக இருந்தால் அவர்களும் உணரும்வகை யில் ஏற்ற சமாதானங்களை இனிமை யாக எடுத்துரைத்தல்.

6. பிறரைப் பொருள் படுத்தாது தன் காரியத்தில் கருத்தாயிருத்தல்.

7. பெரியோரிடம் பணிவாக நட ந்து கொண்டு அறியாமல் அவர்கள் பழித்தால் அதை ஆசிர்வாதமாகக் கருதுதல்.

8; எத்தகைய குறைகளையும் அஞ்

சாது எடுத்துச்சட்டச்சட அறிவித்தல்.

9. எதிரிகள் கூறுவதையெல்லாம் கேட்டு அவற்றிலுள்ள சரியானவற்றை ஒப்புக்கொண்டு தம்முறையைப் பண்படுத்திக் கொள்ளல்.

10. எதிர்ப்பவர்கள் இருப்பதனல் எவ்வளவு தூய்மையும், தெளிவும் உயர்வும் ஏற்படக் காரணமாக இருக்கிற தென்றறிந்து யாவரையும் உறவாகக்கருதல்.

இனி நமது முறையிலுள்ள குறைகள் யாவை, அவற்றைபோக்குவது எவ்வாறெ ன ஆய்வோம்.

1. ஒரு பகுதியினரை நம்மிலிருந்து பிரித்து இழிவாகக் கருதுவதுடன் அவர்களைத் தீண்டாதும்பொதுவான உரிமைகளைப் பெறவிடாதும் இழுத்து அவர்களுக்கும்நமக்கும் தீங்கு செய்துகொள்கிறோம்.

2 ஒரு பிரிவினரை உயர்வாகக் கருதி அவர்களைச் செருக்கடையவும், நன்றியற்றியாயிருக்கவும், பிறரை அவமதிக்கவும் விட்டு இருபகுதியினருக்கும் கேடு தேடிக் கொள்ளுகிறோம்.

3. பொது இடம், கோயில், குளம் சத்திரம், சாவடிகளை நாமே ஒரு தலைச் சார்பாகப் பயன்படுத்திக் கொள்ளுகிறோம் அதிலும் ஒரு சாரருக்கு முற்றிய உரிமை கொடுத்திருக்கிறோம்,

4 வழக்கத்தை வைத்துக்கொண்டு பெண்களை இளமையில் மணம் செய்து கொடுக்கிறோம். முதியோருக்கு இளம் பெண்ணைக் கொடுக்கிறோம். ஆண்மக்கள் எத்தனை கலியாணம் செய்துகொண்டாலும் மகளிர் மறுமணம்செய்து கொள்ளக்கூடாது என்கிறோம்.

5. கலியாணம் கருமாதி முதலிய சிறிய நாட்களில் கடன்பட்டாவது ஆடம்பரம் செய்கிறோம் நம்மைப் பொருட்படுத்தாத ஒரு பகுதியினருக்கு மிக்க மரியாதையும் குருத்துவமும் கொடுத்துக் கடன்கழிக்கிறோம்

6. இளைஞர்களுக்கு ஏற்ற கல்வி பயிற்றுது ஆரம்பக்கல்வியை நாகரீக முறையில் சீரழித்துக்கற்கச் செய்கிறோம் பெண்மக்களைப்படிக்கவைக்க மாட்டோம் என்கிறோம்.

7. நம்மையும் நம்மைச்சார்ந்த இடத்தையும் தூய்மையாக வைத்துக்கொண்டு பொது இடங்களிலும் சாலைகளிலும் அசிங்கம் செய்கிறோம்.

8 பொய்யான பல புராணங்களை நம்பி நாமும் தீமைசெய்து அதைப் பரிகரிக்கவழியும்தேடுகிறோம் மூடத்தனமாக நம்மைத் தாழ்த்தி ஒரு குலக்வருக்கே உயர்வு அளித்து விடுகிறோம்.

9. பெண்டிரை அடிமை போல் பாராட்டுவதன்றி நாம் செல்லும் இடத்திற்கு மனைவியரை அழைத்துப்போகாமல் வீட்டில் வைத்துவிட்டுவெளி நாட்டிற்குச் செல்லுகிறோம் பொது நலம் கூட்டத்துக்கு உழைக்கிறோம்.

10 பொது மகளிரை வைத்துக்கொண்டு அவர்களுக்குக் கோயில்களில் முறைவைத்துக் கெடுக்கிறோம். கடவுளுக்கு பலி, மது படைக்கிறோம். இவைபத்தையும் ஒவ்வொன்றாகப் பரிசீலனை செய்தால் ஒவ்வோர் அத்தியாயமாகும். இருந்தாலும் சிறிது பார்த்து ஒருவாறு முடிவு செய்வோம்.

தீண்டாமை கொடிது. அது நமக்கு ஏற்பட்டால் நாம் எவ்வாறு இருப்போம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். உண்மையில் எல்லாரும் உறவினராக இருந்தோம் என்பதை நாம் நன்கு உணரவில்லை, இப்பொழுது அக்கேடு நம்மையும் பற்றிவாட்டத் தொடங்கி விட்டது. தன்னைப் போல் பிறரைக் கருதுகின்ற ஒவ்வொருவரும் உடனே தீண்டாமையைப் போக்கிக் கொள்ள வேண்டும்.

அவர்களுக்குக் கல்வியும் பொது இடங்களில் ஒத்த உரிமையும் இப்பொழுது, முதல் முன்னேற்ற அறிகுறியாகச் செய்து கொடுக்க வேண்டும். பின்னர் தான் ஆவாக உடலுண்டலும் கொடுத்துக் கோடலும் ஏற்படலாம். அது குறையாகாது. முன்பு இல்லாததும் இல்லை. ஏதோ வழமையாலும் பழங் கொள்கையாலும் அவர்கள் இழிந்தவர்களாக எண்ணப் பெறலாம்.

2. ஒரு சாரரை மேலாக வைத்துவிட்டு அவர்களுக்குத் தானதருமம் செய்வதனல் அது அவர்களைச் செருக்கடையச் செய்து விடுகிறது. ஆகையால் நம் அறம் பாழாகப் போய் பழியாகி விடுகிறது. அவமதித்தாலும் காலில் வீழ்வது வழக்கமாகி விட்டது. சீச்சீ! இது இழிவினும் இழிவு! பாபம்! அவர்களைப் பாபிகளாக்கிவிடுவதுடன் நம்மையும் தன்பெருமைகெடச் செய்து விடுகிறது. தகுதியறிந்து உயர்வு கொடுக்கவேண்டுமே யொழிய பிறப்புக்குக் கொடுப்பது தீது உண்மையாக நடப்பவன் பிறருக்கு ஒத்த உரிமை அளிக்கலாமேயொழிய உயர்வோ தாழ்வோ அளிப்பவன் சரியான மனிதன் அல்லன் நல்லோர்களை மதிக்கலாம். அன்பால் மதித்து அவர்களையும் ஒப்ப நடத்தவேண்டும தாக்கிலைப் பது காக்கை பிடிப்பதுபோல்தான்.

3. கடவுள் இருக்கும் இடம் அவரால் படைக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் உரித்தாகவேண்டும். இயற்கையில் கடவுள் ஒரு சாரருக்கு அருள் செய்வதாயிருந்தால் வெயில் மழை காற்று பனியாவும் அவர்களுக்கே பயன் தரவேண்டும்.

அறத்தால் உலகம் நிலைபெறுவதானுல் அது உலகிலுள்ள யாவருக்கும் ஒப்ப உரியதாகும். அதனல் யாவரும் பொதுக் காரியங்களில் முற்றிய உரிமைபெறச் செயல்வேண்டும்.

4. இளமணம் காதலைக் கெடுத்து ஒழுக்க நெறி குன்றச் செய்கிறது. கணவனை இழக்க நேர்ந்தால் இன்பம் அறியாதொழியப் பண்ணுகிறது; அல்லது கெடச் செய்கிறது. முதியோருக்கு இளம் பெண்களைக் கொடுத்தலால் கணவனை மதியாமையும், கற்புக்கேடும் நாம் கொடுப்பவர்களாவோம் மறுமணம் செய்யாதது கொடும் பாபம், அவளைக் கெடுத்து நன்னெறியைக் கைவிட வற்புறுத்துகிறது. அதனல் உடனே அவைகளைத் தொலைத்துவிடவேண்டும்.

5 ஆடம்பரச் சடங்கு பிற்கால வாழ்வைச் சீர்குலைத்துத் துன்பத்துக்கு உட்படுத்துகிறது. ஒருநாள் கூத்துக்கு மீசையைச் சிரைப்பது போல் ஏழைகள் ஒருநாள் கலியாணத்துக்கு உள்ள நாளெல்லாம் துன்புறக் கடன்படுகின்றனர். அதனல் அறிந்தோர் செல்வர்கள் துணிந்து 5, 10, செலவில் மணமுடித்துக் காட்டவேண்டும். ஏதாவது அதிகம் செலவு செய்யப் பிரியப்பட்டால் ஏழைகளுக்குப் பிழைப்பு அளிக்கட்டும். கடவுளுக்காகப்பணம் பறிக்கஅன்பும், தூய்மையும் இல்லாது வருகிற தகுதியற்றவனைக் கூட வழக்கத்தாலும், உயர் குலம் என்று கருதுவதாலும் வைத்துத் தூய உயர்ந்த கருமங்களைச் செய்கிறோம். அதற்குரியவர்கள் அன்பு ஒழுக்கம் உடைய முதியோர்கள் தான் குல மதம்கூட இதில் கலக்க வேண்டுவதில்லை.

6. கிராமங்களில் நாகரீக ஆங்கிலக்கலை கற்கு தவாத எட்டுச்சுவரயாகி விடுகிறது. தொன்மையான் சிறந்த கணிதம் இலக்கணம் இலக்கியத்தை விட்டுவிடுகின்றனர். பெரிய ஊர்களிலும்சிறிது கற்பவர்கள் ஒன்றுக்கும் உதவாது தான் ஒழிகின்றனர். அதனல் திண்ணைப்பள்ளிக்கூட முறைகளை ஆரம்பக்கல்வியுடன் கூட்டி முன்னேற்றமடையச் செய்ய வேண்டும். பேருரினர் படிக்கக்கூடியவர்களை எப்படியாவது முற்றும் கல்லூரிக்கலைகளைக் கற்கச் செய்ய வேண்டும்.

பெண்கள் உலகில் பாதி அவர்கள் அறிவுபெற்றால் குடும்பத்துக்கு நன்மை மிகும் ஆணைப்போல் பெண்ணையும் கற்கச் செய்ய வேண்டும். அப்படிச்செய்தால் பெண்டிரே நன்கும் கற்றுச்சிறப்படைவர். ஆங்காங்கே நடக்கும் சில மூடக்காரணங்களைக் கொண்டு எல்லாப் பெண்களையும் படிக்கவையா திருத்தல் பெருந்தவறு.

7. ஆறு, கோயில், குளம், தெருக்களை ஜலமலக்கழிவுக்கிடமாக்கி விட்டுஅந்நீரை உண்டு அதனுள்குளிப்பவர்களுக்கும் வழங்குகிறவர்களுக்கும் நடமாடுகிறவர்களுக்கும் தீமை செய்கிறோம். நமக்கு முன்பு வேறெருவனும் அவ்வாறே பொது இடத்தை நோய் வளரும் இடமாக்கி இருப்பான். மாமாங்கக்குளம்போன்ற கலங்கலான கரி நீரைக் குளிக்கப் பயன்படுத்துவதனல் நோயும் சாவும் தேடிக் கொள்ளுகிறோம்.

அதனல் பொது இடங்களைத்தூயதாக வைத்துப் பெருந்திருவிழாவில் தக்கபடி நடத்திக்கொள்ள வேண்டும்.

8. இராமாயணம் பாரதத்தைப் பொய்யென்று புறக்கணிக்கா விட்டாலும் ஓர் அறம் கூறு நூல் எனலாம். திருவிளையாடல் போன்ற புராணம் தீயோருக்குக்குப் பலனளிக்கிறது. எதற்கும் பரிகாரம் இருந்தால் ஏன் ஒருவன் தான்வாழக்கொடும்பாபம் புரியமாட்டான்? தன்னலம் பற்றிய ஒரு குலத்தவரைக் கடவுகளாகக் கருதவும் அவர்களுக்கு, "வேண்டாம், 'வேண்டாம்" என்றுகூற, அறஞ்செய்யவும் சொல்லுகிறது பொய்புராணங்கள். அவற்றைக் கழித்து மெய்புணரவேண்டும்.

9. பெண்களை அடிமைகளாக்கி நாமும் அடிமைப்பட்டுப் பாதிக்கல்வி அறிவு ஒழுக்கம் வீரம் எல்லாவற்றையும் இழந்து பலமற்று கெடுகிறோம். தொலைச்செல்லும் பொழுது மகளிரை இல்லில்தங்கவைத்து ஒழுக்கங்கெடப்பண்ணுகிறோம். இன்பமும் பாதி இழக்கிறோம். உடனே அவர்களை ஒப்ப நடாத்தல்வேண்டும்.

10. பொது மகளிர்வாழ்க்கையில் கோயிலைக் காம விடுதியாக வைத்து இளைஞர்களை நோய்வாய்ப்படச் செய்கிறோம். அதனல்பொதுமகளிரை நீக்கி நெறி முறையில் மக்களை நடத்த வேண்டும்.

கடவுளுக்கே மது பலியளித்தால் மக்கள்ஏன் அப்பாபநெறியொழுகார்? குடிப்பது எத்தனை குடிகளைக்கெடுத்து பகைவளரச்செய்கிறது. அதனலவைகளை அகற்றிவிட்டுத் தூயநன்முறைகளைப்புகுத்தி விடல்வேண்டும்.

முன்பு மக்களாகிய நாம் ஆடுமாடு குதிரைகளைத்தின்றோம். இதிலவுபார்ப்பனர் என்று கூறிக்கொள்கிறவர்கள் முன் அணியில் இருந்தனர். பிறகு புத்தமதமும் அதைச்சார்ந்தவைகளும் தோன்றின. மது மாமிசம் அகற்ற வேண்டியதாயிற்று மதத்தை விடா விட்டாலும் பார்ப்பனர் காலஇயல்புக்கு ஏற்பமாறிவிட்டனர். பறையர் தம் பழைமையும் உயர்வும் கருதிச் சும்மா இருந்துவிட்டனர் அதனல் நாகரிகம் அவர்களைத்தாழ்த்திவிட்டது 'துடியன், பாணன், பறையன், கடம்பன், என்று அந்நான்கு அல்லது குடியும் இல்லை' என்று புலவரால் புகழ்ந்து உரைக்கப்பெற்ற குடிகளில் ஒன்றாகிய பழம் பறைக்குடி மிக இழிந்துவிட்டது. இப்பொழுதும் ஆங்கிலக் கல்வியை நாம புறக்கணியாது காலத்துக்கேற்பக் கற்கக்கூடியவர்களை முற்றும் கற்கச் செய்துவிடல் வேண்டியதிருக்கிறது. அவைத்தனைப் பழக்கமும் நன்கு பெறவேண்டும்.

மற்றென்றாகிய அதை விரித்தால் மிகப் பெருகும் என விட்டுவிடுகிறேன். பின்னர் தனியாகப் பார்த்துக் கொள்ளலாம்.

---

வியாபாரத்திற்கழகு —
— விளம்பரம் செய்தல்

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

வக்கீல்கள், தங்கள் செல்வாக்கை உபயோகப்படுத்தி பொருள் சேர்த்து குருபக்தியைக் காட்டி அந்த ஊரில் அனேகர் பல நாள் பட்டினியாகக் கிடந்தாலும், தாங்களும் தங்கள் பந்து குமஸ்தாக்களும் குரு பிரசாதமென்று விருந்தை பிராமண உத்தமர்களென்று உண்டு திருப்தியடைகிறார்கள். இதற்குத்தான் பிராமண போஜனமென்று பெயர். இந்த பிராமண போஜனத்தைச் செய்கிறவன் தான் கடவுளால் உண்டு பண்ணப்பட்ட புண்ணியலோகத்திலும் உலக சுகத்திலும் இருப்பானென்று நமது ஈஸ்வரன் சொன்னதாகவும், அதைப் பக்கமிருந்து கேட்ட நமது பெரியவர்கள் எழுதிவைத்ததாகவும், அதுவே சமயக்கிரிகைகளிலுள்ள வைதீகிரியமென்றும் சொல்லுகிறார்கள். இதையே நமது சமூகங்களுக்கெல்லாம் சொல்லப்பட்டு மண்டையில் நிறைக்கப்பட்டிருக்கின்றது. இதுவே கடவுள் வாக்காயும் சமயக்கட்டளையுமாக மனிதனுடைய எல்லாக்காரியங்களும் சம்பூரணமடைந்து விடுகையில் ஏழைகளைப்பற்றினகவலை இருக்க இடமெங்கே?

நமது சமூகத்தில் செல்வர்களாயிருக்கும் நாட்டுக் கோட்டை நகரத்துப் பிரபுக்கள் திட்டுப் பட்டுப் பழுதுபட்டுத் தெய்வலோகத்திற்குப் போய் விட்ட நம் தெய்வங்களைக் கூட்டிக்கொண்டு வருவதற்குக் கும்பாபிஷேகம் செய்வதே அவர்கள் வேலையாயிருக்கையில் நமது மதத்தை விட்டுப்போகும் ஏழைகளைப் போகாமல் காப்பாற்றுவதற்கு நேரமெங்கே? அதைக் கைகொள்ள அதற்கு ஆதாரமெங்கே? அதை உபதேசிக்கப் பண்டிதனோ சாஸ்திரியோ எங்கே? கடவுள் திட்டுப்பட்டும் பழுதுபட்டும் கோயிலை விட்டுப்போய் விட்டார்; அவரை கும்பாபிஷேக மந்திரத்தால் கூப்பிட்டுப் பார்ப்பானுக்குச் சோறும் தக்ஷிணையும் கொடுக்கவேண்டுமென்று கடவுள் சொன்னதை அவர் பக்கமிருந்த பெரியவர்கள் எழுதிவைத்தார்கள் என்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றனவென்றும், அதனால் புண்ணியலோகப் பேறும் இகலோக சுகங்களும் மூன்று வட்டியை மூன்னூறு வட்டியாகக் கூட்டிப் பெருக்கும் லாபமும் உண்டாகுமென்றும் வேத ஆகம சாஸ்திரங்களிலும் சொல்லப்பட்டதாகத் தானே நாட்டுக்கோட்டை நகரத்தார்களுக்கு உபதேசமாயிருக்கிறது.

வீரமிகுந்த ஜாதியார்களெல்லாம் அன்னிய மதத்திற்கு ஓட்டிவிட்டால் நமது கோயில்களும் அதிலுள்ள சாமிகளும் அல்லல் தொல்லை அற்று அதில் குடியிருக்க முடியுமா? என்பதைச் சிந்திக்க ஆளில்லை அவரைக் கூட்டிக்கொண்டு வரவும் அந்த விருந்தில் வயிற்றை நிறைக்கவும் பக்தர்களிருக்கிறார்கள். எல்லா மதத்தினுடையத் தனிக்கடவுளும் அவரவர்கள் மதத்தைக் காப்பாற்றிக்கொள்ளச் சொல்லியிருக்கிறது. அதைப் பலப்படுத்த எல்லாரையும் தன்னண்டை அழைத்துவரச் சொல்லுகிறது. நமது கடவுள் அதேமாதிரி நமக்கும் சொல்லியிருக்கலாம்; பக்கமிருந்த பாவிகள் அதை நமது சன சமூகங்களுக்குச் சொல்லவில்லை. அதைச்சொல்லி யிருந்தால் நமது பல கோவில்களும் பல தெய்வங்களும் பல நூற்றாண்டிற்கு முன்னே அடிபட்டு அவஸ்தைப்பட்டிருக்கமாட்டா. மடாதிபதிகளோ, சமூக விஷயமாக வரும் எந்த சீர்திருத்தங்களையும் தடைப்படுத்துவதற்குப் பொருள் கொடுப்பதும் உத்தியோகஸ்தர்களுக்கும் வக்கீல்களுக்கும் உபசரணை செய்வதிலும் சங்கீத கேளிக்கைகளிலும் காலத்தைப் போக்க ஆசைப்படுகிறார்கள். நமது சன சமூகத்தைக் காப்பாற்றவேண்டிய மேற் சொன்ன பெரியவர்களெல்லாம் மேற் சொன்ன தன்மையோடிருந்துவிட்டால், நமது சமூகங்களின் விருத்தியையும் பெருக்கத்தையும் கவனிப்பவர்கள் யார்? சக்திக்குத் தகுந்தபடி முயற்சிசெய்ய வந்திருக்கும் சுயமரியாதைச் சங்கங்களை நாஸ்திகரென்றும் கல்வியறிவில்லாதவர்களென்றும் சமயத்தையும் நாட்டையும் அழிக்க வந்தவர்களென்றும் சொல்லிவிடுவதினால் சமயத்தாலுண்டாகும் சமூகத்துன்பங்கள் தீர்ந்துவிடுமா?

ஆண்மையோடு பக்தி விஸ்வாசம் மிகுந்த ஜாதிகளையெல்லாம் ஒடுக்கி அன்னிய மதத்திற்கு ஓட்டி, சமயத்திற்குத் தகுந்த வேஷம் போட்டு பூரி தட்சணைக்கே வழி தேடி இரண்டு பிரதமன், மூன்று பொரியல், இரண்டு வருவல், இரண்டு பச்சடி, ஒரு கிச்சடி, இரண்டு குழம்பு, மூன்று சித்திரான்னம், லாடு, ஜிலேப்பி, வடை, பழம், சர்க்கரை முதலியவைகளோடு சாப்பிட்டு வேதம் சொல்லி சாஸ்திர விசாரணை செய்யும் பார்ப்பனர்களையும் ஆகமவிதி யென்று அர்ச்சனைக்கே அலைந்து திரியும் ஆதிசைவர்களையும் இவர்களை நம்பியிருக்கும் சமயவாதிகளையும் நம்பியிருந்தால், நமது சமூகங்கள் மேல் உலகத்தில்சொர்க்க மனுபவிக்கலாம், என்றே வைத்துக்கொள்ளுவோம் இந்த உலகத்து மண்டையடியை யாரால் சகிக்க முடியும்? இதைப்பற்றின இன்னும் பல விஷயங்கள் அடுத்த வியாசத்தில் எழுதுகிறேன். அதையும் படிக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். (தொடரும்)

---

"சுயமரியாதை இறுதிக் கடமை":- வந்தவாசி, பாக்கார திரு. சௌபாக்கியமாளின் இறுதிக் கடமை சடங்கு வெள்ளியன்று 25-10-29 பார்ப்பனியமன்றி ஏழைகளுக்கு அன்னமளித்து அன்றே வேலாள ஏழைமாணவ கல்வி பயிற்சிக்கென என்று மழியா ரூ. 500 பாக்கார சௌபாக்கியம்மாள் நிதியென நாமமிட்டு, பா. தணிகாசல, இராமலிங்கம் அவர்களால் எடுத்து வைக்கப்பெற்றது.

# முல்லாக்களுக்கு ஆபத்து

"பம்பாய்க் கிரானிக்கள்" பத்திரிகை எழுதுகிறது:-

சமய சமூகச் சீர்திருத்த விஷயமாக தேச முழுவதும் பல சங்கங்கள் தோன்றத் தொடங்கியிருப்பது நல்ல காலத்துக்கு அறிகுறியென்றே சொல்ல வேண்டும். இதற்கு முன்னும் இதுபோன்ற சங்கங்கள் தோன்றியுள்ளனவாயினும் அச்சங்கங்களிடத்துப் பொது மக்களுக்கு அவ்வளவு நம்பிக்கையும் மதிப்பும் ஏற்படவில்லை. இப்பொழுதோ ஏராளமாகத் தோன்றத் தொடங்கியிருக்கும் இந்தச் சீர்திருத்தச் சங்கங்களை பொதுமக்கள் மிகுதியாக ஆதரிக்க முன் வருகின்றனர். இவ்வண்ணம் தோன்றி வரும் சங்கங்களில் சில ஜாதியை ஒழிக்கவும் சில பெண்கள் விடுதலைக்கும் சில புரோகிதர்களைச் சீர்திருத்தவும் சில உலக முழுதுக்கும்பொதுவான ஒரு சமரச மதத்தை ஸ்தாபிக்கவும் பிரசாரம் செய்கின்றன. இப்பொழுது முல்லாக்களைச்சீர்திருத்தும் பொருட்டுஒருசங்கம்தோன்றியிருக்கிறது. முல்லாக்களெல்லாம் குறுகிய நோக்கமும் மூடப் பழக்கவழக்கமும் குருட்டுநம்பிக்கையும் மதவெறியும் பிடிவாதமும் உடையவர்களாயிருப்பதால் அவர்களைச் சீர்திருத்தும் பொருட்டு இந்தச் சங்கம் தோற்றுவிக்கப்பட்டிருப்பதாக அந்தச் சங்க ஸ்தாபகர்கள் வெளியிட்டிருக்கும் விஞ்ஞாபனத்தில் காணப்படுகிறது. மௌல்விகளிலும் பீர்களிலும் பக்கிரிகளிலும் பலர் இந்த முல்லாக்களை போலவே மதவெறியும் குருட்டு நம்பிக்கையும் உடையவர்களாகி முஸ்லிம்களைத் தப்புவழியில் செலுத்திவருவதினால் இந்தச் சங்கத்தார் அவர்களையும் சீர்திருத்தப்போவதாகத்தெரிகிறது.

இந்தச் சங்கத்தார் எல்லா முல்லாக்களையும் மௌல்விகளையும்வரையறையின்றித் தாக்கவில்லை. சீர்திருத்தத்துக்கு எதிரிடையாக இருக்கும் பிற்போக்காளர்களான முல்லாக்களையும் மௌல்விகளையுமே அவர்கள் கண்டிக்கிறார்கள. முல்லாக்களைச் சீர்திருத்தி அவர்களை உத்தம முஸ்லிம் மதபோதகராக்குவதற்காகச் செய்யப்படும் முயற்சி பாராட்டத்தக்கதே. முல்லாக்களையே அடியோடு ஒழிப்பது தான் நல்ல சீர்திருத்தமாகும்; ஏன் என்றால் நபிகள் நாயகம் முல்லாக்களை ஆதரிக்கவில்லை.

எனினும், இந்தச் சங்கத்தார்செய்யும் முயற்சி நன்முயற்சி நன்றே கூறவேண்டும். ஆனால், சமயப்பற்றையும் சமய வெறியையும் பகுத்தறிவையும் வேலை மிகக்கஷ்டமானதென்று இந்தச் சீர்திருத்தச் சங்கத்தாருக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். அவ்விரண்டையும் நன்கறிவதற்கு பகுத்தறிவே ஏற்ற கருவி. பகுத்தறிவிற்கும் மனச்சாட்சிக்கும் பொருத்தமற்றதெல்லாம் சமயசம்பந்த முடையதாகக் கருதக்கூடாது. உதாரணமாக பாலிய விவாகத்தை எடுத்துக் கொள்வோம். அது பகுத்தறிவுக்கு பொருந்தாத கெட்ட வழக்கம் எனினும், அது சாஸ்திர சம்பந்தமானதென்று வாதிப்போரும் சிலர் இருக்கிறார்கள். இந்த தீய வழக்கத்தை இந்தச் சங்கத்தார் ஆதரிக்கிறார்களா இல்லையா என்பது திட்டமாகத் தெரியவில்லை. இந்த சங்கத்தை ஆதரிக்கும் ஒரு முஸ்லிம் பத்திரிகை சாரதா மசோதாவைக் கண்டித்து எழுதுகிறது. வைதீக ஒத்துழையாதாரான மௌலானா மகமது அலியும் அம்மசோதாவை ஆதரிக்கக் கூடாதென்று வைஸ்ராயிடம் விண்ணப்பம் செய்திருக்கிறார். அவர் பாலிய விவாகத்தையும் ஆதரிக்கவில்லை எனினும், இஸ்லாம் பாலிய விவாகத்தை ஆதரிக்கவில்லையானாலும் கண்டிக்கவில்லையென்று அவர் வாதம் செய்கிறார். இன்னவயதில் கலியாணம் செய்ய வேண்டுமென்று இஸ்லாம் வரையறுத்துக் கூறுவதற்குக் காரணமில்லாமலுமில்லை. பகுத்தறிவுக்குப் பொருந்தாத ஆசாரங்களை இஸ்லாம் ஒப்புக்கொள்வதில்லை. ஏனவே பகுத்தறிவுடையவர்கள் பாலிய விவாகம் செய்யமாட்டார்கள் என்று நம்பி இஸ்லாம் கலியாண வயதைவரையறுக்கவில்லை ஆகவே முஸ்லிம சட்டத்துக்கு ஆபத்து என்று அவர் பூச்சாண்டி காட்டுவதில் அர்த்தமே இல்லை. அவருடைய முறைப்பாடு இஸ்லாம் மத தத்துவத்துக்கே முரணானது. எகிப்திலும் துருக்கியிலும் சாரதா மசோதாவை விடக் கடினமான சட்டம் வெகு காலமாக அமுலில் இருந்து வருகிறது. அவ்விடத்திய முஸ்லிம்கள் அதைப்பற்றி குறைகூறவும் இல்லை, இஸ்லாம் மதத்துக்கும் அத்தகைய சட்டங்களால் எத்தகைய ஆபத்துண்டானதாகவும் தெரியவில்லை. ஆனால் முட்டுக்கட்டை போடும் பிடிவாதக்காரர்கள் நியாயத்துக்குக் கீழ்படியமாட்டார்கள். இந்திய சட்டசபையில் சாரதா மசோதாவை ஆதரித்த சில முஸ்லிம் மெம்பர்களை ஜாதிப்பிரஷ்டம் செய்ய வேண்டுமென்று சில பிரபல முஸ்லீம் தலைவர்கள் ஏற்பாடு செய்து வருகின்றார்களாம்.

இந்த நிலைமையில் தற்காலம் ஸ்தாபிக்கப் பட்டிருக்கும், முல்லா சீர்திருத்தச் சங்கம் மிகவும் இன்றியமையாததே. ஜாதிப்பிரஷ்டப் பேச்சுக் கிளம்பியதிலிருந்து 'இஸ்லாத்துக்கு ஆபத்து' என்று கூக்குரலிடுவோருக்கு இஸ்லாம் மதஞானமே கிடையாதென்பது உறுதியாய் விட்டது. பகுத்தறிவுப்படி நடப்பவனே உத்தம முஸ்லிம் என்றும் இஸ்லாம் மதம் போதனை செய்கிறது. ஆகவே, பகுத்தறிவுப்படி நடக்கும் முஸ்லிம்களுக்கு எதிரிடையாக எத்தனை பத்துவாக்களை பிறப்பித்தாலும் அவர்கள் பயப்படமாட்டார்கள்.

ஜனங்களுக்குச் சந்தோஷத்தைத் தரும்

## ஜமைகாரி தைலம்.

இத்தைலமானது 27 வகை வன மூலிகைகளால் செய்யப்பட்டது. அநேக நற்சாட்சிகள் பெற்றது.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"

நல்ல குளிர்ந்த வாசனையுள்ள தைலம்.

இத்தைலத்தால் தீரும் வியாதிகள்:—தீராத தலைக்கனம், ஓயாத மண்டையிடி, ஒருதலைக்குத்து, தலையரிப்பு, முடிகழிதல் இவைகளை நீக்கி கூந்தலை வளரச்செய்யும். காதிரைச்சல், காதடைப்பு, குத்தல், கண்வலி, எரிவு, கூச்சம், நீர்வடிதல், சிகப்பு விழுதல், நாசியிலிருந்து மஞ்சள்நிறத் தண்ணீர் வடிதல், ஓயாத் தும்மல், சிராபோல் விழுதல், வாய்க்கசப்பு, புளிப்பு, தூர்க்கந்த மடித்தல் முதலிய வியாதிகள்நீங்கி தேகத்திற்குச்சுகம்உண்டாகும். கண்டத்துக்குமேல் ஏற்படக்கூடிய 96 வியாதிகளும் தீரும்.

பெரிய டின் ரூ. 1—12—0 }
சிறிய டின் ரூ. 1—0—0 } தபால் சார்ஜ் வேறு.

## பார்ச வாய்வு மருந்து.

விதை வாய்வு, நரம்புத்தடிப்பு, வலி, வீக்கம் முதலிய விதை சம்மந்தமான சகல வியாதிகளுக்கும் இந்த மருந்தை உபயோகியுங்கள். பத்தியம் கிடையாது. பெண்கள் அண்டவாய்வுக்கும் உபயோகிக்கலாம்.

14 வேளை மருந்து ரூபா 1—0—0. தபால் சார்ஜ் வேறு.

சிங்கப்பூர், பினாங்கு முதலிய வெளிநாட்டு நேயர்கள் வி. பி. செலவு சேர்த்து முன்பணம் அனுப்பவேண்டும். நீங்கள் கடிதம் எழுதும்போது தெளிவாய் அச்செழுத்தைப்போல இங்கிலீஷிலோ, தமிழிலோ எழுதவேண்டும். சோல் ஏஜண்டுகள் தேவை விவரம் நேரில் எழுதி தெரிந்துகொள்ளவும்.

உ. கா. நாகூர்மீரா அன் பிரதர்,
7-வது தெரு, ஏர்வாடி போஸ்டு,
திருநெல்வேலி ஜில்லா (தென்னிந்தியா.)

(41)

## நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்

(1919-ல் பம்பாயில் ஸ்தாபிக்கப்பட்டது)

சேர்மன்:—

சர்: டோராப் ஜே. டாட்டா Kt.

மூலதனம்:

| | | |
|---|---|---|
| அனுமதிக்கப்பட்ட மூலதனம் | ... ரூ. | 6,00,00,000. |
| பதிவு செய்யப்பெற்ற ,, | ... ரூ. | 3,56,05,275. |
| வசூலான ,, | ... ரூ. | 71,21,055. |

இதைப்பற்றி 1929 ஜூன் மாதம் வெளிவந்த "இந்தியன் இன்ஷியூரன்ஸ்" பத்திரிகை பின் வருமாறு கூறுகிறது:—"நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி இந்தியாவிலே மிகவும் பெரிய ஜெனரல் இன்ஷியூரன்ஸ் கம்பெனியென்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. மூலதனத்தைக் கவனித்தால் அது உலகத்திலுள்ள பெரிய இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளில் ஒன்றென்று கூறிக்கொள்ள அதற்கு உரிமையுண்டு."

ஏஜெண்டுகள் இல்லாத இடங்களில் உயிர், நெருப்பு, மேரைன், மோட்டார்கார், விபத்து முதலிய பலவித அஷ்யூரன்ஸ்களுக்கும் ஏஜென்சிகள் கிடைக்கும்.

பிராஞ்சு மானேஜர்,
4, முதல் லேன்பீச், சென்னை.

(28)

இதுவரையில் வெளிவராத தமிழ் புஸ்தகம்

"மோட்டார்கார் யந்திர சாஸ்திரமும் அதன் அநுபோகப் பயிற்சிமுறையும்"



விலை ரூபா 1—8—0

(தபால் சார்ஜ் வேறு)

(1916-ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது)

அன்னிய நாட்டார் முழு பணம் அனுப்பவேண்டும் தவிர, 3 மாதத்தில் மோட்டார் டிரைவிங் அன்றி மெக்கானிஸம் கற்றுச் சொடுத்து கவர்ன்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக் கொடுக்கப்படும்.

தென் இந்தியா மோட்டார் இஞ்ஜினீரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர், சென்னை.

(11)

## நிமிஷக்கணக்கில் குணமடைவதை விட்டு ஏன் கவலைப்படுகிறேங்?

அபூர்வ சிகிச்சை! இதை—சாதனைசெய் ஆச்சரிய நிவர்த்தி!!

## சுவாச காச நிவாரணி.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாச காச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சீதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, கஷ்டசுவாசம் மூக்கடைப்பு தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, கரகரப்பு, எரிச்சல், வலி, புண் முதலியவற்றையும், சாதாரண ஜலதோஷம் தும்மல், பீனிசம், வாயிலும் நாசியிலும் நீர்வடிதல், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் நமது ஆஸ்தமா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்தி செய்வதுடன் இரத்தத்தை சுத்தி செய்தும் கெட்டியான கபத்தை இளகச்செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய்ப்பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும் இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது.

48 நாள் ஒரு மண்டலம் உபயோகிக்கக்கூடிய டின் 1க்கு ரூ. 1—4.

தபால் கூலி அணா. 4. ஒரு டஜன் டின் விலை ரூ 9-0-0.

6 டின் விலை ரூ. 5-4-0. 3 டின் விலை ரூ. 3-0-0

F. M. S. முதலியவர்களுக்கு முன் பணம் ரூ. 2-8-0.

இல்லாத ஆர்டர்களை கவனிக்கப்படமாட்டாது.

புரொப்ரைட்டர், திருநாவக்கரசு மெடிகல் ஹால்,
அங்காளம்மன் கோவில் தெருவு, செவ்வாய்ப்பேட்டை, சேலம். S.

## முன்னேற்றம்

இது சுயமரியாதைக் கொள்கையை ஆயுதமாகக் கொண்டு சிங்கப்பூரிலிருந்து வெளியாகும் ஒரு தமிழ் வாரப் பத்திரிகை.

இதன் ஆசிரியர்-வே.சி.நாராயணசாமி

இதன் சந்தா ரூ. 4-0-0 அல்லது $ 2—25.

விலாசம்:—மானேஜர்,
"முன்னேற்றம்"
(எப்) 155, சிலிகிரோட், சிங்கப்பூர்.

## எங்கு சரசமான விலை! நயம் சரக்கு?

அயல் நாட்டிலிருந்து இவண் வந்து விற்பதற்கு சரியான பெங்கால், கலர், சில்வர், மேச்சஸ்கள், மாஷிக்வயர் அடியிற் கண்டவர்களிடம் தேவையானது கிடைக்கும்.

காரியஸ்தர், தீப்பெட்டிகம்பெனி,
பாலக்காடு, (தென்மலபார்.)

(37)

# வேற்றுமை விருக்ஷம் வேரோடு வீழ்க!

ரோஜா முத்தையா

அதி அதிசயம்! மிக ஆச்சரியம்!!


மாதம் 100 ரூபா முதல்

500 ரூபா வரை

சம்பாதிக்கக்கூடிய

சிறிய மெஷின்

## தையல் யந்திரம்



இது சாதாரண மெஷின்களைப் போலவே மேஜையின் பேரில் முடுக்கி, தையல் வேலை செய்பவர்களும், பெண்களும், குழந்தைகளும், எல்லா தையல் வேலையும், சட்டைகள், கோட்டுகள், துணிகள் முதலியவை தைக்கலாம் இதைச்சேர்ந்த சாமான்களுடன் இதற்குரிய பெட்டியில் பாக்கிங் செய்தனுப்பப்படும்.

5 வருட காரண்டியுள்ளது.

விலை ரு. 3—14—0.

பினங், சிங்கப்பூர் முதலிய மலாய் நாடுகளுக்கு பாக்கிங் ரூ. 5—4—0 உள்பட முன் பணம் அனுப்பவேண்டும்.

லக்ஷ்மி டிரேட்ஸ் கம்பெனி,

(30) தங்கசாலை, மதராஸ்.

---

## ஆனந்தபோதினி

இனிய தமிழில் வெளிவரும் மாதப் பத்திரிகை; தமிழ் நாட்டில் வெளிவரும் மாதச் சஞ்சிகைகளில் முதன்மை பெற்றது; 20,000 சந்தாதாரர்களையுடையது; கல்வியிற் சிறந்தோர் பலரால் எழுதப்பட்டு வரும் உயர்ந்த வியாசங்களைக் கொண்டு வெளிவருவது; எம்மதத்தார்க்கும் சம்மதமான பொதுத் தன்மைகளைப் போதிப்பது; 64-பக்கங்கொண்டது; முகப்பு ஆப்டோன் படத்துடனும், மற்றும் பல படங்களுடனும் வெளிவருவது; குறித்த தேதி தவறாமல் வெளியாகிப் பலர்க்கும் ஆனந்தத்தை யூட்டி வருவது; மிகக் குறைந்த சந்தாத் தொகையுள்ளது.

மாதிரி காபி இனாம்.

வருட சந்தா தபால்கூலி யுள்பட

உள்நாடுகளுக்கு ரூபா 1—0—0

வெளிநாடுகளுக்கு ,, 1—4—0

ஆனந்தபோதினி ஆபீஸ்,

தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

(5)

---

வெளியாகி விட்டது! வெளியாகி விட்டது!

## சாமிகளின் அடிமைகள்

சாமிகளின் அடிமைகள் என்னும் மொழி பெயர்ப்பு நூல் இப்பொழுது விற்பனைக்குத் தயாராய் உள்ளது. இதன் விலை 1-8-0 ரூபாய் என்று நாம் குறிப்பிட்டிருந்தோம். ஆனால் பலர் இவ்விலையைச் சிறிது குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதின் பேரில் நாம் பிரதி யொன்றை 12 அணாவிற்கே கொடுப்பதாக உத்தேசித்துள்ளோம்.

விலை ரூபாய் 0—12—0.

திராவிடன் புத்தகாலயம்,

14, மௌண்ட் ரோட், சென்னை.

தனிப்பிரதி விரும்புவோர் 14-அணா காலணா ஸ்டாம்பு அனுப்பவும்.

---

## குடி அரசு புத்தகாலயம்

வேதப்புரட்டை வெளியாக்கும்

| | | |
|---|---|---|
| ஞானசூரியன் 2-ம் பதிப்பு | ... | 0—8—0 |
| இராமாயணத்தின் ஆபாசம் பாலகாண்டம் | | 0—4—0 |
| சுயமரியாதைப் பாடல்கள். | ... | 0—2—0 |
| இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு. | ... | 0—2—0 |
| சுயமரியாதைத் தாலாட்டு | ... | 0—2—0 |
| சோதிடப்புரட்டு | ... | 0—2—0 |
| சாமிகளின் அடிமைகள் | ... | 0-12—0 |

8 அணாவுக்கு குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. 5 ரூபாய்க்கு மேற்பட்ட ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணமனுப்பவேண்டும்.

விலாசம்:—

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,

(எ) 14, மவுண்ட்ரோட், மதராஸ்

---

## கர்ப்பாசய ரோக நிவாரணி

"சௌரியா"வின் அபூர்வ சக்தியைக்கண்ட பெண்மணிகள் இதைஸ்திரீகளுக்கோர் வரப்பிரசாதினி என்றும், அதி சிரேஷ்டமான ஔஷதமென்றும், விலையில்லா ஆபரணமென்றும் சொல்லுகிறார்கள். ருதுசூலை, அகால பஹிஷ்டை, ருதுசிராவம், பஹிஷ்டை தடைபட்டுப்போவது, வெள் ரத்தப் போக்கு, கர்ப்பஸ்ராவம், அகால பிரசவம், கருப்பை நழுவி விடுதல், ருதுசூலையினால் வயிற்றில் உண்டாகும் கட்டி, மூர்ச்சை, கணைச்சூடு, சந்தானமில்லாமை, மலபந்தம், இருமல், உப்பசம் முதலிய சகல ரோகங்களும் இந்த "சௌரியா"வின் உபயோகத்தினால் சூரியனைக் கண்ட பனிபோல் நிவர்த்தியாகிவிடும்.

புட்டி 1-க்கு விலை ரூ. 3. பாக்கிங் தபால் செலவு வேறு.

கேட்லாக் இனாம், ஏஜண்டுகள் தேவை.

சங்கராம் மெடிகல் ஹால்,

(7) தந்தி விலாசம் "சௌரியா" சேலம்.


---

## படக்காட்சி

ரூ. 20 ஆகயிருந்தது ரூ. 5-8-0 தான்

அமெரிக்கன் சிறிய சினிமா மெஷின்

(நெ. 2. சிறிய சைஸ், எலெக்ட்ரிக் விளக்கு பாட்டெரியுடன்)



வெகு அதிசயமான இந்த மெஷினினால் பொதுப் படக்காட்சிச் சாலையில் அனுபவிக்கும் ஆனந்தத்தை உங்கள் வீட்டிலேயே அடையலாம். நர்த்தனமாடுவது, தீரச்செயல்கள், மோட்டார், ரயில், ஏரோப்ளேன் விபத்துகள், பாரிஸ் மாதர் லீலைகள், மலைகள், ஆறுகள் முதலிய காட்சிகள் ஓடுவதும் அசைவதும் மிகத் தெளிவாகத் தெரியும். பிலிம் டேப் ஒரு கஜங்கூட அனுப்பப்படும். உபயோகிக்கும் முறையும் மெஷினுடன் உண்டு.

மெஷின் குறைந்த (அசல்)

| | | | |
|---|---|---|---|
| விலை ரூ. | 5 | 8 | 0 |
| தனி பிலிம் டேப் 1 கஜம் | 0 | 6 | 0 |
| 3 கஜங்கள் | 1 | 0 | 0 |

முந்துங்கள்!

லக்ஷ்மி ட்ரேட்ஸ் கம்பெனி,

173, தங்கசாலை வீதி, சென்னை

(30)

---

## குமரன்

காரைக்குடி தனவணிக நாட்டில் பிராமணரல்லாதார் முன்னேற்றத்துக்காக உழைக்கும் சிறந்த செந்தமிழ்ப்பத்திரிகை.

அடிமை வாழ்வைப் போக்கிக் குருட்டு நம்பிக்கையை நீக்கி அறிவுச் சுடர் கொளுத்தும் கட்டுரைகளைத் தாங்கி வெளிவருகின்றது.

வருடச் சந்தா விவரம்:—

வாரப்பதிப்பு ரூ. 5—0—0

மாதப்பதிப்பு ரூ. 1—8—0

மானேஜர் குமரன், காரைக்குடி.

எப்)

---

## Beauty For Ladies !

## பெண்களுக்கு

அழகான புடவை! உயர்ந்த மல்லில் பச்சை, புளூ, வயலெட், கருப்பு, மெரூன், ஆரஞ்சு, ரோஸ், ஸ்கை கலர்கள். கரைகளும் முந்திக்கும் பூவேலையினமுள்ள அற்புதமான புடவை.

18 முழம் × $2\frac{1}{2}$ அகலம் ரூ. 4-6.

15 முழம் × $2\frac{1}{2}$ அகலம் ரூ. 3-12.

The Madura Oriental Trading Co.,

Laxmi, Cloth Store, MADURA,

(34)

திரு. ஜே. எஸ். கண்ணப்பர் அவர்களால் சென்னை "திராவிடன்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.